உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 207 ஆனி 07ஆம் நாள் வியாழக்கிழமை 21 ஜூன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

இரும்புக் கம்பியால் மாணவியை தாக்கிய அதிபர்
தென்மராட்சியில் சம்பவம்
(விரிவு பக்:5)

ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து
அமெ. வெளியேற்றம்
அரசுக்குச் சாதகம்

அழுத்தம் குறையும் என்கிறார் அமைச்சரவை இணைப்பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 21

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறுவது இலங்கைக்குச் சாதகமாக அமையும். இலங்கை மீதான பன்னாட்டு அழுத்தமும் குறைவடையும். இது அரசுக்குப் பெரும் மகிழ்ச்சியாகும். இவ்வாறு இலங்கை அரசு அறிவித்துள்ளது.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான >> 06

வெளியேறினாலும் அழுத்தம் தொடரும்
இலங்கையின் உயர்மட்டத்தை சந்தித்து அமெ. தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறினாலும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரங்களில் இலங்கை மீது அமெரிக்காவின் அழுத்தம் தொடரும் என்று இலங் >> 23

காயமடைந்தவரை கூட்டிச் சென்றவர் ஏக்கத்தில் சாவு
அரியாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

அரியாலையில் மாமரத்தில் இருந்து வீழ்ந்தவரை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்றவர் ஏக்கத்தில் >> 24

போதிய வளங்கள் இல்லாததால் நிர்ப்பந்திக்க முடியவில்லையாம்!
பொறுப்புக் கூறல் தோல்விக்குச் சாக்குப் போக்குச் சொல்கிறது ஐ.நா.
(விரிவு - பக் :08)

மல்லாகம் துப்பாக்கி சூட்டின் பின்னர்
போராட்டம் நடத்தியவரை கைது செய்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 21

மல்லாகத்தில் கடந்தஞாயிற்றுக் கிழமை இரவு பொலிஸாரால் இளைஞன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பின்னர், வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தியவரை தெல்லிப்பழைப் >> 25

கடலட்டை பிடிக்கச் சென்றோரை மடக்கிப் பிடித்த இளைஞர்கள்
கட்டைக்காட்டில் நேற்றிரவு சம்பவம் >> 25

தவறான முடிவெடுத்த தாயும் 3 பிள்ளைகளும் அதிதீவிர சிகிச்சையில்
வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 21

தாயும் பிள்ளைகளுமாக 4 பேர் தவறான முடிவெடுத்து உயிருக்கு ஆபத்தான நிலையில் வவுனியா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதி >> 06

கூட்டமைப்பு மாற்று வழிகளில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்
பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் பேச்சு நடத்த முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறுவது எமக்குப் பாதிப்பானது. இருப்பினும், அடுத்த கட்டத் தலைமைத்துவம் வழங்கிய, உறுதியான தலைமைத்துவம் வழங்கக் கூடிய தரப்புக்களுடன் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். அமெரிக்கா உறுப்புரிமையிலிருந்து வெளியேறினாலும், வெளியிலிருந்து கையாளக் கூடிய வகையில் அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் பேச்சு நடத்துவோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில், >> 24

எம்மை அரவணைத்து நடக்கும் முதலீட்டாளர்களே வேண்டும்
வடக்கு முதல்வர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களின் அமைதியான வாழ்க்கையையும் - சூழலையும் பறிகொடுத்த எத்தனையோ நாடுகளைப் பார்த்தவன் நான். பணமே பரமன் என்றொழுகும் பலரைச் சந்தித்தவன். அருமருந்தன்ன எமது >> 06

திறந்து வைக்கப்பட்ட பாலம்

மாகாண சபைத் தேர்தல் எப்போது?
அரசுக்குள் கருத்து முரண்பாடு

கொழும்பு, ஜூன் 21

மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறும் என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன நேற்றுத் தெரிவித்தார். இதேவேளை இந்த ஆண் >> 24

ஞானசாரருக்குப் பொது மன்னிப்பு அரசு மகாநாயக்கருடன் ஆராய்வு
அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்குவது சம்பந்தமாக அரசு மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடி வருகின்றது என்று அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். >> 24

ஊரெழுப் பெண் கொழும்பில் கழுத்தறுத்து கொலை
>> 06

எல்லை மீறிய ஆசிரியர், அதிபர் முரண்பாடு
பெற்றோர் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

காரைநகரில் பாடசாலையில் பதில் கடமை புரியும் அதிபர் ஒருவர், பாடசாலை ஆசிரியரின் கையைப் பிடித்து >> 06

முள்ளிவாய்க்காலில் புதையல்தோண்டிய வான் படையினர் வசமாகச் சிக்கினர்

முல்லைத்தீவு, ஜூன் 21

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந் >> 24

அரச தலைவரின் எதிர்ப்புக்கு அடிபணிந்தது அமைச்சரவை
புலிகளுடன் தொடர்புடையோரை நீக்கி ஏனையோருக்கு இழப்பீடு வழங்க அனுமதி

கொழும்பு, ஜூன் 21

புலிகளின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். இதனையடுத்து, புலிகளுடன் தொடர்புடைய குடும்பங்களை நீக்கிவிட்டு >> 06

தாயை நிரந்தரமாக இழந்து விட்டோம் தந்தையுடனாவது வாழ அனுமதியுங்கள்
ஆனந்த சுதாகரின் பிள்ளைகள் மைத்திரியிடம் மீண்டும் மன்றாட்டம்
>> 24

பெண்கள், சிறுவர் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் பதிவு

மட்டக்களப்பு மாவட்ட செயலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன்21

பெண்கள் சிறுவர்கள் தொடர்பில் 2017இல் 2324 முறைப்பாடுகளும்2018இல்இதுவரையில்ஆயிரத்து 48 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இது அதிகமான எண்ணிக்கையாகும். எனவே இது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்திப் பணியாற்ற வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின்அனுசரனையில்மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கெதிரான பிரதிபலிப்பும் தடுத்தலும் தொடர்புப் பொறிமுறையின் செயற்படுத்தல் தொடர்பானகூட்டம்நேற்றுமுன்தினம்நடைபெற்றது.

இதன்போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது:

"சிறுவர்களும் பெண்களும் பாதுகாப்பற்ற வகுப்பினராக இந்த மாவட்டத்தில் மாத்திரமல்லஇலங்கையிலேஇனங்காணப்பட்டுள்ளனர். அந்த அடிப்படையில் தான் அரசும் பெண்களுக்கும் சிறுவர்களுக்குமான போதியபாதுகாப்பினையும்அதுதொடர்பான ஆதரவினையும் வழங்குவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த அடிப்படையில் இங்கே இருக்கின்ற உத்தியோகத்தரகள்பிரதேசசெயலாளர்கள், அதே போன்று பணிகள் அமைப்புகளின் பிரதிநிதிகள் இவர்களுக்குத் தேவையான உதவிகளைச்செய்துவருகின்றார்கள். இருந்தாலும் 2017ஆம் ஆண்டு 2324 பெண்கள்

சிறுவர்தொடர்பானமுறைப்பாடுகள்கிடைக்கப் பெற்றுள்ளன. அதே போல 2018 ல் இது வரையில் 1048 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அந்த அடிப்படையில் பார்த்தால் மிகக் கூடுதலாகவன்முறைகள்பதிவாகியிருப்பதனைக் காணமுடிகிறது. வேறு வேறு வகையான வன்முறைகளாகக் காணப்பட்டாலும் கூட அதுதொடர்பாகக்கூடுதலானகவனம்எடுத்து அவற்றைச்செயற்படுத்தவேண்டியதேவை எங்கள் மத்தியில் சுமத்தப்பட்டிருக்கிறது.

இந்தநிலையில்எங்களுடையமாவட்டத்தில் பெண்கள் சிறுவர் தொடர்பான கூடுதலான கவனத்தினை எடுத்துச் செயற்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் இருக்கின்ற பெண்கள் சிறுவர் தொடர்பான பிரச்சினைகளை இனங்காண்பதுடன், அவற்றுக்கானதீர்வைக் காண்பதில் முக்கியப்படுத்திக் கலந்துரையாடித் திட்டமிட்ட அடிப்படையில் எவ்வாறான வன்முறைகள், ஆபத்தான நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்கான திட்டங்களைத் தயாரித்து வெற்றிகரமாக அமைக்கவேண்டும்.

அமைச்சின்செயலாளர்மாவட்டத்தில்உள்ள பெண்கள் சிறுவர் தொடர்பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார். அத்துடன், மாவட்டத்திலிருக்கின்றமிகவும்வறியநிலையில் உள்ள கிராமம் ஒன்றினை இனங்கண்டு திட்டம் ஒன்றினைச் செயற்படுத்துவதற்கு உடன் பட்டிருக்கிறார். அதன் மூலம் முன்னேற்றகரமான நிலையொன்றினை உருவாக்கமுடியும்-என்றார். (ற-ரி5)

தமிழர் கலாசார உடையுடன் பிரான்ஸ்நாட்டுப்பெண்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்.21

பிரான்ஸ்பல்கலைக்கழகபொறியியல்பீட மாணவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பல மனிதநேயப்பணிகளில்ஈடுபட்டனர்.

ஐ.ஓ.எஸ்.எப்என்னும்மனிதநேயஅமைப்பைச் சேர்ந்தவர்களே இந்தச் சேவையில் ஈடுபட்டனர். இதில் கலந்து கொண்ட பிரான்ஸ்நாட்டுப்பெண்கள்தமிழர்கலாச்சார ஆடைகள் அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்கள்நேற்றுஉள்ளூராட்சிமன்றங்களின் செயற்பாடு மற்றும் நிர்வாகமுறைமைகள் போன்றவற்றை அறிவதற்காக வவுனியா பிரதேச செயலகத்துக்குச் சென்றிருந்தனர்.

வவுனியாபிரதேசசெயலளர்கா.உதயராசாவால்உள்ளூராட்சிமன்றங்களின்செயற்பாடுகள் மற்றும் பிரதேச செயலக செயற்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டிருந்தது. (ற.110, ரி4)

கொள்ளையடித்த இளைஞர்கள் மடக்கிப்பிடிப்பு

கொழும்பு,ஜூன்.21

பதுளை தெமோதர பாலத்திற்கு அருகில் ஸ்கொட்லாந்துநாட்டைச்சேர்ந்தஇருபெண்களின் பணப்பையை இளைஞர்கள் குழுவொன்று கொள்ளையடித்துள்ளது.

இந்தஇருபெண்களின்பைகளிலும்56ஆயிரம் ரூபாவும் மற்றும் 8 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா, கமராக்கள் என்பன இருந்தன எனக் கூறப்பட்டது.

இது தொடர்பில் களனியைச் சேர்ந்த 20, 21 வயதுடையநான்குபேர்கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

இளைஞனின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஜூன். 21

மட்டக்களப்பு ஆயித்தியமலை எனும் இடத்திலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுப பொலிஸாரால் மீட்கப்பட்டது. ஆயித்தியமலை கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே சடலமாகமீட்கப்பட்டார்.

இவர்கடந்தமூன்றுவருடங்களாகஉளநலப் பாதிப்பிற்குள்ளாகிய நிலையில் சிகிச்சைபெற்றுவந்தவர்என்றுகூறப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற.ரி4)

சிறுமி மீது துர்நடத்தை இருவருக்கு 10 ஆண்டுகள் சிறை

கொழும்பு,ஜூன் 21

சிறுமியை கடத்திச் சென்று துர்நடத்தைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில், குற்றவாளிகள் என இனங்காணப்பட்ட இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தலா 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. கடந்த 2002 ஆம் ஆண்டு மொனராகலை புத்தல பிரதேசத்தில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பில் 37 மற்றும் 40 வயதான இருவருக்கு எதிராகசட்டமாஅதிபர்கொழும்பு மேல்நீதிமன்றத்தில்குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

வழக்கின் தீர்ப்பை நேற்று வழங்கிய நீதிபதி சம்பத் அபயகோன் குற்றவாளிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தலா ஒரு இலஞ்சம் ரூபா இழப்பீட்டை வழங்க வேண்டும் எனவும் குற்றவாளிகளுக்கு உத்தரவிட்டார்.

வழக்கில் மூன்றாவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த சந்தேகநபரை வழக்கில் இருந்து முற்றாக விடுவிப்பதாகவும் நீதிபதி அறிவித்துள்ளார். (ற.ரி2)

யோகா நடைபவனி

திருகோணமலை,ஜூன். 21

திருகோணமலையில்பன்னாட்டுயோகாதினத்தைமுன்னிட்டுயோகாநடைபவனியொன்று நேற்று நடைப்பெற்றது. இந்த நடைபவனி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம், கிழக்குமாகாணசபை என்பவற்றின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

கிழக்குமாகாணசபைக்குமுன்னால்ஆரம்பமான இந்த நடைபவனி கண்டி பிரதான வீதியினூடாகபிரதானபேருந்துதரிப்பிடத்துக்குச் சென்று மீண்டும் அந்த வழியே திருகோணமலைகடற்கரையைச்சென்றடைந்தது. இதில் பல்கலைக்கழகத்தின் வளாக முதல்வர் வீ.கனகசிங்கம், கிழக்குமாகாணசபைக்குட்பட்டதிணைக்களங்களைச்சேர்ந்தஉயரதிகாரிகள்மற்றும்சித்தமருத்துவபீட மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற.ரி4)

வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை விசாலாட்சி விஸ்வநாதர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. (ற.ரி4,40)

வடக்கு மக்கள் மிகவும் நல்லவர்கள்

ஆளுநர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடபகுதி மக்கள் மிகவும் நல்லவர்கள்மற்றவர்களைமதிக்கும் பண்பு கொண்டவர்கள். இவ் வாறு வடக்கு ஆளுநர் ரெஜி னோல்ட் குரே தெரி வித்துள்ளார்.

களுத்துறைமாவட்டமூத்தபொலிஸ்பிரஜைகள் குழு சிறப்புத் தேவையுடைய இருவருக்கு அதிநவீன சக்கர நாற்காலிகள் இரண்டை வடக்கு ஆளுநரிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

களுத்துறை மாவட்டத்திலிருந்து மூத்த பொலிஸ் பிரஜைகள் குழுவினர் இவ்வாறான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பயணத்தை மேற்கொண்டிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

வடபகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக,தென்னிலங்கை மக்கள் உங்களைப் போன்று இயன்றளவு உதவிகளை செய்ய முன்வர வேண்டும்.

வடபகுதி மக்கள் மிகவும் நல்லவர்கள் மற்றவர்களை மதிக்கும் பண்பு கொண்டவர்கள். அவர்களின் நல்ல உள்ளங்களைப் புரிந்து கொண்டு இதனைநீங்கள்தென்னிலங்கை களுத்துறைமக்களுக்குத்தெரிவிக்கவேண்டும்.அதன்ஊடாகவேபலபிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொள்ள முடியும்.

நான் இங்குயுத்தம்நடைபெற்றபோதும்வந்திருக்கின்றேன். தற்போது ஆளுநராக இங்கே பணி புரிகின்றேன். எனக்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம்போன்றமும்மொழிகளும் தெரிந்ததன் காரணமாக இங்குள்ள மக்களை இலகுவில் நான் புரிந்து கொள்ள முடிந்தது. என்னைப்போன்று தென்னிலங்கை மக்கள் தமிழ்மொழியையும்வடக்குத்தமிழ்மக்கள் சிங்களத்தையும்தெரிந்து கொள்வதன்மூலம்மக்கள்தமதுபிரச்சினைகளைத்தமக்குள் தீர்த்துக்கொள்ளும்அரிய சந்தர்ப்பம் உருவாகும்.

களுத்துறை மாவட்ட மக்கள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டபோதுவடபகுதிமக்கள்15பார வூர்திகளில் அந்த மக்களுக்கான உதவிகளை நேரடியாகவந்துவழங்கியதை இந்த சந்தர்ப்பத்தில்நான்நினைவுபடுத்தவிரும்புகின்றேன்.

இதேபோன்றுஒருவருக்குஒருவர்உறவாக இருக்கும் சந்தர்ப்பங்களை நாங்கள் உருவாக்கிக்கொள்ளவேண்டும்என உங்களை அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

ஆளுநரிடம்கையளிக்கப்பட்டநாற்காலிகள் ஆளுநரின்ஆலோசனைக்குஅமையஆளுநரின் உதவிச் செயலர் ஏ.எக்ஸ் .செல்வநாயகம், ஆளுநரின் மக்கள் தொடர்பு அதிகாரி நிஸாந்த அல்விஷ் ஆகியோர் பயனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக எடுத்துச் சென்றுநேற்றுகையளித்தனர். (ற.ரி2.)

கையூட்டல் விவகாரம் உத்தியோகஸ்தர் கைது

திருகோணமலை, ஜூன் 21

கந்தளாய் உதவி காணி ஆணையாளர் அலுவலகத்தில்கடமையாற்றும்குடியேற்ற உத்தியோகஸ்தர் ஒருவரை இலஞ்ச ஊழல்கள்ஆணைக்குழுவின்அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அக்போபுர 87 ஆம் கட்டை பகுதியிலுள்ள காணியொன்றுக்குகாணிஉரிமம்பெற்றுத் தருவதாகக் கூறி 30 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்றுக்கொள்ளும் போதே அவர்கைதுசெய்யப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

வயோதிபர் ஒருவருக்கு காணி உரிமம் வழங்குவதாகக் கூறி 30 ஆயிரம் ரூபா பணத்தை கேட்டிருந்த நிலையில் அவரது உறவினரொருவரினால் இலஞ்ச ஊழல்கள்ஆணைக்குழுவுக்குசெய்யப்பட்டிருந்த முறைப்பாட்டையடுத்துநேற்றுஅவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம்தொடர்பில், மேலதிகவிசாரணைகளை இலஞ்சஊழல்கள்ஆணைக்குழுவினர்முன்னெடுத்துவருகின்றனர். (ற.ரி2)

கஞ்சாத் தோட்டம் பயிரிட்டவர் கைது

கொழும்பு,ஜூன் 21

கஞ்சாத் தோட்டம் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக்கைது செய்யப்பட்டார்.

கொஸ்லந்த, உனகந்த வனப்பகுதியில் பொலிஸார்மேற்கொண்டசோதனையின் போதுசட்டவிரோதமாகபயிரிடப்பட்டிருந்த கஞ்சாத்தோட்டம்சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போதே சந்தேகநபரும் கைது செய்யப்பட்டதாகப்பொலிஸார்தெரிவித்தனர்.

வெல்லவாய, ஊவ குடா ஓய, பலஹருவ பகுதியைசேர்ந்த20வயதுடையஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சாத் தோட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டகஞ்சாசெடிகள் இருந்ததாகவும், அவை சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியுடையவை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம்தொடர்பில், பொலிஸார்மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

வேலை தேடும் பட்டதாரிகள் யாழ், மன்னாரில் கவனவீர்ப்பு

மன்னார், ஜூன் 21

வேலை தேடும் பட்டதாரிகளால் நேற்று யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

வேலை தேடும் பட்டதாரிகளுக்கானநேர்முகத்தேர்வுக்குச் சென்ற பட்டதாரிளுக்கு இன்னமும் புள்ளிகள் அறிவிக்கப்படாத நிலையில் அடுத்தகட்ட வேலை தேடும் பட்டதாரிகளுக்கான நேர்முக தேர்வுக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் முன்பாகக் கூடி வேலை தேடும் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

20 ஆயிரம் வேலை தேடும் பட்டதாரிகளுக்கு பயிற்சியுடன் கூடிய 20 ஆயிரம் ரூபா சம்பளத்துடன் வேலை வாய்ப்புத் தரப்படும் என்று கூறப்படுகின்றது. ஆனால் ஜூலை மாதம் 2 ஆம் திகதி 5 ஆயிரம் பேருக்கே நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்றும், ஏனைய 15 ஆயிரம் பேருக்கு மீண்டும் பதிவு மேற்கொண்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டே நியமனம் வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது. அதைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார்

மன்னார் மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் அவசர கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

புள்ளி அடிப்படையில் நியமனம் வழங்குவதை விடுத்து வருட அடிப்படையில் நியமனங்களை வழங்க வேண்டும் என்று மன்னார் மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கடந்த மாதம் மன்னார் மாவட்டத்துக்கு மட்டும் என்று பிரத்தியேகமாக 86 பட்டதாரிகளை உள்ளடக்கிய பெயர்ப் பட்டியல் ஒன்று அனுப்பப்பட்டிருக்கின்றது. பெயர்ப்பட்டியல் தொடர்பாக பொறுப்பான அதிகாரிகள் எங்களுக்கு எந்தவித அறிவித்தல்களும் வழங்கவில்லை. இந்தப் பெயர்ப் பட்டியல் பட்டதாரிகள் மத்தியில் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக அரசுக்கு அழுத்தம் வழங்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

மாவட்ட உதவி அரச அதிபரை சந்தித்து மன்னார் மாவட்ட வேலை தேடும் பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக கலந்துரையாடியனர்.

(ற-எ60.56.114)

லலித் மீதான வழக்கின் விசாரணைகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 21

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் பிரதான சந்தேகநபர் தப்பிச் செல்ல உதவினர் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக நடைபெற்ற வழக்கு விசாரணைகள் முடிவடைந் துள்ளன. நேற்று இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, தற்போது பிணை வழங்கப் பட்டுள்ள சந்தேகநபர் லலித் ஜெயசிங்க மன்றில் முன்னிலையானார். மற்றைய சந்தேகநபர் சிறிகஜன் தலைமறைவாகியுள்ளார்.

மன்றில் முன்னிலையான அரச சட்டத்தரணி வழக்கு விசாரணைகள் முற்றுப்பெற்று வழக்கின் கோவை தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று மன்றில் தெரிவித்தார். அதையடுத்து வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(ற-26)

விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி, ஜூன் 21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படவுள்ள இளம் கண்டுபிடிப்பாளர் போட்டி தொடர்பான விழிப்பு ணர்வுக் கருத்தரங்கு நேற்று இடம்பெற்றது. வலய கேட்போர் கூடத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தர விசம் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் வலயப் பாடசாலைகளிலிருந்து தலா ஒரு விஞ்ஞான பாட ஆசிரியர் மற்றும் 12 வயதுக்கும், 19 வயதுக்கும்

இடைப்பட்ட பிரிவில் உள்ளடங்கும் புத்தாக்கத் திறன்மிக்க தலா இரு மாணவர்களும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ற.ரி2,9)

விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்

திருமஞ்சத்தில் தீர்வுகொண்டு வருகிறாள்

திரிசூலம்	வாளேந்தி	திருமஞ்சமேறி	வருகிறாள்
தீமைகள்	கொய்திடவே	திருமஞ்சமேறி	வருகிறாள்
அருளுருவாய்	எழுந்தவள்	திருமஞ்சமேறி	வருகிறாள்
அல்லல்களை	வித்திடவே	திருமஞ்சமேறி	வருகிறாள்
சங்கிலியன்	ஆண்டமண்ணில்	திருமஞ்சமேறி	வருகிறாள்
சாதனைகள்	படைத்தவள்	திருமஞ்சமேறி	வருகிறாள்
கும்குமத்து	நாயகியாய்	திருமஞ்சமேறி	வருகிறாள்
குவலயத்தை	காவல்செய்ய	திருமஞ்சமேறி	வருகிறாள்

ஆக்கம் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

[இன்று (21.06.2018) வியாழக்கிழமை வன்னை வீரமாகாளியம்பாளின் 18 ஆம் திருவிழா] அன்னதானம் வழங்கப்படும்.

உரை நிகழ்ச்சியும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் இம்மாத உரைநிகழ்ச்சி, நூலககுவிமாடக் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

'வடமாகாண விளையாட்டுத்துறை கடந்த காலமும் நிகழ்காலமும்' என்னும் தலைப்பில், உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெறும். ஆர்வமுள்ளவர்களை நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு வாசகர் வட்டத்தினர் தெரிவித்துள்ளனர். (எ)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 21

கனடாவில் வசித்துவரும் முதுபெரும் எழுத்தாளரும், கலைஞருமான ஏழாலையூர் சோக்கல்லோ சண்முகநாதன் 1959 இல் எழுதி வெளியிட்ட 'கோமதியின் கணவன்' எனும் நூலானது மீள்பதிப்புச் செய்யப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஏழாலை முத்தமிழ் மன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் கலாநிதி ஆறு. திருமுருகன் நூலை வெளியிட்டு வைக்க வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் மற்றும் கலாநிதி ஆறு. திருமுருகன், கலைஞரின் நண்பர்கள், ஊரவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

குருதிக் கொடைநிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம், இளவாலை வடலியடைப்பு சனசமூக நிலையத்தில் இடம்பெற்றுவரும் பொலிஸ் நடமாடும் சேவையின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் குருதி வங்கிப் பொறுப்பதிகாரி மருத்துவர் ம. பிரதீபன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். அனேகமானவர்கள் கலந்து கொண்டு குருதிதானம் செய்தனர். (எ)



யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி பிள்ளையார் ஆலயத்தின் முதலாம் திருவிழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இரவுத் திருவிழாவின் போது சுவாமி வீதி உலாவரும் காட்சி.

கச்சாய் அ.த.க. பாடசாலை தரம் 1 சி தரத்துக்கு உயர்வு

தென்மராட்சி, ஜூன் 21

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வகை I சீ தரத்துக்கு உயர்த்தப்பட்டது. அதனையடுத்து அங்கு ஜி.சி.ஈ. உயர்தரக் கலைப் பிரிவுக்கான வகுப்புகளை ஆரம்பிக்கக் கல்வித் திணைக்களம் அனுமதிவழங்கியுள்ளது. இதுவரை காலமும் பாடசாலை வகை II ஆகவே இயங்கியது.

உயர்தர வகுப்பு ஆரம்ப நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. புதிய வகுப்பில் 15 மாணவர்கள் இணைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் கா. குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விரந்தினராக தென்மராட்சி வலயக்கல்லிப் பணிப்பாளர் சு. சுந்தரசிவமும் சிறப்பு விருந்தினராகப் பாடசாலையின் பழைய மாணவரான தா. சோதிலிங்கமும் கலந்து கொண்டனர்.

பெற்றோர்கள், பழைய மாணவர்களும் அதில் கலந்துகொண்டனர்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் வகை 1 சீ தர பாடசாலைகள் ஐந்து இயங்கின தற்போது அதன் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

கல்வி வலயத்தில் வகை I ஏபி தரத்தில் 6 கல்லூரிகளும் வகை I சீ தரத்தில் ஐந்து மகா வித்தியாலயங்களுடன் கச்சாய் அ.த.க. பாடசாலையுமாக 6 பாடசாலைகளும், வகை II தரத்தில் 20 பாடசாலைகளும் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (4-9)

வைத்தீஸ்வராவின் பரிசளிப்பு மற்றும் முத்தமிழ் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன். 21

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வும் முத்தமிழ் நிகழ்வும் பாடசாலை முதன்மை மண்டபத்தில் நேற்று நடைபெற்றன.

பாடசாலை அதிபர் வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான தொழில் நுட்ப பீடங்களின் முன்னாள் பீடாதிபதி கணித பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா மற்றும் யாழ். பல்கலைக்கழக மொழியல் துறை முன்னாள் தலைவர் திருமதி சற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன் மற்றும் யாழ் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க. ஜெயபாலசிங்கம் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக பழைய மாணவர் சங்க கனடாக்கிளைச் செயலாளர் ஸ்ரீரங்கநாயகி ஸ்ரீசத்குருநாதன் மற்றும் பழைய மாணவர் சங்க லண்டன் கிளை செ. இராமச்சந்திரன் மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் மு. ஜெயதீஸன் ஆகியோரும் கலந்து கொண்டனர். வரவேற்பு நடனத் தோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பரிசில் வழங்கும் வைபவத்தை முதன்மை விருந்தினர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (எ-113)

காணிகளை வளைத்துப்போட்ட

வனவளத் திணைக்களத்துக்கு எதிராக பூநகரியில் போராட்டம்

கிளிநொச்சி, ஜூன் 21

இடப்பெயர்வுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை வனவளத் திணைக்களத்தினர் தமக்குரியவை என்று

>> 06

யாழ்ப்பாணம் காரைநகர் வரவேற்பு வளைவின் முன்னிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்டபுழுதிப் புயல். (113)

கடும் காற்றால் மீன்பிடியை விட்டு கரை திரும்பினர் யாழ். மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடுமையான காற்றின் தாக்கத்தை அடுத்து மீன்பிடியைக் கைவிட்டு இடைநடுவில் கரை திரும்பினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாலையில் மீனவர்கள் சிலர் யாழ்ப்பாணக் குடாக் கடற்பகுதியில் படகுகள் மூலம் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்குச் சென்றனர். கடுமையான காற்றின் தாக்கத்தை அடுத்து மீனவர்கள் தமது மீன்பிடியைக் கைவிட்டு இடைநடுவில் கரை திரும்பினார்கள்.

சில நாள்களாக வீசும் கடுமையான காற்றால் குடாநாட்டு மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டு உள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர். (4,17)



தொற்றாநோய்கள் தொடர்பான மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகஸ்தர்களுக்கான தொற்றா நோய்கள் (நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், இருதய நோய், கண்பார்வை) தொடர்பான மருத்துவ முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கல்லூரியின் சுகாதாரக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் இடம்பெற்ற முகாமில் மருத்துவர் எஸ். யசீகரன் மற்றும் மருத்துவர் எஸ். தயாளினி ஆகியோருடன் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், தாதியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சேவை வழங்கினர். முகாமில் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு விவரணத் தொகுப்பு பல்லூடகக் கருவி மூலம் காட்சிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. (எ-114)

திருமுறை மனனப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 21

வண்ணை-சாந்தையர்மடம்ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவச்சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி தரம் 1, 2, 3, 4, பிரிவுகளுக்கு நடத்தப்படவுள்ளது. தரம்1, 2 பிரிவிற்கு "முத்தி நெறி அறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்" "பூசுவதும்வெண்ணீருபூண்பதுவும்பொங்கரவம்" ஆகிய இரு திருமுறைகளும், தரம் 3, 4 பிரிவிற்கு 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்' 'வான் ஆகி! மண் ஆகி! வளி ஆகி! ஒளி ஆகி!' ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டிஎதிர்வரும்ஜூலை முதலாம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் மதியம்2மணிக்குநடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பமுடிவுத்திகதி ஜூன் 23 ஆம் திகதியாகும்.

மேற்படிதிருமறை மனனப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் மாலை 3.30மணிதொடக்கம்6மணிவரைதொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்எனச்சைவசமய அபிவிருத்திக் கழகப் பரீட்சைச் செயலரும், சமயபிரசாரகருமானசு. சிறிகாந்தன்அறிவித்துள்ளார்.

தென்மராட்சிப்பிரதேசத்தில் 131 மலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன

பயனாளிகள் தெரிவு ஆரம்பம்

தென்மராட்சி, ஜூன் 21

தென்மராட்சி பிரதேசத்தில் சிறப்புத் தேவைக்குட்பட்டவர்கள் 21 பேர் உட்பட 131 பேருக்கு மலகூடம் அமைத்து வழங்கப்படவுள்ளன.

மீள்குடியமர்வு அமைச்சின் நிதி உதவியுடன் சுமார் தலா 55 ஆயிரம் ரூபா(54500) செலவில் 75 பேருக்கும் தலா ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 500 ரூபா செலவில் 25 சிறப்புத் தேவைக்குட்பட்டவர்களுக்கும் மலகூடம் அமைத்து வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளைவேள்ட்விஷன்லங்காநிறுவனறிவோல்செயற்றிட்டத்தின்கீழ்பிரதேசத்தைச் சேர்ந்த 31 பயனாளிகளுக்கும் மலகூடம் அமைத்து வழங்கப்படவுள்ளதெனப் பிரதேசசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மலகூடம் அமைப்பதற்கு சிறப்புத்தேவைக்குட்பட்டவர்கள் 25 உட்பட 100 பயனாளிகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்டச்செயலகத்தால்அறிவிக்கப்பட்டதையடுத்து60கிராமஅலுவலர்பிரிவுகளிலிருந்தும் பயனாளிகளை தெரிவு செய்யும் பணிகள் பிரதேச செயலகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது

பிரதேசத்தில் வாழும் சுமார் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு மலகூடம் அமைக்க வேண்டுமென பிரதேச செயலக அறிவித்தல் பலகையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (எ-9)

பருத்தித்துறையில் டெங்கு 60 பேருக்கும் மேல் பாதிப்பு

கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

வடமராட்சி, ஜூன் 21

பருத்தித்துறைநகரசபைப்பகுதியில்நகரம் உட்பட 4கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்கு தீவிரமாக உள்ளது. அதனால் 3 நாள்களாக டெங்கு ஒழிப்பு தீவிரப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கரையோரத்தை அண்டியுள்ள ஜே/403, ஜே 401, ஜே/404, ஜே/407 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த மாத ஆரம்பத்தில் டெங்கின் தாக்கம் இனங்காணப்பட்டது. குடாநாட்டில் எங்கும் இல்லாதவாறு டெங்கு அதிகரித்துஇதுவரை60பேர்டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளானார்கள். கடந்த வாரம் இதன் தாக்கம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது.

டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர், பருத்தித்துறை நகர சபை சுற்றுச் சூழல்பாதுகாப்புப் பிரிவினர்கடந்ததிங்கட்கிழமை தொடக்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். நகர சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குழு உழவுஇயந்திரங்கள், ஜே.சி.பி. வாகனங்கள் மூலம் கிராமங்களையும்கரையோரப்பகுதிகளையும்சுத்தம்செய்துவருகின்றனர்.

கிணறுகள், தண்ணீர்த்தொட்டிகளில்பெருமளவில் குடம்பிகள் காணப்பட்டுள்ளன. பொதுமக்கள் நுளம்புகள் பெருகாமல் பாதுகாத்துக் கொள்வதுடன் நுளம்பு வலைகளைப்பயன்படுத்துமாறும்பருத்தித்துறைச் சுகாதார மருத்துவ அதிகாரி பொதுமக்களைக்கோரியுள்ளார். (4,173)

மயிலிட்டி தெற்குத் துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலய சீரமைப்புக்குப் புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம், மயிலிட்டிதெற்குதுறட்டையிட்டிஞானவைரவர் ஆலய சீரமைப்புக்கான நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பல நூற்றாண்டு காலமாக கிராம மக்களுக்கு அருள்பாலித்துவந்த மயிலிட்டிதெற்கு (தென்மயிலை) கட்டுவன் சந்தி துறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயம் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து ஏப்ரல் 14ஆம் திகதி விடுவிக்கப்பட்டது.

ஆலயம் பூசை வழிபாடுகள் இன்றி உருக்குலைந்து காணப்படும் நிலையில் மீள புனர்நிர்மானம் செய்து, பூசை வழிபாடுகள் மேற்கொள்ளும் முகமாக புதிய நிர்வாக சபை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

கூட்டத்தில் நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. மதிப்புறு தலைவராக கனகசபை கணேசமூர்த்தியும் தலைவராககனகசபைதர்மநாயகமும்உபதலைவராகநேசபூபதி நாகராஜனும், செயலாளராக துரைச்சாமி கலியுகவரதனும் உபசெயலாளராகசெல்வநாயகம் நிரூஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும்நிர்வாக உறுப்பினர்களாகதம்பிராசாவேலாயுதம், பத்மினி சணேசமூர்த்தி, விக்னேஸ்வரன் ராஜன், சுப்பிரமணியம் சிவானந்தன், வேலாயுதம் வித்தியானந்தன், வேலாயுதம்நாகேந்திரம்ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். கூட்டத்தில்ஆலயத்தைமீளக் கட்டியெழுப்பதற்கான முக்கிய சிலமுடிவுகள் எடுக்கப்பட்டது. கூட்டம்இடம்பெற்றபின்னர்30வருடங்களின் பின்னர் ஆலயத்தில்பூசைவழிபாடுகளும்இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையில் போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் தி.தவரத்தினம் தலைமையில் இடம் பெறவுள்ளநிகழ்வில்'போதைப் பொருளுக்கு அடிமையாவதனால் ஏற்படும் பாதிப்புக்கள்' தொடர்பில் விளக்கமளிக்கப்படும் என்று அதிபர் தெரிவித்துள்ளார். (எ)

பாடசாலையில் திருட்டு

மருதங்கேணி, ஜூன் 21

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் அறை ஒன்றின் ஓடுகள் உடைத்து பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இரண்டாவதுதடவையாகஇந்தப்பாடசாலையில்திருட்டுஇடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த அறையில் பலவகையான முக்கியமான உபகரணங்கள், பொருள்கள் இருந்த போதிலும்அம்பிளிவயர்எனும் ஒலிபெருக்கி சாதனமே களவாடப்பட்டுள்ளது. திருட்டுத்தொடர்பாக பாடசாலை அதிபர் பளை பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடுசெய்துள்ளார். (எ-160)

யாழ்ப்பாணம், சங்கத்தானையில்நேற்றுமதியம்வீசியகடும் காற்றால் பனை மரம் முறிந்து மின்கம்பிகளின் மீதுவீழ்ந்ததால்மின்கம்பம்முறிந்தது. மின்தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால்பாதிப்புஏற்படவில்லைஎனத்தெரிவிக்கப்பட்டது. (எ-9)

முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணக் கோட்ட முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ் .தேவகுமாரன்தலைமையில்நடைபெறும்என்றுதெரிவிக்கப்பட்டது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பளார் வி. எஸ் மாணிக்கராஜாகலந்துசிறப்பிக்கவுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (7)

தீர்த்தத் திருவிழா

வடமராட்சி, ஜூன் 21

வடமராட்சிகூழாவடிபுலோலிகிழக்குஅருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது. தீர்த்தத் திருவிழா இன்று காலை இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் அலங்கார உற்சவமானது கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தீர்த்தத்திருவிழாவான இன்று மாலை 6 மணியளவில்ஆலயஇளைஞர்களால்நடத்தப்படும் மணவாளக்கோலம் இடம்பெற்று பூந்தண்டிகையில் வீரபத்திரப் பெருமான் வீதிஉலாவருவார்எனஆலயநிர்வாகசபையினர் தெரிவித்துள்ளனர். (எ)

இரும்புக் கம்பியால் மாணவியை தாக்கிய குற்றச்சாட்டில் அதிபருக்கு எதிராக பொலிஸில்முறைப்பாடு

யாழ்ப்பாணம் ஜூன் 21

பெற்றோர்கூட்டத்துக்குவருகைதராததால் மாணவியை மைதானத்தில் வைத்துஇரும்புக்கம்பியால்தாக்கியுள்ளார் அதிபர். அதிபரின் தாக்குதலால் மன உளைச்சலுக்கு உள்ளான மாணவி மோட்டார் சைக்கிளில் செல்லும் போது மயங்கி வீழுந்ததில் கை மற்றும் தாடை எலும்புகள் உடைந்த நிலையில்யாழ்ப்பாணம்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பாகபெற்றோர்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தென்மராட்சிபிரதேசத்தில்உள்ளபாடசாலையொன்றில்இடம்பெற்றுள்ளதெனத்தெரிவிக்கப்பட்டது.

பாடசாலையில் தரம் 9, 10 வகுப்பு மாணவர்களின் பெற்றோருக்கான கூட்டம்அதிபரால்ஒழுங்குசெய்யப்பட்டது. கூட்டத்துக்கு பெற்றோர் பலர் கலந்து கொள்ளவில்லை. பெற்றோர் கூட்டத்தில் கலந்து கொள்ளாததால் அந்த வகுப்புகளின் 30 வரையான மாணவர்கள் மைதானத்துக்கு வரவழைக்கப்பட்டு ஏனைய மாணவர்கள் முன்னிலையில் நையப்புடைக்கப்பட்டனர்.

அதில்ஒருமாணவிபாடசாலைமுடிந்துஉறவினருடன்மோட்டார்சைக்கிளில் செல்லும்போது மயங்கி வீழ்ந்ததில் கை முகம் மற்றும் கால் பகுதிகளில் காயமடைந்தார். பின்னர்சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு பரிசோதனைகளைமேற்கொண்டபோது கை மற்றும் தாடை எலும்புகளில் வெடிப்பு எற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸில்முறைப்பாடுமேற்கொள்வதற்கு முன்னர் அதிபர், வலயக் கல்வி பணிப்பாளர் ஆகியோரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போதும்இருவரும்பொறுப்பற்றவிதத்தில்பதில்வழங்கியதாகமுறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

பன்னாட்டு யோகா தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் பன்னாட்டுயோகா தின நிகழ்வு பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

எல்லைமீறி...

இழுத்துச் சென்று துரத்தியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகரிலுள்ள பாடசாலையின் அதிபர் அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார். மூப்பு அடிப்படையில் அங்குள்ள ஆசிரியர் ஒருவரே பதில் அதிபராகப் பணியாற்றி வருகின்றார். அதிபராகக் கடமையாற்றி வரும் ஆசிரியருக்கும், அங்கு பணியாற்றும் பெண் ஆசிரியருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில், அதிபராகக் கடமையாற்றி வரும் ஆசிரியர், பெண் ஆசிரியரின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று பாடசாலை கேற்றின் வெளியே விட்டுள்ளார். ஒருமையில் அந்தப் பெண் ஆசிரியரையும் பேசியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பெண் ஆசிரியர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (5)

அமெ...

ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

உலக வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையிலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறியுள்ளது. அமெரிக்காவின் தீர்மானத்தை ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நிக்கி ஹெலி தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2012ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா தொடர்ச்சியாகத் தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தது. இறுதியாக 2017ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானம் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இவ்வாறான தொரு பின்னணியிலேயே, அமெரிக்காவின் வெளியேற்றம் குறித்து, இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதாக தெரிவித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இரண்டு பிரேரணைகளை அமெரிக்கா கொண்டுவந்திருந்தது. முதலாவது பிரேரணையின் போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை எங்களுக்கு ஆதரவளித்தது. நாங்கள் வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் செயற்படாதமையால் பின்னர் அமெரிக்காவினால் இரண்டு பிரேரணைகள் மீளவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்டது.

பலம்மிக்க நாடுகள் இவ்வாறான பிரேரணைகளை கொண்டுவந்தபோது நாங்கள் பெரிய அழுத்தங்களுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பலம்மிக்க நாடான அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவில் இருந்து விலகத் தீர்மானித்தால் எங்களுக்கு இருந்தவந்த அழுத்தங்கள் பெரியளவில் குறைந்துவிடும். அந்த நன்மை எங்களுக்கு இருக்கின்றது.

மனித உரிமை தொடர்பாக பன்னாட்டு சாசனத்தில் நாங்கள் கைச்சாத்திட்டிருக்கும் விடயங்களை நிலைநாட்டுவதாக அன்று மகிந்த ராஜபக்ச வாக்குறுதி அளித்தார். அதன் பிரகாரமே அமெரிக்கா மனித உரிமைகள் சபையில் அந்த வாக்குறுதிகளை முன்வைத்து முதலாவது பிரேரணையை நிறைவேற்றி எங்களுக்கு அனுப்பிவைத்திருந்தது.

அந்த வாக்குறுதிகள் எதனையும் நாங்கள் நிறைவேற்றவில்லை. அதனால் யார் என்ன சொன்னாலும் நாங்கள் பன்னாட்டுச் சாசனத்தில் கைச்சாத்திட்ட அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். இல்லாவிட்டால் சாசனத்தில் இருந்து விலகிக் கொள்ளவேண்டும்.

இலங்கையின் மனித உரிமைதொடர்பில் ஜெனிவா மனித உரிமை மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (5,31)

வனவளத்...

அடையாளப்படுத்துவதற்கு எதிராக பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜெயபுரம் கிராம மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினார்கள். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை தமக்கே ஆவணங்களுடன் பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர்கள் கோரினார்கள்.

பூநகரி வாடியடிச் சந்தியில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான பேரணி, பூநகரி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. பிரதேச செயலரிடம், அரச தலைவருக்கான மனுவை மக்கள் கையளித்தனர். அங்கிருந்து வனவளத் திணைக்களத்துக்கும் பேரணியாகச் சென்று, மனுக் கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது, 1983ஆம் ஆண்டு சுமார் 48 பேருக்கு காணிகள் வழங்கப்பட்டன. தலா ஒரு ஏக்கர் காணி நெற்செய்கை காணியாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டன. அதன்பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழலில் பலர் இந்தியாவுக்குச் சென்றனர். எஞ்சியோருக்கு காணி வழங்கப்படும் என்று நீண்ட காலமாக எதிர்பார்த்தோம். ஆனால் அது கிடைக்கவில்லை. காணிகளை தற்போது வனவளப் பாதுகாப்பு பிரிவினர் தமது காணிகள் என்று தெரிவித்து மரக் கன்றுகளை நட்டு வருகின்றனர். எமக்கு காணிகளை தருமாறு தெரிவித்து பல்வேறு தரப்பினருக்கும் கடிதங்கள் வழங்கினோம். ஆனால் இன்று வரை எவ்வித தீர்வும் இல்லை. நாம் மிகவும் கஷ்டத்தில் வாழ்கின்றோம். எமக்கு காணிகளை வழங்கினால் ஓரளவேனும் எமது கஷ்டத்தைப் போக்க முடியும் என்றார்கள்.

மக்கள் வழங்கிய மனுவைப் பெற்றுக் கொண்ட பின்னர் பிரதேசசெயலர் எஸ். கிருஸ்ணேந்திரன் தெரிவித்ததாவது, 1983ஆம் ஆண்டு மக்களுக்கு காணி வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பான வரைபடம் எங்களிடம் இல்லை. அரச தலைவரால் நியமிக்கப்பட்ட குழுவுக்கும் இந்த விடயத்தை தெரியப்படுத்தியுள்ளோம். அவர்களிடமிருந்து பதில் கிடைக்கும் வரையில் எங்களாலும் எதுவும் செய்ய முடியாது - என்றார். (5,6,34,35,214)

எம்மை...

வாழ்க்கையையும் சூழலையும் அறியாமையில் உழலும் அசடர்கள் கைவசம் கொடுக்க நாங்கள் தயாரில்லை. எமது பாரம்பரியங்களை அறிந்து வரலாற்றை உணர்ந்து பண்புடன் சீலமுடன் எம்மை அரவணைத்து நடக்கக் கூடிய எமக்குறவான முதலீட்டாளர்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கிராமிய பாலங்கள் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட மண்டைதீவு அல்லைப்பிட்டி இணைப்புப் பாலம் நேற்றுப் புதன்கிழமை காலை 8.30 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றிய முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

கிராமிய பாலங்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 20 மீற்றர் நீளமான இந்தப் புதிய பாலம் நவீன முறையில் 32 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படுகின்ற போதும் இதன் இருமருங்கிலும் காணப்படுகின்ற வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமையால் பாலத்தின் பாவனை முழுமையாக இந்தப் பகுதி மக்களுக்கு கிடைப்பதற்கு இன்னும் சில காலம் காத்திருக்க வேண்டியுள்ளது.

நீண்டகாலப் போரைத் தொடர்ந்து மண்டைதீவு பகுதியில் இருந்தும் ஏனைய தீவுகளில் இருந்தும் பெருமளவிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் எஞ்சியிருப்பவர்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக வசதிகள் குறைந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அபிவிருத்தியில் சிக்கல்

மக்களின் முன்னேற்றத்துக்கு இணைப்புப் பாலம் மிகவும் உதவியாக இருக்குமென எண்ணுகின்றேன். வழக்கமான போக்குவரத்துக்கு மேலதிகமாக சிறிய அளவிலான கைத்தொழில் முயற்சிகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள், பனைவளம் ஆகியன இந்தப் பகுதிகளில் காணப்படுவதால் அவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கும் கைத்தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதற்கும் இந்தக் கரையோர இணைப்புப் பாதை பெரிதும் உதவும்.

புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தின் இரு மருங்கிலும் காணப்படுகின்ற வீதிகள் தேசிய நல்லிணக்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் வீதிகள் முழுவதும் கொங்கிறீற் இடும் முறையில் புனரமைப்பு செய்யப்படவிருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில் எமது மக்களின் வாழ்வாதார அபிவிருத்திப் பணிகள் விரைந்து முன்னெடுக்கப்படவேண்டியவை என்பதில் எமக்கு எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால் அந்தப் பணிகள் எமது நீண்ட கால நலனை மனதில் வைத்து எவ்வாறு, யாரால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் சிக்கல்கள் இருக்கின்றன.

மண்டைதீவை விழுங்கும் திட்டங்கள்

மண்டைதீவு பகுதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் பலரும் தமது திட்ட முன்மொழிவுகளைக் கையளிக்கின்றார்கள். இவர்களின் திட்டங்கள் பெரிய திட்டங்களாக மண்டைதீவு நிலப்பரப்பு முழுவதையும் விழுங்கக்கூடிய வகையாகவோ அல்லது இந்தப் பகுதியின் தனித்துவத்தை சீர்குலைக்கக்கூடிய வகையிலோ அல்லது மாகாணத்துக்கு வெளியில் இருப்பவர்கள் இங்கு வந்து பொருளாதார ஆக்கிரமிப்பில் ஈடுபடும் விதத்திலோ அமைந்துவிடக்கூடாது என்பதாலேயே அவ்வாறான கோரிக்கைகளை எடுத்த எடுப்பிலேயே நாம் அனுமதித்துவிடாது அதற்கான நிபுணத்துவக் குழுக்களிடம் கையளித்திருக்கின்றோம். அந்த நிபுணர்களைக் கூடத் தம் வலையில் மாட்டி வைக்க முனையும் முதலாதிக்கம் பெற்ற முதலைகள் பற்றி நாம் அறிந்தே இருக்கின்றோம்.

உள்ளூர் மக்களுக்கே நன்மைவேண்டும்

இந்தப் பகுதிகளின் தனித்துவமும் இயல்பான தன்மையும் அழிந்து விடாத வகையில் இடம் பெறக்கூடிய அபிவிருத்திக்கான திட்டங்களையே கருத்தில் கொண்டு வருகின்றோம். இந்தப் பகுதிகளில் காணப்படுகின்ற கடல் வளங்கள் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும். அவை உள்ளூர் மக்களுக்கேநன்மை அளிக்க வேண்டும். விவசாய நிலங்களின் உற்பத்திகளும் அதிகரிக்கப்பட வேண்டும். மண்டைதீவு தெங்குப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்த இடம். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே இப்பகுதிகள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று அல்லைப்பிட்டிப் பகுதி நிறைந்த பனை வளங்களைக் கொண்ட ஒரு பகுதி. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே இந்தப் பகுதி பனம் பொருள் உற்பத்திகளில் தன்னிறைவு காணப்பட்ட இடமாக விளங்கியது. இவற்றின் தனித்துவங்கள் பேணப்பட வேண்டும் என்று நாங்கள் எண்ணுவதில் பிழையில்லை - என்றார்.

நிகழ்வு

வடக்கு மாகாண கிராமிய பாலங்கள் திட்ட மாகாண ஒருங்கிணைப்பாளரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் மாலை அணிவிக்கப்பட்டு, மண்டைதீவு றோ.க.வித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டார். பாலத்தின் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து வைத்ததுடன், பாலத்தையும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான என். விந்தன் கனகரட்ணம், கஜதீபன், இ.ஜெயசேகரம், தீவக மறைக்கோட்ட குருமுதல்வரும் மண்டைதீவு அல்லைப்பிட்டி பங்குத் தந்தையுமான அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட் அடிகளார், மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் கோவில் பிரதமகுரு மற்றும் வடக்கு மாகண பிரதம செயலர் அ.பத்திநாதன், வேலணை பிரதேசசபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வேலணை பிரதேச செயலர் சோதிநாதன், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் சிவராஜலிங்கம், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் சிவநேசன் மற்றும் மண்டைதீவு அல்லைப்பிட்டி பொது அமைப்புக்களின் தலைவர்கள், மக்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மண்டைதீவு அல்லைப்பிட்டி இணைப்பு வீதியில் அமைந்திருந்த இந்தப் பாலமானது போரின்போது முற்றாக உடைக்கப்பட்டு, மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்பட்டது. வேலணை பிரதேச செயலகத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மண்டைதீவு மக்கள் நீண்ட தூரம் பயணித்தே தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

தவறான...

யில் நேற்று சம்பவம் இடம்பெற்றது.கணவன் வேலைக்குச் சென்றபின்னர், 34 வயது மதிக்கதக்க தாய், தனது ஒன்றரை வயது, 6, மற்றும் 12 வயது பிள்ளைகளுக்கு குளிர்பானத்துக்குள் நஞ்சைக் கலந்துகொடுத்துத் தானும் அருந்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. 6 வயதுச் சிறுவன் தனது அம்மம்மாவுக்கு அலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி நடந்த சம்பவத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். அயலவர்களின் உதவியுடன் நால்வரும் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக தாயார் திருகோணமலை மருத்துவமனைக்கும், 12 வயது பிள்ளை யாழ்ப்பாண மருத்துவமனைக்கும், ஒருவர் வவுனியா மருத்துவமனையிலும் மாற்றப்பட்டனர். தாய் மற்றும் இரு குழந்தைகளின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஒன்றரை வயதுக் குழந்தை மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. "குடும்பத்தில் ஒரு பிரச்சினையும் இல்லை. காரணம் தெரியவில்லை என்று குடும்பத் தலைவர் தெரிவித்தார். பறயனாலங்குளம் பொலிஸார் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,110)

ஊரெழுப்...

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஊரெழுவைச் சேர்ந்த பெண்ணொருவர் கொழும்பு கொட்டாஞ்சேனையில் வீடொன்றில் வைத்து கழுத்தறுத்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்களே இந்தக் கொலையைச் செய்துள்ளனர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த குணரட்னம் விஜிதா (வயது36) என்ற பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

'கணவனைப் பிரிந்து வாழும் இந்தப் பெண் கொட்டாஞ்சேனையிலுள்ள வீடொன்றில் பணிப்பெண்ணாக உள்ளார். வேலைசெய்யும் வீட்டிலேயே அவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொலை செய்யப்பட்டுள்ளார். கழுத்தில் கத்தியால் வெட்டப்பட்டே அவர் கொலைசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களோ இந்தக் கொலையைச் செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர். (5)

அரச...

ஏனையோருக்கு இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்புதகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், முன்னாள் போராளிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில் கொண்டுவந்த அமைச்சரவைப் பத்திரம் மூன்றாவது தடவையாகவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளரால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்து அமைச்சர் ராஜித தெரிவித்ததாவது, வடக்கின் மீள்குடியேற்ற அமைச்சர் என்ற அடிப்படையில் அமைச்சர் சுவாமிநாதன் வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கவும், பொது இடங்களை மறுசீரமைப்புச் செய்யவும் அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்திருந்தார். அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் பத்திரங்களுக்கு அனுமதி வழங்குவதா இல்லையா என்தை அமைச்சரவையே தீர்மானிக்கும்.

அமைச்சரவைப் பத்திரத்தில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குடும்பத்தினரை மாத்திரம் நீக்கிவிட்டு ஏனைய பிரிவினருக்கு இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது - என்றார்.

இந்த அமைச்சரவைப் பத்திரம் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், அமைச்சர்கள் சிலரும், முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது புலிகளை ஆதரிப்பதற்கு ஒப்பானது என்று குறிப்பிட்டிருந்தனர். அமைச்சரவைப் பத்திரத்துக்கு எதிர்ப்பும் வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அரச தலைவர் முன்பாக தனது வருத்தத்தை வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5,31)

யஸ்மின் சூக்காவின் காணாமற்போனோர் பட்டியலை பகிர்ந்து கொள்ளவேண்டும்

அயலுறவுத்துறை அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21

யஸ்மின் சூக்காவின் தலைமையிலான உண்மை மற்றும் நீதி திட்டத்தின் அமைப்பு தங்களிடமுள்ள காணாமற்போனோர் பட்டியலை இலங்கையின் காணாமற்போனோர் அலுவலகத்துடன் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சு வேண்டு கோள்விடுத்துள்ளது.

உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் அமைப்பினது இணையத்தளத்தில் காணாமற்போனோர் குறித்து வெளியிட்டுள்ள பட்டியல் தொடர்பில் தமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அயலுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பட்டியலில் 351 பேரின் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பெயர்கள் 2009 மேமாதத்தில் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்து அவர்களின் காவலில் இருந்தபோது காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர்களுடையதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலை இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள காணாமற்போனோருக்கான பணியகத்துடன் பகிர்ந்துகொள்ளுமாறு அயலுறவுத்துறை அமைச்சு கோரியுள்ளது. இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ளவர்களிடம் காணாமற்போனவர்கள் குறித்த விவரங்கள் இருந்தால் அதனை காணாமற்போனோருக்கான அலுவலகத்துடன் பகிர்ந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் வெளியிட்டுள்ள பட்டியலில் உள்ளவர்கள் தொடர்பான மேலதிக தகவல்களையும் அவர்கள் எவ்வாறான சூழ்நிலையின் கீழ் காணாமற்போனார்கள் என்பது குறித்த தகவல்களையும் காணாமற்போனோர் பணியகத்துடன் பகிர்ந்துகொள்ளுமாறு அயலுறவுத்துறை அமைச்சு கோரியுள்ளது. (5,61)

புத்திக பத்திரன பிரதி அமைச்சராக பதவியேற்பு

கொழும்பு, ஜூன் 21

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பிரதி அமைச்சராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுமுன்தினம் பதவியேற்றார்.

கடந்த வாரம். பிரதி அமைச்சர்கள் 6 பேர் பதவியேற்றிருந்தனர். புத்திக பத்திரன அந்தக் காலப் பகுதியில் வெளிநாடு சென்றிருந்தமையால், அவர் நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார். (5)

மரக்கறிகள் நெருப்பு விலையில் விற்பனை

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக மரக்கறிகளின் விலை நூறு வீதத்தால் அதிகரித்துள்ளது என்று தம்புள்ளை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் மரக்கறிகளின் விலை குறைவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. இருப்பினும் தற்போது அதிகரித்த விலையிலேயே மரக்கறிகளை விற்கவேண்டிய நிலை காணப்படுகின்றது என்று வர்த்தக சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.

தம்புள்ளை பொருளாதார மைய நிலையத்தில் ஒரு கிலோ கிராம் தக்காளி 220 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் 350 ரூபா முதல் 420 ரூபா வரையிலும், புடலங்காய் 100 ரூபா முதல் 160 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுவதாக, வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர். (5)

மரக்கறி விலை அதிகரிப்பு அமைச்சரின் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 21

மரக்கறிகளின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதன் காரணமாக பொதுமக்கள் மரவள்ளிக்கிழங்கு மற்றும் வட்டக்காய் என்பவற்றை உணவுக்கு எடுத்துக்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போஞ்சி, கரட், கறிமிளகாய் போன்ற மரக்கறிகளின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது. அவ்வாறான மரக்கறிகளைத் தவிர்த்து விலை குறைந்த மரக்கறிகளை பொதுமக்கள் உணவுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். மரவள்ளிக்கிழங்கு புற்றுநோய்க்கு சிறந்த மருந்து. வட்டக்காய் உண்பதால் உடலுக்கு நலம். பொதுமக்கள் இவ்வாறான உணவுகளைத் தேர்ந்தெடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (5)

ஊடகவியலாளர்களுக்கு ரூ.3 லட்சம் வட்டியில்லாக் கடன் திட்டம்

கொழும்பு, ஜூன் 21

இலங்கை ஊடகவியலாளரின் தொழில் தன்மையை ஊக்குவிக்கும் நோக்கில் நிதி மற்றும் ஊடக அமைச்சால் சிறப்புக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

ஊடகப் பணியில் மாகாண, இணைய, சுயாதீன, அங்கீகாரம் பெற்ற துறைகளில் பணிபுரிவோர் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

ஒன்றரை லட்சம் தொடக்கம் மூன்று லட்சம் வரை வழங்கப்படும் கடன் திட்டத்தைப் பயன்படுத்தி ஊடகப் பணிக்குத் தேவையான கணினி, ஒளிப்படக் கருவி, தொலைநகல் கருவிகள், இலத்திரனியல் ஒளிப்பதிவுக் கருவிகள் மற்றும் அமைச்சால் பரிந்துரைக்கப்பட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்த, 60 வயதுக்கு உட்பட்ட அரச தகவல் திணைக்கள அடையாள அட்டையை வைத்துள்ள, வருடாந்த வருமானம் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெற்றுக் கொள்பவர்கள், இந்தக் கடனுக்குத் தகுதியுடையவராகக் கணிக்கப்படுவார். மக்கள் வங்கியின் ஊடாக இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது.

கடன் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் அமைச்சின் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளார். விண்ணப்பப் படிவங்களை ஊடக அமைச்சின் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். (5,7)

தேசிய பாடசாலை அதிபர்கள் பதவிக் காலத்துக்குக் கட்டுப்பாடு

கல்விச் சேவைக் குழு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் ஆகக் கூடியது 8 ஆண்டுகளுக்கே ஒரே பாடசாலையில் கடமையாற்ற முடியும் என்ற கட்டுப்பாடு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கல்வி அமைச்சின் கல்விச் சேவைக் குழு தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் தேசிய பாடசாலை அதிபர்கள் ஒரே பாடசாலையில் 10 ஆண்டுகள் கடமையாற்ற முடியும் என்ற கட்டுப்பாடே 8 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்தப் புதிய கட்டுப்பாடு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது என்று கல்விச் சேவைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிதாக 250 பேரை சேவைக்குள் இணைக்கும் அரசிதழ் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனவும் கல்விச் சேவைக்குழு தெரிவித்துள்ளது. (5)

பல நூற்றாண்டுகள் பழைமையான கிணறு புத்தளத்தில் கண்டுபிடிப்பு

இளநீர் சுவைபோன்று குடிதண்ணீர் இருப்பதாக மக்கள் தெரிவிப்பு

புத்தளம் மாவட்டத்தின் வனாத்தவில்லுப் பகுதியில் விவசாய நிலத்தை சுத்தப்படுத்தியோது பல நூற்றாண்டுகள் பழைமையான கிணறு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பயிர்ச் செய்கைக்காக நிலத்தை விவசாயி ஒருவர் சுத்தப்படுத்தியுள்ளார். களிமண்ணால்லான சட்டி போன்ற துண்டு கிடைத்துள்ளது. அது இருந்த இடத்தில் மண்வெட்டியால் மேலும் ஆழமாக்கி துப்புரவு செய்தபோது சிறிய கிணறு போன்ற ஒன்று இருப்பதாகத் தெரியவருந்துள்ளது.

இந்தக் கிணறு சுமார் 8 அடி ஆழத்தைக் கொண்டுள்ள போதிலும், அது 40 அடி ஆழத்தை கொண்டிருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தக் கிணற்றில் உள்ள நீர் இளநீர் போன்று சுவையாக உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். வரலாற்று தொல்பொருளியல் பெறுமதியைக் கொண்ட இந்தக் கிணறு தொடர்பில் தொல்பொருளியல் அதிகாரிகள் கவனஞ் செலுத்தியுள்ளனர். இந்தக் கிணற்றுக்கு 500 ஆண்டுகளுக்கும் அதிக பழைமையான வரலாறுகள் உள்ளதாகத் தொல்பொருளியல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5)



118 பட்டியலில் நான் இல்லை

■ ஹிருணிகா

கொழும்பு, ஜூன் 21

பிணைமுறி மோசடியை மூடிமறைப்பதற்காகப் பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்றதாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 118 பேர் கொண்ட பட்டியலில் எனது பெயர் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அரச கணக்குக் குழுவின் அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அதேவேளை, அரச கணக்குக் குழு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது எனச் சுட்டிக்காட்டிய ஹிருணிகா, இதனூடாகக் கீழ்மட்ட அரச நிர்வாகப் பொறிமுறையில் இடம்பெற்ற முறைகேடுகளையும் கண்டறியக்கூடியதாக இருந்தது எனவும் கூறினார். (5)

போதிய வளங்கள் இல்லாததால் நிர்ப்பந்திக்க முடியவில்லையாம்!

பொறுப்புக் கூறல் தோல்விக்குச் சாக்குப் போக்குச் சொல்கிறது ஐ.நா.

கொழும்பு, ஜூன் 21

போதுமான வளங்கள் இல்லாத காரணத்தினாலேயே பொறுப்புக் கூறல் பொறிமுறை விடயத்தில் இலங்கை அரசை ஐ.நாவால் நிர்ப்பந்திக்க முடியாமல் இருப்பதாக ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டர்ஸ் தெரிவித்தார். ஒஸ்லோ நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதைத் தெரிவித்தார்.

இலங்கை விடயத்தில் ஐ.நா. ஏன் தோல்வியைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. இலங்கை விடயத்தில் ஏன் இதுவரை சரியான பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே ஐ.நா. செயலாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

"நாடுகளுக்குப் பொறுப்புக்கள் இருக்கின்றன. பன்னாட்டுச் சட்டங்களை ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்புக்கள் அவற்றுக்கு இருக்கின்றன. ஆனால் அதனை இலங்கை செய்யவில்லை. வளப்பற்றாக் குறைகள் காரணமாக ஐ.நா.வாலும் அதைச் சரியான முறையில் செய்ய முடியவில்லை.

இந்த விடயம் பற்றி நாங்கள் ஆராய்ந்து எங்களது அணுகுமுறைகளை மாற்றி வருகிறோம். இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனிதத்துக்கு ஏதிரான குற்றங்கள் போன்றவற்றுக்கான பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் பொறிமுறை இல்லை" என்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் தெரிவித்தார். (5)

சீனப் பாதுகாப்புப் பல்கலைக்கழக உயர்மட்டக் குழு இலங்கையில்

கொழும்பு, ஜூன் 21

சீனாவின் தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயர்மட்டக் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

சீனாவின் தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உதவித் தலைவர் லெப்.ஜெனரல் சியாவோதியன்லியாங் தலைமையிலான இந்தக் குழுவினர், பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடப் பட்டது.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இணைப் பதிகாரி மேஜர் ஜெனரல் ரணவக்கவும் கலந்து கொண்டார். (5)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பிற்போடப்படாது

■ பரீட்சைத் திணைக்களம்

கொழும்பு, ஜூன் 21

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது, காலம் தாழ்த்தி நடைபெறும் என்று பரப்பப்பட்ட வதந்திகள் பொய்யானவை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித தெரிவித்தார்.

பரீட்சையை ஒத்திவைப்பது தொடர்பிலான கோரிக்கை எந்தத் தரப்பினரிடமிருந்தும் விடுக்கப்படவில்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித குறிப்பிட்டார்.

இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் சிறுவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

கதறியழுத சிறுமி:

பதவியைத் துறப்பேன் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 21

சிங்கராஜா வனத்திலுள்ள யானைக்களுக்கு மாற்று இடம் வழங்கப்படாவிட்டால் எனது பதவியைத் துறப்பேன். நான் மாத்திரமல்ல, பிரதி அமைச்சர் பாலித தெவரப் பெருமவும் பதவியைத் துறப்பார்.

இவ்வாறு அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சிங்கராஜா வனத்திலுள்ள யானைகளை இடமாற்றுவது தொடர்பான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

"கடந்த ஆண்டு இங்குள்ள யானை எனது அப்பாவை அடித்துக் கொன்றுவிட்டது. அப்பா இல்லாததால் நான் கஷ்டப்படுகின்றேன்" என்று சிறுமி ஒருவர் தெரிவித்துக் கண்ணீர் விட்டு அழுதார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொன்சேகா, இது தொடர்பில் அரச தலைவருடன் பேச்சு நடத்தினேன். சிங்கராஜா வனத்திலுள்ள யானைகளுக்கு மாற்று இடம் ஒன்றை அடையாளப்படுத்தித் தருவதாகத் தெரிவித்தார். அது நடைபெறாவிட்டால் எனது அமைச்சைத் துறப்பேன் - என்றார். (5)

கோத்தா ஒரு பன்னாட்டுப் பயங்கரவாதி!

■ கொதிக்கிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜூன் 21

கோத்தபாய ராஜபக்ச பன்னாட்டு ரீதியில் செயற்பட்டு வரும் பயங்கரவாத' அமைப்புக்களுடன் தொடர்புகளை வைத்திருக்கின்றார். இது குறித்து அரசு தாமதமின்றி விசாரணை நடத்தவேண்டும்.

இவ்வாறு ஹெல உறுமயவின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோத்தபாயவும், அவன்காட் நிறுவனப் பணிப்பாளர் நிஸங்க சேனாதிபதியும் இன்று எங்கள் மீது சீறிப் பாய்கின்றனர்.

அவன்காட் நிறுவனத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தபடியால் எங்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருகின்றனர். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ள போதிலும் எமது நாட்டில் நிலவுகின்ற செல்வந்தர்களுக்கெதிரான வழக்குகளை நிலுவையில் வைக்கும் பழக்கத்தால் விசாரணை பிற்போடப்பட்டு வருகிறது.

என்றாவது ஒருநாள் நீதி நிலைநாட்டப்படும். அது வரைக்கும் போராடுவோம். கடற்படைக்குக் கிடைக்க வேண்டிய பணத்தைச் சூறையாடிய அவன்காட் நிறுவனத்திடம் இருந்து கடந்த அரச தலைவர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் பணம் பெற்றவர்களது பெயர்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

அலோசியஸிடம் இருந்து பெற்ற பணத்தைவிட இது மிகவும் பயங்கரமானதாகும்.

செங்கடலில் மிதக்கும் ஆயுதக் கப்பலை வைத்திருந்தார். அதேபோல உக்ரைன் அரசின் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்த குற்றச்சாட்டை அவர் எதிர்கொண்டார். இது குறித்து அரசு ஆராய வேண்டும்.

ஏனென்றால் கோத்தபாய ஒரு பன்னாட்டுப் பயங்கரவாதி. அரச பணத்தைக் கொள்ளையிட்டு வாழ்கின்ற அவர் பன்னாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்பு பட்டவரா என்பதை ஆராய்வது அரசின் கடமையாகும்.

கடற்படையால் நைஜீரிய அரசுக்கு ஆயுதங்கள் வழங்கிய விவகாரத்தில் தலையீடு செய்து அதிலும் நிதியை மோசடி செய்ய முயற்சித்த போதிலும் அதைத் தடுத்து நிறுத்தினோம்.

தரங்குறைந்த எரிபொருளை இறக்குமதி செய்து பணத்தைச் சூறையாடிய, அனல் மின்உற்பத்தி நிலையத்தின் ஊடாகப் பணம் மோசடி செய்தவர்களே இன்று வியத்மக என்ற அமைப்பை நிறுவிச் செயற்பட்டு வருகின்றனர்.

எனக்கு வெளிநாடுகளில் 7 பில்லியன் ரூபா இருப்பதாக இந்த மோசடியாளர் கூறுகிறார்.

மிக்வானூர்தி மோசடியில் கிடைத்த பணத்தை வேர்ஜின் தீவுகளில் வைப்பிலிட்டவர்களே இதைக் கூறுகிறார்கள். நாங்கள் இந்த நாட்டில் ஒருசதமேனும் மோசடி செய்யவில்லை. அரசு இலாபம் ஈட்டுவதற்கு உருவாக்கிய ஒரேயொரு நிறுவனத்தை முடிந்தால் காண்பிக்குமாறு ராஜபக்ச குடும்பத்துக்கு நான் பகிரங்கச் சவால் விடுக்கின்றேன் - என்றார். (5,31)

சிறையில் மதகுருமாருக்கு தனிச்சட்டம் கிடையாது!

கொழும்பு, ஜூன் 21

தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட மதகுருமார் 18 பேரும் சிறைச்சாலைச் சட்ட விதிகளின் கீழ் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியது.

மதகுருமார் அல்லது வேறு குழுக்களுக்காக ஏதேனும் சலுகைகள் பெற்றுக்கொடுக்க வேண்டுமாயின் அதற்காகப் புதிய சட்டம் உருவாக்குவதற்கு நாடாளுமன்றத்துக்கே அதிகாரம் உள்ளது என்றும் இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்து, இஸ்லாம், பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார் என்று 18 பேர் தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் சிறைச்சாலைச் சட்ட விதிகளின் கீழ்சமமாகநடத்தப்படவேண்டும்.

இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையம் நடத்திய ஆய்வுகளின் பிரகாரம் தற்போது சிறையிலிருக்கும் 18 மத குருமாரும் சிறைச்சாலைச் சட்ட விதிகளின் கீழேயே தமது தண்டனைக்காலத்தை அனுபவித்து வருகின்றனர் என்பது தெரியவந்தது.

அவர்களுடைய உணவு, உடை, வெளியாரை சந்தித்தல் உட்பட அனைத்து நடவடிக்கையும் அந்தச் சட்டவிதிகளின் கீழேயே நடைபெறுகிறது.

உதாரணமாக அவர்கள் அனைவரும் சிறைக் கைதிகளுக்கான இலக்கம் ஒன்றின் கீழேயே அறியப்படுகின்றார்கள். சிறைக் கைதிகள் தொடர்பில் தற்போது நடைமுறையிலிருப்பது சிறைச்சாலைச் சட்டமே.

இதில் மதகுருமார் அல்லது வேறு குழுக்களுக்காகச் சிறப்புச் சலுகைகள் பெற்றுக்கொடுக்க வேண்டுமாயின் அதற்காகப் புதிய சட்டம் உருவாக்கு வதற்கு நாடாளுமன்றத்துக்கே அதிகாரம் உள்ளது என்றும் இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக் காட்டியுள்ளார். (5)

தென்கொரிய உதவியுடன்

வடக்கில் பலநோக்கு மீன்பிடித் துறைமுகங்கள்

கொழும்பு, ஜூன் 21

தென்கொரியாவின் உதவியுடன் நான்கு பலநோக்கு மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் மூன்று வடக்கில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சாலை, மாதகல், நெடுந்தீவு மற்றும் உடப்பு ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களே, தென்கொரிய உதவியுடன் பலநோக்கு மீன்பிடித் துறைமுகங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இது தொடர்பாகத் தென்கொரிய மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கிடையில் நடத்தப்பட்ட உயர் மட்டக் கூட்டத்தில், அடுத்த சில மாதங்களில், முதலாவது பலநோக்கு மீன்பிடித் துறைமுகத்தின் கட்டுமானப் பணியை ஆரம்பிக்கமுடிவுசெய்யப்பட்டது.

முதலாவது மீன்பிடித் துறைமுகத்தை அமைக்கும் பணி, 2019 ஆம் ஆண்டு முதல் சில மாதங்களுக்குள் உடப்பு அல்லது நெடுந்தீவில் ஆரம்பிக்கப்படும் என்று தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப்பலநோக்குமீன்பிடித்துறைமுகங்கள், மீன்பிடி, வணிகம் மற்றும் சுற்றுலாத்துறைகளை அபிவிருத்தி செய்யும் வகையில் அமைக்கப்படவுள்ளன. இதற்குத் தேவையான தொழில்நுட்ப, திட்டமிடல் மற்றும் கடன் உதவிகளை வழங்கத் தென்கொரியா இணங்கியுள்ளது. தென்கொரியாவே தனது செலவில் சாத்திய ஆய்வை மேற்கொள்ளும். இந்தப் பணி ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவடையும். (5)

டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு 200ஐ எட்டும்

என்கிறார் பந்துல

அரசு சிங்கப்பூர் ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 200 ரூபா வரையில் அதிகரிக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் நாடு பல்வேறு சிக்கலுக்கு மத்தியிலும் ரூபாவின் குறைந்த பட்சப் பெறுமதி நூற்றுக்கு 198 என்று இருந்ததுடன் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகளுக்குள் ரூபாவின் குறைந்த பட்சப் பெறுமதி நூற்றுக்கு 6.5 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (5)

பிணைமுறி மோசடி குறித்த அனைத்து ஆவணங்களையும் வெளியிட முடியுமா?

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு மைத்திரி காத்திருப்பதாகத் தகவல்

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய அரச தலைவர் ஆணைக்குழுவின் சகல விதமான ஆவணங்களையும், இணைப்புக்களையும் நாடாளுமன்றத்துக்கு வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவரின் செயலரால் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போதே சபாநாயகர் கரு ஜயசூரியவால் மேற்படித் தகவல் வெளியிடப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நீடத்திய அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள சீ350 - 360 வரையான ஆவணங்களே அனுப்பிவைக்கப்பட்டன. அவை தொடர்பில் ஜூன் 5 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற நடவடிக்கை சம்பந்தமான கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது எடுக்கப்பட்டமுடிவின் பிரகாரம் சீ1 முதல் 349 வரையான அனைத்து ஆவணங்களையும், இணைப்புக்களையும் கூடிய விரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறு கோரி ஜூன் மாதம் 12ஆம் திகதி அரச தலைவரின் செயலருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

அரச தலைவரின் செயலரால், ஜூன்மாதம் 18ஆம் திகதி அனுப்பப்பட்ட சட்டபூர்வமான பதில் கடிதத்தில்,

பிணைமுறி மோசடி தொடர்பில்விசாரணை நடத்திய அரசதலைவர் ஆணைக்குழுவின்சகல விதமான ஆவணங்களையும், இணைப்புக்களையும் நாடாளுமன்றத்துக்கு வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டது. அவரின் ஆலோசனை, இணக்கப்பாடு கிடைக்கப்பெற்ற பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும், என்று குறிப்பிடப்பட்டது என்பதை அவைக்கு அறியத்தர விரும்புகின்றேன்.

இந்த விவகாரம் தொடர்பான சகலவிதமான ஆவணங்களும் அரச தலைவர் செயலகத்திடமிருந்து சட்டபூர்வமாக எனது கைகளுக்குக் கிடைக்கும்வரை, ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டு, நாடாளுமன்றத்துக்கும், நாட்டுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை, அறிவிப்புக்களை வெளியிடுவதை நிறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், ஊடகங்களிடமும்கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

பிணைமுறி மோசடி தொடர்பான அரசதலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையையும் அதனுடன் தொடர்புடையஅனைத்து வித ஆவணங்களையும் சபாநாயகர், அரச தலைவர் செயலகத்திடம் கோரியிருந்த போதிலும், கடந்த 5ஆம் திகதி அவருக்கு சீ350 முதல் 360 வரையான ஆவணங்களே அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அந்த ஆவணங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியும், பொது எதிரணியும் அன்றையதினம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியபோதிலும், அனைத்து வித ஆவணங்களும் கிடைக்கப்பெற்ற பின்னரே சமர்ப்பிக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

ஞானசார தேரர் சாதாரண கைதியாக நடத்தப்படுவார்

எந்தச் சலுகையும் அவருக்குக் கிடையாது

கொழும்பு, ஜூன் 21

ஞானசார தேரருக்கு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தனியான சலுகைகள் வழங்கப்படாது. ஏற்கனவே தண்டனை அனுபவிக்கும் 15 பிக்குகளைப் போன்றே அவரும் சாதாரண கைதியாகத்தான் நடத்தப்படுவார் என்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞானசாரதேரர் காவி உடையுடன் சிறைத்தண்டனை அனுபவிக்க இடமளிக்கப்பட வேண்டும்என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும், அது நிராகரிக்கப்பட்டது. அவருக்குக் கைதிகள் வழக்கமாக அணியும் அரைக்காற்சட்டையே வழங்கப்பட்டது.

ஏற்கனவே 18 பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதகுருமார் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் தகவல் வெளியிட்டார்.

இவர்களில் 15 பேர் பிக்குகள்.



ஆறு மாதங்கள் தொடக்கம் 7 ஆண்டுகள் வரைஇவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்கள் அரைக்காற்சட்டையுடன் கூடிய சிறைச்சாலை உடையே அணிந்திருக்கின்றனர். இவர்கள் தவிர, மேலும் 10 பிக்குகள் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.

கொலை, வல்லுறவு, கொள்ளை, வன்முறை மற்றும் அரசுக்கு எதிராகச்சதி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களில் இவர்கள் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களில் இந்து மதகுரு, மூன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க கொலை முயற்சி வழக்கில் தண்டனையை அனுபவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி சிவரூபி பத்மநாதன்

கடந்த 13.06.2018 புதன்கிழமை பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக்-கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் **பட்டப்பின் கல்வி டிப்ளோமா** பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட எமது பாடசாலையின் ஆசிரியர்

திருமதி சிவரூபி பத்மநாதன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பட்டங்கள் பெற இறை அருளை வேண்டுகின்றோம்.

யா/ ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலை.
பாடசாலைச் சமூகம்

மாடு விற்பனைக்கு

ஜெர்சி இன மாடுகள்.

078 992 6800

(CS17616)(11,17)

நல்லூர் பிரதேச சபை

சட்ட ஆலோசனை வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

மேற்படி விடயம் தொடர்பாக 2018.04.26 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 19ஆம் பக்கத்தில் வெளிவந்த சட்ட ஆலோசனை-வழங்குநர்களைப் பதிவுசெய்தல் தொடர்பான அறிவித்தலின் பிரகாரம் போதிய விண்ணப்பங்கள் கிடைக்காமையினால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் திகதி 2018.06.21 ஆம் திகதி முதல் 2018.07.04 ஆம் திகதி வரை காலநீடிப்பு வழங்கப் பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

தா.தியாகமூர்த்தி
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை. (IN7087)(11,17) 21.06.2018

விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில்

அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை.
(ஆண், பெண்)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(IN7086)(11,17)

கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் (திட்டமிடல் பிரிவு) கடமையாற்றும் திருமதி நிலேஸ்கா பூட் சுவேன் அவர்களின் பாசமிகு தந்தை

சின்னத்துரை நேசதுரை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 28.01.1948 இறப்பு 19.06.2018

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,
நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம் – வேலணை.
(CS17634)(11,17)

சிறுநீரகம் தேவை

சிறுநீரகம் தானம் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

O பொசிற்றிவ் குறூப் இரத்தம் உடையவர்கள் தேவை.

30 - 50 வயதுக்கிடைப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு உள்ளதுடன் சன்மானமும் வழங்கப்படும்.

075 230 8949,
075 767 9519

(IN17609)(11,17)

பணிநிலை வெற்றிடம்

1. Technical Officer(Civil)-
NDT / HNDE / NCT With 3 years Experience or Equivalent)

2. Quantity Surveyor -
HND (QS), NCT (QS) with 3 years experience

தொடர்பு:- Email: vacancynsc@gmail.com
077 712 0945

(CS17633)(11,17)

FS Printers

357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor,
Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்

திருமஞ்சத் திருவிழா

21.06.2018

நிகழும் விளம்பி வருடம் ஆனி மாதம் 07 ஆம் நாள் 21.06.2018 வியாழக்கிழமை ஆனி உத்தரம். மாலை 6.00 மணியளவில் வசந்த மண்ட பூசை இடம்பெறும்

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் விநாயகப்பெருமான், முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக அன்னை வீரமாகாளி அம்பாள் ஆரோகணித்து இலங்கை, இந்திய புகழ் பூத்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் இசைமாரி முழங்க வீதி வலம் வர அம்பாள் அருள்பாலித்துள்ளாள்.

அடியவர்கள் அனைவரும் அம்பிகையின் அருளை பெற்றுக்கொள்வோமாக

பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்
இரவு போசனமும் வழங்கப்படும்

மாலை விஷேட மேளக்கச்சேரி

- பிச்சையப்பா புதல்வர்கள் றஜீவன் குழுவினர் - ஈழநல்லூர்
- தவில் வித்துவான் - தெட்சணாமூர்த்தியின் புதல்வர் உதயசங்கர்
- அகில இலங்கை புகழ் நாதஸ்வரவித்துவான் காணமூர்த்தியின் புதல்வர் கிருஷ்ணா
- உதயசங்கர் குழுவினர் - நல்லூர்
- M.S.புதல்வர் துளசிபரன் குழுவினர் - தொண்டைமானாறு
- இராமகிஷ்ணன் - தவில் - சூரூர் - இந்தியா
- நாதஸ்வர வித்துவான் சத்தியமூர்த்தி - ஆஸ்திரேலியா

நவா ஒளி அமைப்பு - பண்டத்தரிப்பு | தேவன் ஒலி அமைப்பு - பண்டத்தரிப்பு

"வீரமாகாளியைச் சரண் புகுந்தால் வீரசக்தி பெறலாம்"

இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமஞ்சத் திருவிழா உபயகாரர்
அம்பாள் மாக்காலை

களியாட்ட நிகழ்வில்

நகர சபைக்குத் தெரிவிக்காது மேலதிக ரிக்கற்கள் விற்பனை

சபையினர் களத்துக்குச் சென்றதால் மாட்டியது தனியார் நிறுவனம்

வவுனியா, ஜூன் 21

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் இடம்பெற்றுவரும் களியாட்ட நிகழ்வில் நகரசபைக்கு செலுத்தவேண்டியவரிசெலுத்தப்படாது மறைக்கப்பட்டமை நகரசபையால்கண்டுபிடிக்கப்பட்டது.

வவுனியா வைரவப் புளியங்குளம்நகரசபைசிறுவர்மைதானத்தில் கடந்த ஐந்து நாள்களாக சிறுவர்களுக்கான களியாட்ட நிகழ்வு (கார்னிவெல்) நடைபெற்று வருகின்றது. வருமானத்தின்25வீதம் வரியாக நகரசபைக்கு செலுத்தப்படவேண்டியதேவை உள்ளது.

அதனடிப்படையில் களியாட்ட நிகழ்வுக்கானஅனுமதிப்பற்றுச்சீட்டுக்கள் நகரசபையின் முத்திரையிடப்பட்ட பின்னரே பார்வையாளர்களுக்கு வழங்கப்படவேண்டும். எனினும்நகரசபைக்குஅதிக வருமானம் கிடைத்ததை மறைப்பதற்காகநகரசபையின்முத்திரை இடப்படாதபோலியானபற்றுச்சீட்டுகள் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக நலன்விரும்பியொருவரால் நகரசபைக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதனையடுத்துநகரசபைத்தலைவர் உட்பட நகரசபை உத்தியோகத்தர்கள் கொண்ட குழு திடீரென களியாட்ட நிகழ்வு இடம்பெறும் இடத்துக்கு நேரடியாகச் சென்று சோதனை நடத்தியதில் போலிப் பற்றுச்சீட்டுக்கள்கைப்பற்றப்பட்டன.

"நகரசபையிடம் அனுமதி பெறாமல் அனுமதிப் பற்றுச்சீட்டுக்கள் பார்வையாளர்களுக்கு வழங்கப் பட்டமை உண்மை. இது தொடர்பாகநாம்குறித்தஇடத்தில்இருந்து போலியான பற்றுச்சீட்டுக்களை கைப்பற்றியுள்ளோம். இதற்கான பல்வேறுகாரணங்களைஏற்பாட்டாளர்கள் முன்வைக்கின்றனர். தாம்எதிர்பார்த்ததையும்விட அதிகமாக பார்வையாளர்கள் நிகழ்வைக்காணவந்தமையால் அவசரமாக பற்றுச்சீட்டை அச்சிட்டதாகவும் சனி, ஞாயிறு தினங்களில்நகரசபைவிடுமுறைதினமாகையால் திங்கட்கிழமை நகரசபைக்குத் தெரியப்படுத்தி குறித்த பணத்தைச் செலுத்த இருந்ததாகவும்தெரிவித்தனர். எனினும்நாம் பற்றுச்சீட்டைக் கைப்பற்றியுள்ளமையால் அவற்றைப் பரிசீலித்து எத்தனை பற்றுச்சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதைக் கணித்து அதற்குரிய நகரசபைவரியைஅறவிடவுள்ளோம். ரிக்கற்றுக்கள் அதிகம் என்பதால் இன்னமும்கணக்கிடப்படவில்லை. மதிப்பீடு முடிந்ததும் பணம் வசூலிக்கப்படும்"என்றுநகரசபை தலைவர்தெரிவித்தார்.

இது தொடர்பில் களியாட்டு நிகழ்வின்ஏற்பாட்டாளர்கள்தெரிவித்ததாவது:

"சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களில்பார்வையாளர்கள்அதிகரித்தமையாலேயே நகர சபை முத்திரையிட்டரிக்கற்றுகள் இல்லாமல் போயின. மேலும் விடுமுறை நாள்களானதால் அவர்களிடம் அனுமதி பெறவும் முடியாமல் போய்விட்டது. எனினும் கணக்குகள் சரிபார்த்தது அதற்குரிய கட்டடணங்கள் செலுத்தப்பட்டுவிட்டன"-என்றனர். (எ-110)

வட மாகாணத்துக்கு முதன்முதலாக 186 விளையாட்டுப் பயிற்றுநர்கள்

அடுத்தவாரம் கடமைகளைப் பொறுப்பேற்கின்றனர்

யாழ்ப்பாணம் ஜூன்

வடக்கு மாகாண பாடசாலைகளில் முதன் முதலாக விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள்; நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின்செயலாளர்எஸ்.சத்தியசீலன்தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் மாகாணகல்வி அமைச்சின்செயலாளர்மேலும்தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்விவலயங்களிலும்உள்ளபாடசாலைகளில்விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர்களின்தேவைஇனம்காணப்பட்டது. தற்போது முதன்முறையாக பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கான அங்கீகாரம்கிடைத்துள்ளது.

அதனடிப்படையில்பயிற்றுவிப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் தேசியமட்டம்மாகாணமட்டங்களில்முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களில்இருந்துதேர்வுகள் இடம்பெற்று தற்போது தெரிவாகியோரின்வவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் தற்போது வடக்கு மாகாணத்துக்கென 186 பேர்நியமிக்கப்படுகின்றனர். அவர்களுக்கானநியமனக்கடிதங்கள் எதிர்வரும் வாரம் கையளிக்கப்படவுள்ளது.

இவர்கள் எதிர்வரும் இரண்டாம் திகதி தங்களது கடமைகளை பொறுப்பேற்கவேண்டும்.

இந்த பயிற்றுவிப்பாளர்கள் தற்போது 1ஏபி, 1சீ தரப் பாடசாலைகளுக்கே நியமிக்கப்படவுள்ளனர் என்றார். (எ-105)

துவிச்சக்கர வண்டியில் பயணிப்போருக்கு தனியான பாதை

தென்மராட்சி, ஜூன் 21

கைதடியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பாலத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணிப்போர் செல்வதற்கென வீதியின் இரு புறமும் தனியான பாதைஅமைக்கப்பட்டுள்ளது. பாலத்தில் பயணிக்கும் வாகனங்களுடன் இடம்பெறும்விபத்துக்களைத்தவிர்ப்பதற்காகத் துவிச்சக்கர வண்டி செல்வதற்கானபாதை இருபக்கவளைவுகளிலிருந்தும் உருவாக்கப்பட்டுள்ளதெனத்தெரிவிக்கப்பட்டது. (9)

பாலியல் குற்றச்சாட்டு: மருத்துவர் கைது

வவுனியா, ஜூன் 21

வவுனியாவில் தனியார் சிகிச்சை நிலையம் ஒன்றை நடத்திவரும் மருத்துவர் துர்நடத்தையில்ஈடுபடமுற்பட்டார்என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால்மருத்துவர் மீதான குற்றச்சாட்டு திட்டமிட்ட சதியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நகரிலுள்ள தனியார் ஆய்வுகூடம் ஒன்றில் பணிபுரியும் பெண் ஒருவர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் மருத்துவரின் சிகிச்சை நிலையத்துக்கு மருத்துவ அறிக்கை கொடுக்கச் சென்றபோது தவறாகநடக்கமுற்பட்டார்என்றுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பின்னர்அங்கிருந்துவெளியேறியதாகவும் மருத்துவர் அலைபேசியில் இடைஞ்சல் ஏற்படுத்தியதால் வவுனியா பொலிஸ்நிலையப் பெண்கள் சிறுவர் பிரிவில் முறைப்பாடு செய்ததாகவும் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் குற்றச்சாட்டுச் சுமத்தப் பட்டதும்வவுனியாமருத்துவர்சங்கம்செய்திக் குறிப்பொன்றை விடுத்துள்ளது. அதில்.

குற்றஞ்சாட்டப்படும்நபர்மருத்துவர்என்ற போர்வைக்குள்அடங்கமாட்டார்என்றும் அவர்சங்கத்தில்அங்கத்தவராக இல்லை என்றும்குறிப்பிடப்பட்டுள்ளது.

"அவர் ரஷ்யாவில் படித்து மருத்துவரானார். 8 வருடங்களாகப் பணிபுரிகிறார். அவர் மருத்துவர் இல்லை என்று எவருமே இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை" என்று மருத்துவரின் குடும்பத்தினர்தெரிவித்தனர். (4,110)

கணினியில் காலம் கழிப்போர் விளையாட்டில் ஈடுபடுங்கள்

முதலமைச்சர் விக்கி அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 21

தானும் தன்பாடும் என்று குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து வேலை செய்பவர்கள், கணினியின் முன்னால்இருந்துதமது காலத்தைக் கழிப்பவர்கள்கட்டாயமாக ஏதாவது விளையாட்டுக்களில் அல்லது தேகப் பயிற்சிகளில் பங்குபற்ற வேண்டும். காரணம் மனச் சோர்வு, மன ஏக்கம் ஆகியன வராதிருப்பதை விளையாட்டுக்கள் தடுக்கின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அமைச்சுக்களுக்கிடையிலான இந்தவருட விளையாட்டு விழா வடக்கு மாகாணக் கல்வி, கலாசாரம், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையின் கீழ் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய விளையாட்டுத்திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தானும் தன்பாடும் என்றிருப்பவர்கள் தனியே தம் காலத்தைத்தம்முடனேயேகழிக்கஎத்தனிக்கின்றார்கள். இதுகாலக்கிரமத்தில்தனிமையையும்ஏக்கத்தையும் கொண்டு வருவதுடன் மன உழைச்சல்களை ஏற்படுத்துவதற்கும் வழி சமைக்கின்றது. மற்றைய வருடன்சேர்ந்துவிளையாட்டுக்களில்பங்குபற்றுவது அவ்வாறானதனிவாழ்க்கையில்இருந்துவிடுபட்டுக் குதூகலிக்க இடமளிக்கின்றது.

அதுமட்டுமல்ல. விளையாட்டுக்கள் தன்னம்பிக்கையை வளர்க்கின்றன. சுற்றி இருப்பவர்களுடன் மனம்விட்டுப்பேசவசதிஅளிக்கின்றன. சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதை விளையாட்டுக்கள் பெருமளவு தடுக்கின்றன என்றுகூடச் சமூகவியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

எந்த வகையிலாவது போட்டிகளில் வெற்றிபெற வேண்டும் என்ற வெறித் தன்மையில் குறுகிய காலசிந்தனைகளுடன் ஊக்கமாத்திரைகளை உட்கொள்வதும் அதன் மூலமாகப் புதிய ஒரு சக்தியைப் பெறநினைப்பவர்களும்இறுதியில்அதேஊக்கமாத்திரைகளுக்கும் போதைவஸ்துக்களுக்கும் அடிமையாகிவக்கிர புத்தி கொண்டவராக மாறி பல பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபடுவதை நாம் காண்கின்றோம். எனவே வெற்றி பெற வேண்டும் என்ற ஆவலும் உந்துதலும் எம்மிடையே இருக்க வேண்டும். ஆனால் அது ஒரு தீராத வெறியாக எமது மனத்தில் பூதாகாரம்பெறாமலும்பார்த்துக்கொள்ளவேண்டும். ஒரு விளையாட்டு வீரருக்குக் குறிக்கோள் இருக்க வேண்டும். இத்தனை வேகத்தில் நான் ஓட வேண்டும், இன்னவாறு விளையாடி வெல்ல வேண்டும் என்றெல்லாம் திட்டம் வகுப்பது ஒரு நல்ல விளையாட்டுவீரருக்குஅழகு. காரியாலயத்திலும்இவ்வாறாகத் திட்டங்களை வகுத்துச் செயற்படுதல் எமது நாளாந்த வேலைக்கு உறுதுணையாக அமையும். போட்டிகளில்கலந்துகொள்ளும்போதுவெல்லவேண்டும்என்றஆவலும்வெல்வேன்என்றதிடசங்கற்பமும் போட்டியாளர்களுக்குஅவசியம். வெற்றிஇலக்கின்இறுதிப்புள்ளியை அடையும்வரைநானேவெற்றியாளன் என்ற வைராக்கியம் மனதில் எழும்போது ஒருவரின் வெற்றியை நோக்கியபயணம்இலகுவாக்கப்படுகின்றது. எமது அலுவலகக் கடமைகளிலும் இப்பேர்ப்பட்ட ஆவலும் முயற்சியும் எம்மை ஊக்குவித்து முன்னோக்கிச் செல்ல வைக்கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு இப்பேர்ப்பட்ட குணாங்களை நாங்கள் விருத்தி செய்கின்றோமோ அந்த அளவிற்கு அலுவலகங்களிலும்நாங்கள்சிறந்தஊழியர்களாகஎங்கள்நாளாந்த நடவடிக்கைகளில்முன்னேற்றத்தைக்காணக்கூடியதாக இருக்கும். எமது மனங்களை வலுவாக வைத்திருக்கவும் நினைத்ததை அடையும் மனப்பக்குவத்தைப்பெறவும்இவையாவும்உதவிபுரிகின்றன. (4)

வீதிகள் தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாணத்தில் ரீச்திட்டத்தின் (REACH)கீழ் முன்மொழியப்பட்டுள்ள வீதிகள் தொடர்பில்மாகாண உள்ளூராட்சி அமைச்சு மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

ரீச்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வீதிகள் தொடர்பில் பெறப்பட்ட அறிக்கையின் பிரகாரம்14 வீதிகள் இந்த வருடம் மீள்புனரமைப்புச் செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2016இல் அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட வீதிகளே மீள்புனரமைப்பு செய்வதற்காக தற்போது முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளன.

வடக்கில் 5 மாவட்டங்களில் இருந்தும் ரீச் திட்டத்துக்காக வீதிகள் முன்மொழியப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-50)

குடும்பநல தாதியர்கள் நியமனம்: வடக்கு மாகாணத்துக்குக் குறைவு

அதனால் இக்கட்டுநிலை நீடிக்கும் வாய்ப்பு: அரசியல் சதி என்கிறார் மாகாண அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாணத்தில் சுமார் 220 குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றபோதும் பெரும்பாலான (தமிழ் உத்தியோகத்தர்கள் உட்பட) குடும்பநல உத்தியோகத்தர்கள் பிற மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்துக்கு பேரில் தெரிவான 66 பேரில் 33 பேரே நியமிக்கப்பட்டுள்ளனர். மிகுதி 33 பேருக்கு நியமனம் வழங்கப்படவில்லை. அதனால் வடக்கில் இந்தப் பற்றாக்குறை நீடிக்கும் என்று கூறப்படுகிறது.

பயிற்றப்பட்ட குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் கொழும்பில்கடந்ததிங்கட்கிழமை வழங்கப்பட்டிருந்தன. நியமனக்கடிதங்கள்கொடுக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள்கிழக்கு, வடமத்திய, வடமேல்மாகாணங்களுக்குநியமிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், முல்லைதீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் போன்ற பிரதேசங்களுக்கு குடும்பநல உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு அதிகளவில் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த நிலையில் சமாளிக்கக் கூடியளவு ஆளணிகள்உள்ளபுத்தளம், அனுராதபுரம், அம்பாறை போன்ற பிரதேசங்களுக்கு அதிகளவானோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அதுட்டுமன்றி, நியமனம் வழங்கப்பட்டவர்களில்சிங்களமொழி பேசும் குடும்பநல உத்தியோகஸ்தர்களும்வடக்கு மாகாணத்தின் சில தமிழ் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்ப் பிரதேசங்களுக்குப் போதியளவுதமிழ்உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும்பட்சத்தில்தாய்மார்களுடன் உரியமுறையில் கலந்துரையாடி நேர்த்தியான சேவைகளை ஆற்றமுடியும், தாய், சேய் நலனில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வுகளை இனங்கண்டு தீர்த்துக்கொள்ளமுடியும், அவர்களதுநலன்அக்கறையுடன் பேணப்படும். ஆனால் சிங்கள உத்தியோகத்தர்கள் மொழியைப் புரிந்துகொள்ளத் தவறும் பட்சத்தில் எமதுபிரதேசகுழந்தைகள்கவனிப்பில் சீரற்ற நிலை ஏற்படவும் சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று நியமனம் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் கூறுகின்றனர்.

"தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் அதிகளவான குடும்பநல உத்தியோகத்தர்களுக்கானதேவையுள்ளது. ஏனெனில் மீள்குடியமர்வு, பல இடங்களிலும் துரிதமாக்கப்பட்டு வருகின்றது. முன்னர் இருந்த வெற்றிடங்களை எடுத்துநோக்கும்போது விரைவில் இந்த வெற்றிடங்கள் பூர்த்தியாக்கப்படவேண்டிய தேவைப்பாடுகள்உள்ளன எனவேஇந்தநியமனங்கள்தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கப்படவேண்டும்" என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோருகின்றனர்.

"எமது மாகாணத்தில் பெருமளவான வெற்றிடங்கள் நிலவுகின்றமை உண்மைதான். எனினும்இந்தநியமனங்கள் அதிகளவில் வெளிப்பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை நியாயப்படுத்த வேண்டியஒன்றே. குறிப்பாகக்கிழக்கு மாகாணத்தில் குடும்பநல உத்தியோகஸ்தர்களுக்கு ஆளணி பெரிதும் வேண்டப்படாத ஒன்றே. அதாவது போதியளவு குடும்பநல உத்தியோகத்தர்கள் அங்கு இருக்கின்றனர். எனினும் 23 பேர் மேலதிகமாகநியமிக்கப்பட்டுள்ளனர். தேவையுள்ள இடங்களுக்குஉத்தியோகத்தர்களைக்குறைந்தளவு நியமித்து போதியளவு ஆளணி உள்ள பிரதேசங்களுக்கு மேலதிகமாகச் சேர்ப்பதென்பது தேவையற்ற ஒன்று. இறுதியாகச் சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடியபோது வடக்கில் ஆளணிப் பற்றாக்குறை பற்றித் தெரிவித்திருந்தேன். அதற்குரிய நடவடிக்கைகள்உரியஅதிகாரிகளால்நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இவை தொடர்பில் நியமனங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு கேட்டிருந்தேன். மேலிடத்து உத்தரவுக்கு அமையவேநியமனங்கள்வழங்கப்பட்டன -என்றார். எனவே நிச்சயமாக இதில் அரசியல் தலையீடுகள் இருக்க வாய்ப்புகள் இருக்கும்" என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி. குணசீலன்தெரிவித்தார். (4,114)

காலாவதியானதண்ணீர்ப்போத்தல்விநியோகித்த

தென்பகுதி நிறுவனத்துக்கு நீதிமன்று ரூ.22,500 தண்டம்

முல்லைத்தீவு, ஜூன் 21

பதிவுத்திகதிகாலாவதியான தண்ணீர்ப்போத்தல்களை விற்பனைசெய்தகொழும்பு நிறுவனத்துக்கு 22 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்ததுநீதிமன்று.

அதுமட்டுமன்றித் தரமற்ற நல்லெண்ணெய்உற்பத்தி செய்தார் என்று உற்பத்தியாளருக்கு எதிராகவும் வழக்குத்தொடுக்கப்பட்டது.

முல்லைத்தீவின் தண்ணீரூற்றுமுள்ளியவளைவர்த்தக நிலையங்கள் சிலவற்றில் காலாவதியான உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 5 வர்த்தகர்களுக்கு எதிராகவும் காலாவதியானதண்ணீர்ப்போத்தல்களைவிற்பனைசெய்த கொழும்பைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கு எதிராகவும் தரமற்ற நல்லெண்ணெயை உற்பத்தி செய்து இந்தப் பிரதேசத்தில் விற்பனைசெய்தயாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்ஒருவருக்குஎதிராகவும் தண்ணீரூற்று பொது சுகாதாரப் பரிசோதகரால் வழக்குகள்தொடுக்கப்பட்டன.

அவை நேற்றுமுன்தினம் விசாரணைக்குஎடுக்கப்பட்டன. காலாவதியான உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 3 வர்த்தகர்களுக்குதலாபத்தாயிரம்ரூபாவும் 2 வர்த்தகர்களுக்குத்தலா ஐயாயிரம் ரூபாவும் நீதிமன்று தண்டம் விதித்தது. காலாவதியான தண்ணீர்ப் போத்தலை விற்பனைசெய்தகொழும்புநிறுவனத்துக்கு 22ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதித்தது டன் தரமற்ற நல்லெண்ணையைஉற்பத்தி செய்து விற்பனை செய்த யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வர்த்தகர் வழக்குக்கு சமூகமளிக்கவில்லை. அதனால் அவருக்குப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது. (எ-102)

கடலட்டை பிடிப்பு தொடர்பில் நாளை சிறப்புச் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பிற மாவட்ட மீனவர்களால் மேற்கொள்ளப்படும்கடலட்டைபிடியால்உள்ளூர்மீனவர்கள் பாதிப்படைவது தொடர்பில் மீன்பிடி அமைச்சர் விஜிதமுனி சொய்சாதலைமையில்நாளைசிறப்புச்சந்திப்புஇடம்பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் 9 நிறுவனங்களைச் சேர்ந்த 404 படகுகள் தினைக்களத்தின் அனுமதியுடன் கடலட்டை பிடிப்பதால் உள்ளூர் மீனவர்களின் தொழில் பாதிப்படைவதோடுபகுதியில்பெரும்சுகாதாரச்சீர்கேடும்இடம்பெறுவதாக சுட்டிக்காட்டி மாவட்ட மீனவர்கள் பெரும் போராட்டம் நடத்தினர். இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளும் கருத்துரைத்தோடு அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு சென்றனர்.

அதனையடுத்துகுறித்தவிடயத்துக்குதீர்வுஎட்டும்வகையில் நாளை மாலை 4 மணிக்கு அமைச்சின் அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதற்காகயாழ்ப்பாணமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்களானமாவை.சோ.சேனாதிராயா, ம.ஆ.சுமந்திரன், கே.என்.டக்ளஸ்தேவானந்தாமற்றும்அங்கயன்ஆகியோருடன்யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தினைக்களம் சார் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர். (எ-105)

இலச்சினை, கீதம் இல்லாத உள்ளூராட்சி சபைகள் அவற்றை உருவாக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

பொதுஇலச்சினை, கீதம்இல்லாதஉள்ளூராட்சிசபைகள் மதிப்புறு சபையின் அனுமதி அங்கீகாரத்துக்கு அமைய ஏற்பாடுசெய்துகொள்ளலாம்என்றுவடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நகர சபைகள், பிரதேச சபைகள் பொதுஇலச்சினைகளைவைத்துக்கொள்ளவோஅல்லது புதிய இலச்சினை ஒன்றை உருவாக்கிக் கொள்ளவோ, புதிதாக கீதம் இயற்றவோ அன்றி மாற்றம் செய்து கொள்ளவோசட்டத்தில் இடமுண்டு.

எனவே கீதம், இலச்சினை அற்ற சபைகள் சபையின் தீர்மானத்துக்கு அமைய இவற்றை ஏற்பாடுசெய்துகொள்ளலாம்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-50)

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக குரல் கொடுத்த ஒரு மாமனிதர் பத்மநாபா

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 21

ஆயுதம்ஏந்திப்போராடியகாலங்களில்ஆயுதம்ஏந்தியபோராட்டஅமைப்புக்களைஒன்றுபடுத்தி ஒற்றுமையாக செயற்படுத்திய முன்னணித் தலைவராக அமரர் தோழர் பத்மநாபா விளங்கியுள்ளார் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) மன்னார் மாவட்ட அமைப்பாளரும், மன்னார் நகர சபை உறுப்பினருமானஎஸ்.ஆர்.குமரேஸ்தெரிவித்தார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின்ஸ்தாபகதலைவர்அமரர்தோழர்பத்மநாபாவின் 28ஆம் ஆண்டு நினைவு தினமான தியாகிகள் தினம் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அங்குதலைமைஉரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழவிடுதலைப்போராட்டத்தில்பங்கெடுத்து முன்னணியாகச் செயற்பட்ட கட்சிகளில் ஒன்றாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி(ஈ.பி.ஆர்.எல்.எப்)விளங்குகின்றது. அந்தவகையில் குறித்த கட்சிக்கு தலைமைதாங்கியசிறந்ததலைவராகஅமரர்தோழர்க.பத்மநாபாதிகழ்ந்தார்.

வெறுமனவே ஈழ தேசத்துக்கு மாத்திரம் தலைவராகஇல்லாமல்ஒட்டுமொத்தஇலங்கைக்கும், பன்னாட்டுரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும் குரல் கொடுத்தஒருமாமனிதனாகஅவர்விளங்கினார்.

எமது ஈழ விடுதலைப் போராட்டமானது உண்மையில் சரியான இலக்கை நோக்கி போகவேண்டும்வெற்றிபெறவேண்டும் என்ற தூர நோக்கத்தோடு அனைத்து அமைப்புக்களும் ஒன்று பட்டு செயற்படுவதன் மூலமே அந்த இலக்கை அடைய முடியும் என்பதில் மிகவும் காத்திரமாக செயல்பட்ட ஒரு மாமனிதர்.

அவரின் தொடர்ச்சியான வழிகாட்டலிலேயே இன்று வரைக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தொடர்ச்சியாகஒற்றுமையின்பால், சமாதானத்துடன் எமது இலக்கை அடைய வேண்டும் என்பதற்காக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

கடந்தகாலங்களில் எமது தலைவர்களான பத்மநாபாவாகஇருந்தாலும்சரி, சிறிசபாரத்தினம், உமாமகேஸ்வரன், தலைவர்வேலுப்பிள்ளைபிரபாகரன், மறைந்தஅமிர்தலிங்கம் இவர்கள் அனைவரும் தூர நோக்கத்தோடு மக்களின் இலக்கை நோக்கி குரல் கொடுத்ததலைவர்களாக இருந்தார்கள்.

இந்தத் தலைவர்களுக்கு நாங்கள் செய்கின்ற அஞ்சலி குறுகிய இடங்களுக்குள் மாத்திரம்இல்லாது இந்தநாட்டில்தமிழ்மக்களுக்கான ஒரு விடுதலையையும், உரிமையையும் தமிழ் மக்களுக்கான தீர்வையும்பெற்றுக்கொடுப்பதன்மூலமேநாங்கள் அவர்களுக்கு செலுத்தும் ஒரு அஞ்சலியாக அமையும்என்றார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின்மன்னார்மாவட்டஅமைப்பாளர்எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) மாவட்ட அமைப்பாளர் இராஜேந்திரம் பற்றிக் வினோ, மன்னார் நகர சபை உறுப்பினர் ஜோசப் தர்மன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு தோழர் பத்மநாபாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (எ-56,60)

வாக்குரிமையே ஜனநாயகம்

முல்லைத்தீவில் நேற்று விழிப்புணர்வுச் செயற்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 21
உண்மையான ஜனநாயகம் வாக்குரிமையில் தங்கியுள்ளது என்ற தொனிப் பொருளில் முல்லைத்தீவில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலமும், கூட்டமும் நடைபெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலைபுதுக்குடியிருப்புச்சந்தியில் இருந்துபுதுக்குடியிருப்புபிரதேசசெயலகம்வரை விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.
மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலகஉத்தியோகத்தர்கள, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், தேர்தல் திணைக்கள் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள்எனப்பலரும்ஊர்வலத்தில்கலந்துகொண்டனர்.
வாக்குரிமை மற்றும் வாக்காளர் தங்,கள் வாக்குகளை பதிவு செய்வதன் கட்டாயம் தொடர்பிலும், ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் கணக்கெடுப்பில் இணைத்து கொள்எல்தொடர்பிலும்மக்களுக்குவிழிப்புணர்வை ஊட்டும்வகையில்புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.
மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் அதிகாரி ஆர். சி. அமல்ராஜ், யாழ். மாவட்ட பிரதி தேர்தல் ஆணையாளர் ரி. அகிலன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் கே. தனபாலசுந்தரம், முல்லைத்தீவு மாவட்டதேர்தல்திணைக்களஅதிகாரி கா.காந்தீபன், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
தேர்தல்திணைக்களத்தால்வாக்காளர்களின்வாக்களிப்புதொடர்பில்நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி, ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாவட்ட செயலர் மற்றும் மேலதிக மாவட்ட செயலர் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் பரிசில்கள் வழங்கினர்.
வாக்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விழிப்புணர்வு நாடகமும் நடத்தப்பட்டது. கூட்டத்தில் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரி கா. காந்தீபன்வழங்கினார்.சிறப்புரையை கிளிநொச்சி மாவட்ட உதவிதேர்தல் ஆணையாளர் ஆர். சி. அமல்ராஜ் வழங்கினார். (ற-ரி3)

வெளிநாட்டவர் இருவர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன்21
தென் அதிவேக நெடுஞ்சாலையில், இடம்பெற்ற விபத்தில், வெளிநாட்டவர்கள் இருவர் உயிரிழந்தனர். இந்த விபத்து நேற்றுநடந்தது.
வெளிநாட்டவர்கள் பயணித்த வான், அதிவேக நெடுஞ்சாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கொள்கலன்தாங்கிய லொறியுடன் மோதுண்டே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.
அந்த லொறியின் டயர்களில் ஒன்று சேதமடைந்ததையடுத்து, அதனை திருத்துவதற்காக, அந்த லொறி, நெடுஞ்சாலையின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

பேருந்தும் டிப்பரும் விபத்து: ஒருவர் காயம்

மட்டக்களப்பு,ஜூன். 21
மட்டக்களப்பு ,ஏறாவூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர்படுகாயமடைந்தார். இந்தவிபத்து நேற்றுமுன்தினம் இரவு நடந்தது.
கதிர்காம யாத்திரிகர்களுடன் திரும்பிக் கொண்டிருந்த தனியார் சிறிய ரக பேருந்து ஒன்றின்
மீது டிப்பர் ரக வாகனம் மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்தில்படுகாயமடைந்தபேருந்தின்சாரதி,மருத்துவமனையில்சேர்க்கப்பட்டார்.
கதிர்காமத்துக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின்மீது, எதிர்த்திசையில்மட்டக்களப்புநோக்கிச்சென்றுகொண்டிருந்த டிப்பர்ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.
இதில் பேருந்தின் சில பகுதிகள் சேதமடைந்தன. இந்தச் சம்பவத்துடன்தொடர்புடையடிப்பர்ரகவாகனத்தைகைப்பற்றியதுடன் அதன் சாரதியையும் கைது செய்தனர்.
இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர். (ற-ரி5)

புதையல் தேடியவர் கைது

கிளிநொச்சி,ஜூன்21
கிளிநொச்சிஅறிவியல்நகர்காட்டுப்பகுதியில்நவீனஸ்கானர் இயந்திரத்துடன் புதையல் தேடிய இருவரில் ஒருவர் நேற்றுப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அறிவியல் நகர் காட்டுப்பகுதியில் நவீன ஸ்கானர் இயந்திரம் கொண்டு சந்தேகத்துக்கிடமான இருவர் புதையல் தேடுவது தொடர்பில் சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சுற்றி வளைப்பை மேற்கொண்ட வேளையிலேயே ஒருவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதன்போது ஒருவர் தப்பியோடியதுடன், மற்றுமொருவர் பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர்கள் பயன்படுத்திய சுமார் 50 இலட்சம் மதிக்கத்தக்கநவீனஸ்கானர் இயந்திரமும் அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.
மீட்கப்பட்ட கருவியும், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரும் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகிறதுஎனகிளிநொச்சிபொலிசார்தெரிவித்தனர். (ற.ரி5,214)

தகுதி பெற்ற அனைவரும் வாக்காளராகப் பதியுங்கள்

முல்லைத்தீவுமாவட்டச்செயலர்வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூன் 21
ஆண்டுதோறும் வாக்காளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை தேர்தல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. வாக்காளர்களாகதகுதிபெற்றவர்கள்அனைவரும் பதிவு செய்யவேண்டும்.
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
வாக்களார்கள் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலமும், கலந்துரையாடலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வாக்களார் தொடர்பான முக்கியத்துவத்தைப் பற்றி நாங்கள் அறிந்துகொள்வது மிக அவசியம். இது எங்களின் உரிமையுடன்தொடர்புபட்டவிடயம்எங்களின்ஏழ்மையை நாட்டின் இறைமையைக்காத்துக்கொள்ளவேண்டுமானல்சரியான தலைவர்களை தெரிவு செய்யவேண்டும். அதற்கு வாக்குரிமையைப் பெறவேண்டும்.
வாக்காளர்கள் பதிவு பல்வேறு செயற்பாட்டிற்கு இது தேவையாக அமைகின்றது.
வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டுமானால் வாக்களார் பதிவு என்பது முக்கியமாக அமைகின்றது. நேர்முகப்பரீட்சையின்போதுகூட இது தேவையாகஉள்ளது. வாக்காளர்களாக தகுதிபெற்ற அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்ய முனைப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (ற-ரி3)

போதைப்பொருள் வர்த்தகர்கைது

கொழும்பு, ஜூன்21
பேலியகொடை பகுதியில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட வர்த்தகர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
26 வயதுடைய கிஹான் சந்தருவான் என்பவரேபொலிஸ்அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.
அவரிடமிருந்து 5 கிராம் ஹெரோயினும், கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டது.
சந்தேகத்துக்குரியவர், அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பான குழுவுக்கு எதிரான குழுவை வழி நடத்தியவர் எனப் பொலிஸார் தெரிவித்தார்.
இந்தச்சம்பவம்தொடர்பில்மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

துப்பாக்கிச் சூடு: இருவர் கைது

கொழும்பு, ஜூன்21
கிரிவெஹெர விகாராதிபதி மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டசம்பவம்தொடர்பில்மேலும் இரண்டு சந்தேகநபர்கள்தங்காலைபொலிஸாரால்நேற்றுக்கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் பெண்ணொருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட பெண் கதிர்காமத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். மற்றைய சந்தேகநபர் திக்வெல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

மூவரின் சடலங்கள் நேற்று மீட்பு

இருவேறு இடங்களில் சம்பவம்

கொழும்பு,ஜூன்21
பாதுக்கை வகபிரதேசத்தில்வீடொன்றில்இருந்துவெட்டுக்காயங்களுடன் தாய்மற்றும்மகளின்சடலங்கள்மீட்கப்பட்டன. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சடலங்கள் நேற்று மாலை மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். 68 மற்றும் 38 வயதுடையவர்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் ஹங்வெல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை, மீகொட, அக்மீமனபிரதேசத்தில்இருந்தும்நேற்று ஆணொருவரின்சடலம்மீட்கப்பட்டது.
இவர் மர்மமான முறையில் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார்சந்தேகிக்கின்றனர். பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின்அடிப்படையிலேயே பொலிஸார் சடலத்தை மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
வலகஹந்துவ, யகுகஹ பிரதேசத்தைச்சேர்ந்த 54 வயதுடைய ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

ட்ரம்புக்கு மெலனியா கண்டனம்

வொஷிங்டன், ஜூன் 21
மெக்சிக்கோ அகதிகள் விவகாரத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மேற்கொள்ளும் நகர்வுகளை கடுமையாகக் கண்டித்தார் ட்ரம்பின் மனைவி மெலனியா ட்ரம்ப்.
"குழந்தைகள் அவர்களது பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளதை மெலனியா ட்ரம்ப் விரும்பவில்லை. நாம் எமது தேசத்தின் அனைத்து சட்ட விதிகளையும் மதிக்க வேண்டும். ஆனால் அதில் மனித நேயம் வேண்டும். குடியேற்ற சீர்திருத்தத்தை இருபுறமும் கலந்தாலோசித்தால் ஒருமித்த முடிவு வரும் என்று நம்புகிறேன் என்று மெலனியா தெரிவித்தார்" என அவரின் செய்தித் தொடர்பாளர் ஸ்ரெபானி கிரீஸ் தெரிவித்தார். (ம)

கனடாவில் கஞ்சாவுக்கு அனுமதி!

ரொறன்டோ, ஜூன் 21
கனடாவில் கஞ்சா பயிரிடவும், விற்பனை செய்யவும், பயன்படுத்தவும் அந்த நாட்டு நாடாளுமன்றம் இறுதி ஒப்புதலை வழங்கியது.
கனடாவில் கடந்த 200ஆம் ஆண்டு முதலே மருத்துவத்துக்காக கஞ்சா பயன்படுத்துவதற்கு அனுமதி உள்ளது. ஆனால் போதைப்பொருளாக பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் கட்டுப்பாடுகளுடன் கஞ்சாவைப் பயன்படுத்த அனுமதிக்கலாம் என்ற கோரிக்கையும் எழுந்தது. இந்த நிலையில் கனடா நாட்டில் கஞ்சா வளர்க்கவும், கேளிக்கை விடுதிகளில் முறையான அனுமதிகளுடன் கஞ்சாவை விற்பனை செய்யவும், சில கட்டுப்பாடுகளுடன் கஞ்சாவைப் பயன்படுத்தவும் வகை செய்யும் சட்ட மசோதா உருவாக்கப்பட்டது. இந்த மசோதா நாடாளுமன்ற கீழவையில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது. சமீபத்தில் நாடாளுமன்ற மேலவையில் மசோதா நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர் மசோதாவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, மீண்டும் நாடாளுமன்ற கீழவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மசோதா மீது நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரும்பான்மை வாக்குகள் கஞ்சாவை சாதாரணமாகப் போதைப்பொருளாகப் பயன்படுத்துவதற்கு ஆதரவாகக் கிடைத்ததை அடுத்து கஞ்சாவுக்கு அனுமதி வழங்கவுள்ளது கனடா. (ம)

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து

அமெரிக்கா விலகியது!

வொஷிங்டன், ஜூன் 21
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்கா விலகியது. ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே இந்த அறிவிப்பை நேற்று விடுத்தார்.
அமெரிக்காவுக்குள் உரிய ஆவணமின்றி தத்தமது குழந்தைகளுடன் உட்பிரவேசிப்பவர்களைக் கைது செய்தால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க இயலாத நிலையே இது வரை காலமும் இருந்தது. குழந்தைகளுக்கு எதிராகக் குற்றவியல் வழக்குத் தொடர சட்டத்தில் இடமில்லை என்பதால் அவ்வாறு உட்பிரவேசிப்பவர்களின் குழந்தைகளை அவர்களின் பெற்றோரிடம் இருந்து பிரித்து எல்லையில் உள்ள தற்காலிகக் காப்பகங்களில் தங்கவைத்துவிட்டு பெற்றோரைக் கைது செய்யும் நடைமுறையை கடந்த மாதம் அறிமுகப்படுத்தினார் ட்ரம்ப். இந்த நடைமுறை வந்த பின்னர் கடந்த ஆறு வாரங்களில் மட்டும் சுமார் 2 ஆயிரம் குழந்தைகள் அவ்வாறு தத்தமது பெற்றோரிடம் இருந்து பிரிக்கப்பட்டு எல்லையில் உள்ள தற்காலிகத் தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது.
சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் தலைமை உரையாற்றிய சையிட் அல் ஹூசைன் அமெரிக்காவின் நகர்வுகளை கடுமையாகக் கண்டித்தார். "பெற்றோரை தண்டிப்பதற்காக குழந்தைகளை இதைப்போன்ற வன்கொடுமைக்கு ஒரு நாடு உள்ளாக்கலாம் என்ற எண்ணம் எந்த நாட்டுக்கும் ஏற்படுவது ஏற்கத்தக்கதல்ல. இது காரணமற்றது, அதிகபட்சமானது. இந்த நடவடிக்கையை அமெரிக்கக் குழந்தைகள் நலத்துறை மருத்துவர் குழு மிகக் கொடூரமான நடவடிக்கை என்று தெரிவித்துள்ளதுடன் "அரசின் அனுமதியுடன் நடைபெறும் குழந்தைகளுக்கு எதிரான பலாத்காரம்" என்றும் குறிப்பிட்டுள்ளது. இது குழந்தைகள் வாழ்க்கையில் மாற்றவே முடியாத தீமைகளை விளைவிப்பதுடன் இதன் காயங்கள் நெடுங்காலத்துக்கு அவர்களிடம் பிரதிபலிக்கும்" என்று சாடியிருந்தார்.
இஸ்ரேல் விவகாரத்திலும், அகதிகளின் விவகாரத்திலும் அமெரிக்காவுக்கு எதிரான போக்கை ஐ.நா. மனித உரிமைகள் சபை கொண்டுள்ளதையடுத்தே அந்த அமைப்பில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தது அமெரிக்கா.
"மனித உரிமைகள் பற்றிய கேலிக்குரிய ஒரு பாசாங்குத்தனமான மற்றும் சுய சேவை நிறுவனத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை செயற்பட்டு வருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகவே நாங்கள் இந்த அமைப்பில் இருந்து விலகுவது என்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்று நிக்கி ஹாலே மேலும் தெரிவித்தார். (ம)



மெக்சிக்கோவில் இருந்து அமெரிக்க எல்லைக்குள் சட்ட விரோதமாக தமது குழந்தைகளுடன் உட்பிரவேசிக்கும் பெற்றோரிடம் இருந்து குழந்தைகள் பிரிக்கப்பட்டு, டெக்சாஸில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் குழந்தைகள் தங்க வைக்கப்படுகின்றனர். அவ்வாறான முகாம்களின் ஒளிப்படமே இது. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப் படத்தை வெளியிட்டது. (ம)

சகிப்புத்தன்

புலிட்சர் வி ட்ரம்புக்கு எ

வொஷிங்டன், ஜூன் 21
மெக்சிக்கோவிலிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைபவர்கள் விடயத்தில் ட்ரம்ப் மேற்கொண்டுள்ள இரக்கமற்ற நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டித்தார் புலிட்சர் விருது வென்ற ஒளிப்படக் கலைஞர் மூர். மெக்சிக்கோ எல்லையில் தான் எடுத்த ஒளிப்படம் ஒன்றையும் அவர் வெளியிட்டார்.
"கடந்த 6 வாரங்களில் 2 ஆயிரம் குழந்தைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்ப ட

உலகின் பண தொடர்கிறார்

வொஷிங்டன், ஜூன் 21
உலகின் பணக்காரர் என்ற அந்தஸ்தைத் தக்கவைத்தார் பிரபல இணைய விற்பனைத் தளமான அமேசனின் நிறுவுனர் ஜெப் பெசோஸ்.
போர்ப்ஸ் பத்திரிகை உலகின் மிகவும் பணக்காரர்கள் பட்டியலை இடையிடையே புதுப்பித்து வெளியிட்டுக் கொண்டிருப்பது வழமை. நேற்றுமுன்தினமும் உலகின் பணக்காரர்கள் தொடர்பான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அமேசன் நிறுவுனர் ஜெப் பெசோஸ் முதலிடம் பிடித்தார்.

தன்மை இல்லாத செயல்

விருது வென்ற மூர் த எதிராகக் காட்டம்

டிருக்கிறார்கள். பெற்றோர் கைது செய்யப் பட்டு ஓரிடத்திலும் குழந்தைகள் பல்வேறு முகாம்களிலும் அடைக்கப்பட்டுள்ளனர். மிகச் சிறிய குழந்தைகள் பெற்றோரிடமி ருந்து பிரிக்கப்படுவதும் குழந்தைகளின் ஓலமும் என் இதயத்தை நொறுக்கிவிட்டன. எல்லைப் பிரச்சினையில் ட்ரம்ப் நிர்வாகத் தின் சகிப்புத் தன்மையற்ற செயலை இது காட்டுகிறது. அம்மாவிடமிருந்து பிரிக்கப் பட்ட துயரத்தை வெளிப்படுத்தும் குழந் தைகளை என்னால் படம் பிடிக்கவே முடியவில்லை. அந்தக் குழந்தைகளின் அழுகை அசாதாரணமாக இருந்தது. பெற்றோரும் இனி எப்போது குழந்தை களைப் காணப் போகிறோம் என்ற பயத் துடன் இருந்ததைப் பார்க்க முடிந்தது. பல ஆயிரம்மைல்கள்பயணம்மேற்கொண்டு, அடைக்கலம் தேடி வரும் மக்களை இன் னும் மோசமான துயரத்தில் தள்ளிவிடுகி றது ட்ரம்ப் அரசு. அங்கிருந்து வந்தபிறகே என்னால் மூச்சு விட முடிந்தது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

நூறு கோடிக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் உலகெங்கும்

வொஷிங்டன், ஜூன் 21

உலகம் முழுவதும் சுமார் 100 கோடிக்கும் மேற் பட்ட துப்பாக்கிகள் உள்ளன என்று ஐ.நா. சபை யின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. சபை சார்பில் பாதுகாப்புத் துறை நிபுணர் ஆரோன் கார்ப் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை யிலேயே இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்க ளின்படி உலகளாவிய அளவில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொதுமக்களிடம் சுமார் 100 கோடிக்கும் அதிகமான துப்பாக்கிகள் உள்ளன. இதில் பொதுமக்களிடம் மட்டும் 85.7 கோடி துப் பாக்கிகள் உள்ளன. இராணுவ சிப்பாய்கள் 13.3 கோடி துப்பாக்கிகளையும் பொலிஸார் 2.27 கோடி துப்பாக்கிகளையும் பயன்படுத்துகின்றனர். சட்டபூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் பொது மக்களில் அதிகமானோர் துப்பாக்கி வைத்திருக் கும் நாடுகள் வரிசையில் அமெரிக்கா முதலிடத் தில் உள்ளது. அந்த நாட்டில் 39.3 கோடி மக்களி டம் துப்பாக்கிகள் உள்ளது. இரண்டாவது இடத் தில் இந்தியா உள்ளது. இந்தியர்களிடம் சுமார் 7.11 கோடி துப்பாக்கிகள் உள்ளன. சீனர்களிடம் 4.97 கோடி துப்பாக்கிகளும், பாகிஸ்தானியர்க ளிடம் 4.39 கோடி துப்பாக்கிகளும், ரஷ்யர்களி டம் 1.76 கோடி துப்பாக்கிகளும் உள்ளன.

எந்தெந்த நாடுகளின் இராணுவத்தில் துப்பாக்கி கள் அதிகம் உள்ளன என்பது குறித்து நடத்தப் பட்ட ஆய்வில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. சீனா, வடகொரியா, உக்ரைன் ஆகியவை அடுத்தடுத்த நிலையில் உள்ளன. அமெரிக்கா ஐந்தாவது இடத்தில் உள்ளது.

இதேபோல எந்த நாட்டு பொலிஸாரிடம் அதிக துப்பாக்கிகள் உள்ளன என்பது குறித்து நடத்தப் பட்ட ஆய்வில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. சீனா, இந்தியா, எகிப்து அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. அமெரிக்கா ஐந்தாவது இடத்தில் உள்ளது. (ம)



ணக்காரராக ார் பெசோஸ்

141.9 பில்லியன் அமெரிக்க டொலர் களுடன் முதலிடத்தில் உள்ளார் ஜெப். இரண்டாவது இடத்தில் பில் கேட்ஸ் உள்ளார். இவரின் சொத்து மதிப்பு 92.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள். முகநூல் நிறுவுனரான மார்க் 74.6 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

ஆசியாவின் பணக்காரர் என்று அறி யப்படும் அம்பானி உலகப் பணக்கா ரர்கள் பட்டியலில் 39.6 பில்லியன் டொலர்களுடன் 22ஆவது இடத்தில் உள்ளார். (ம)

இந்தியாவை விடவும் பாகிஸ்தானிடம் அதிக அணுவாயுதங்கள்

இஸ்லாமபாத், ஜூன் 21

இந்தியாவை விடவும் அதிகமான அணுவாயுதங் களை பாகிஸ்தான் இருப்பில் கொண்டுள்ளது என்று பன்னாட்டு அமைதி ஆய்வு மையம் தெரி வித்தது.

ஸ்டாக்கோல்ம் என்ற பன்னாட்டு அமைதி ஆய்வு மையமே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இந்தியாவும், பாகிஸ்தானும் தொடர்ந்து தங்கள் அணு ஆயுதங்களைப் பெருக்கி வருகின்றன. தரைவழி, கடல்வழி மற்றும் விண்வெளியில் தாக்கும் திறனுடைய ஏவுகணைகள் மற்றும் வெடிகுண்டுகளை இரு நாடுகளும் இருப்பில் வைத்துள்ளன. பாகிஸ்தானில் இந்த ஆண்டு 140 முதல் 150 அணு ஆயுதங்கள் உள்ளன. இது கடந்த ஆண்டைவிட 10 சதவீதம் அதிகமாகும். அதே நேரத்தில் இந்தியாவில் 130 முதல் 140 அணு ஆயுதங்கள் உள்ளன என்று அந்த ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள் ளது. (ம)



பூமிக்கு நெருக்கமாக வருகிறது செவ்வாய்

வொஷிங்டன், ஜூன் 21

செவ்வாய் கிரகம் அடுத்த மாதம் 27ஆம் திகதி பூமிக்கு மிகவும் நெருக்கமாக வருகிறது. 15 ஆண் டுகளுக்கு ஒருமுறைதான் இந்த அரிய நிகழ்வு நடைபெறும் என்று நாசா குறிப்பிட்டுள்ளது.

இறுதியாக 2003ஆம் ஆண்டு இதுபோன்ற தொரு சம்பவம் இடம்பெற்றது. பூமிக்கு அருகில் செவ்வாய் சுமார் ஒரு வாரமளவில் பயணித்துக் கொண்டிருக்கும் என்று நாசா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
நிர்வாகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

அகதிகளிடம் இரக்கம் காட்டுங்கள்

ஆனி மாதம் 20ஆம் திகதி உலக அகதிகள் தினம். நாட்டைவிட்டுத் தப்பியோடியும், இருக்கும் இடத்தில் இருந்து இடம்பெயர்ந்தும் வாழும் துன்பத்தை ஈழத்தமிழ் இனம் இன்னமும் கடந்து முடித்து விடவில்லை. மேற்குலகநாடுகளைநோக்கி தொழில்அகதி களாகவேனும்ஓடிச்செல்லும்அரசியல்சூழலுக்குள்ளேயே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது ஈழத் தமிழ் இனம்.

நாடுகளுக்கு இடையிலான போர் மற்றும் உள்நாட்டுப் போர், வேலைவாய்ப்பின்மை மற்றும் பட்டினி என்பவற் றின் காரணமாகத் தமது சொந்த நாடுகளில் இருந்து வெளி யேறி வேறொரு நாட்டில் தஞ்சமடைவோரின் எண் ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் மிக வேகமாக அதிகரித் திருக்கிறது. இன்றைய நிலவரப்படி தினமும் தமது நாட் டைவிட்டுவெளியேறுவோரின்எண்ணிக்கை28ஆயிரத்து 300 என்கிறது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம் (யுஎன்எச்சிஆர்).

உலகம்முழுவதும்சுமார்7கோடிமக்கள்அகதிகளாகவசித் துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அரைவாசிப் பேர் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் என்கிறது அகதிகளுக் கான ஐ.நா. அமைப்பான யுஎன்எச்சிஆர். இந்த அமைப்பு உருவாக்கப்பட்ட போது மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே அதனை இயக்கும் எண்ணம் இருந்தது. ஆனால், இன்றுவ ரைக்கும் அதன் பணிகள் தொடர்வது அகதிகள் பிரச்சினை வரவர அதிகரித்துச்செல்வதை வெளிப்படையாகஎடுத்துக் காட்டுகின்றது. 1950டிசெம்பர்மாதம்உருவாக்கப்பட்டது அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையம்.

அகதிகளாகவாழ்ந்தவர்களுக்குத்தான்அதன்வலியும்வேத னையும் புரியும். எத்தனை இழப்புக்கள், தவிப்புக்கள் எல் லாவற்றையும் தாங்கிக்கொண்டு வேறொரு இடத்தில் தம்மைமீண்டும்நிலைநாட்டிக்கொண்டுவாழ்வதென்பது இலகுவானதொருவாழ்க்கையல்ல. இங்கிருந்துஇடம்பெ யர்ந்து சென்று மேற்குநாடுகளில் தஞ்சமடைந்த பலர், தமிழனுக்குஎன்றொருநாடுஇல்லாதபோதுதஞ்சமடைந்த நாட்டைத் தமது சொந்த நாடாக ஒருபோதும் ஏற்க மறுத்து அந்த நாட்டின் குடியுரிமையைப் பெறாமலேயே இறந்து போனார்கள். கடைசிவரைக்கும்சொந்தநாட்டின்நினைவு அவர்களை வாட்டி வதைத்துக்கொண்டே இருந்தது.

ஈழத் தமிழர்கள் அரசியல் அகதிகளாகும் நிலை, ஒப்பீட்ட ளவில் குறைந்துவிட்டாலும், உலகில் எங்காவது ஒரு மூலை அகதிகளின்உற்பத்திக்கூடாரமாகத்தொழிற்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றது. அண்மையில் முகிழ்த்த அத்தகைய கூடாரம் சிரியா.

சிரியாவில்கடந்த 7 ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும்உள் நாட்டுப் போரால் நாட்டுக்குள்ளேயே 63 லட்சம்பேர் இடம்பெயர்ந்துஅகதிகளாகிஉள்ளனர். வேறுநாடுகளுக்கு அகதிகளாகச்சென்றுதஞ்சமடைந்துள்ளவர்கள்40லட்சம் பேர். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் உலகம் முழுவதை யும்உலுக்கும்பிரச்சினையாகசிரியஅகதிகள்இருந்தார்கள். ஆபிரிக்க நாடுகள், துருக்கி, ஆப்கானிஸ்தான் மற்றும் பலஸ்தீனம் போன்றனவும் அகதிகள்உருவாக்கத்துக்கான நாடுகளாகத் திகழ்கின்றன.

அகதிகள் பரிவுடனும், பாரபட்சம் இன்றியும் நடத்தப்பட வேண்டியவர்கள். இது தொடர்பான சாசனங்களும் உடன் படிக்கைகளும் ஐ.நாவால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றை ஏற்றுக்கொள்ளாத இந்தியா போன்ற நாடுகளில் அகதிகளின் நிலமை மேலும் மோசமானது.

பரிவோடும் அனுதாபத்தோடும் அணுகப்பட வேண்டிய அகதிகளுடனான அணுகுமுறையை உலகநாடுகள் பலவும் இறுக்கி வருவதும், அகதிகளை தமது நாடுகளுக்குள் ஏற்க மறுப்பதும் கவலையளிக்கும்விடயம். குறிப்பாகவளர்ந்த நாடுகள் இந்த அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது ஏற் றுக்கொள்ளமுடியாதது. அதுமாறவேண்டும். எந்தவொரு தனி நபரும் தான் அகதியாகவேண்டும் என்று விரும்பிக் கேட்டதில்லை. அரசியல் சூழ்நிலைகளும், பாதகமான நிலமைகளுமே அவர்களை அப்படி ஆக்குகின்றன. எனவே அவர்களின் பிரச்சினைகள் மனிதாபிமானத்துடன் அணுகப்பட வேண்டும்.



குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற நாடாக இலங்கை

■ இந்துமதி

குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பானதொரு நாடாக இலங்கை விளங்குகின்றது. கடந்த அரசின் ஆட்சிக் காலம் தொடக்கம் இன்றுவரை மேல் மட்டத்தில் ஏராளமான குற்றச் செயல்கள் இங்கு இடம் பெற்றுள்ள போதிலும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட் டதற்கான ஆதாரம் எதுவுமில்லை. ஆனால் அத்கை யவர்கள் அரசுக்கு சவால் விடும் வகையில் நடந்து கொள்வதைக் காணமுடிகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட ஊழல் மோசடிகள் மிகப் பெரியவை. நாட்டின் பொரு ளாதாரத்தையே இவை ஆட்டம் காணச் செய்துவிட் டன. அதைவிட ஏராளமான கொலைகளும் இடம் பெற்றன. இதில் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர் கள், பாடசாலை மாணவர்கள் தொண்டு நிறுவனங் களின் பணியாளர்கள், வர்த்தகர்கள், சாதாரண பொதுமக்கள் எனப் பலர் அடங்குவார்கள். வெள்ளை வானில் கடத்திச் சென்று கொலை செய்வது அப்போ தெல்லாம் சர்வ சாதாரணமானதொரு விடயமாகவே காணப்பட்டது. ஆனால் இவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டனைக்கு உள்ளாக்கப்படாது சுதந்திரமாக உலவுவதைக் காணமுடிகின்றது.

இந்த நிலையில் நாட்டில் நீதியை எவ்வாறு எதிர்பாக்க முடியும்?

தண்டனைகளில் இருந்து தப்பித்து உலவும் கொலைக் குற்றவாளிகள்

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் பிரபலமான தமிழ் அரசியல்வாதியும், புகழ் பூத்த வழக்கறிஞருமான குமார் பொன்னம்ப லம் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். கொலையாளி தொடர்பான விபரங்கள் ஊடகங்களில் அப்போது வெளிவந் தன. ஆனால் அந்தக் கொலைக் குற்றவா ளிக்குத் தண்டனை விதிக்கப்படவில்லை. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பின ரான ரவிராஜ் கொலை வழக்கிலிருந்து கொலைச் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப் பட்டுவிட்டனர். ரவிராஜின் அவலச்சாவுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவேயில்லை. பிரபல ஊடகவியலாளரான லசந்த விக்கிரம துங்க வின் கொலையில் தொடர்புடையவர்களெனச் சிலர் மீது பகிரங்கமாகவே குற்றம் சாட்டப்பட் டபோதிலும், கொலைக் குற்றவாளி கள் தண் டனை பெறுவதிலிருந்து தப்பிவிட்டனர்.

திருமலை மாணவர்களின் படுகொலை, மூதூரில் தொண்டு நிறுவனப் பணியாளர்களின் கொலைகள், தமிழ் ஊடகவியலாளர்கள் சிவராம், நிமலராஜன் ஆகியோரின் கொலைகள், பிரபல சிங்கள ஊடகவி யலாளர் பிரதீத் எக்னலிகொட கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற பல விடயங்க ளுடன் தொடர்புடைய குற்றவாளிகள் சுதந்திரமாகத் திரிவதைக் காண முடிகின்றது.

கொலைக்குப் பதிலாக கூட்டு அரசில் ஊழல்

தற்போதைய அரசின் காலத்தில் கொலைச் சம்பவங் கள் மிகவும் குறைந்து காணப்படுகின்ற போதிலும் ஊழல், மோசடிக் குற்றங்கள் இடம்பெறவே செய்கின் றன. மத்திய வங்கியில் நிகழ்ந்த பிணை முறி மோசடி மிகப் பெரியது. இதன் முதன்மைக் குற்றவாளியான முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் ஏதோவொரு வெளிநாட்டில் தலைமறைவு வாழ்க்கை நடத்திவரு கின்றார்.

இவரைக் கைதுசெய்து நாட்டுக்குக் கொண்டுவருவ தற்கு அரசினால் முடியவில்லை. இதே பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரிடம் 118 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் பெற்றதா கத் தெரிவிக்கப்படுகின்றமை பெரும் அவமானத்துக் குரியது. எந்த வகையிலும் மன்னிக்க முடியாதது. ஆனால் இது தொடர்பாக அரச தலைவர் காத்திரமான நடவடிக்கை எதையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதைவிடபோதைப் பொருள் விற்பனை யுடன்தொடர் புடைய பலர், எவருக்கோ கையூட்டு வழங்கித் தப்பித் துக் கொள்வதையும் காணமுடிகின்றது. இவர்களால் பலர் சீரழிக்கப்படுவதை உரியவர்கள் கவனத்தில் கொள்வதாகவும் தெரியவில்லை. நாட்டில் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் ஆகியவை தாராளமாக இடம்பெற்று வருகின்றன. வடக்கைப் பொறுத்தவரையில் வாள்வெட்டுக் குழுக்களின் அட் டகாசம் பெரும் தலைவலியாகவே அமைந்துள்ளது.

> திருமலை மாணவர்க ளின் படுகொலை, மூதூரில் தொண்டு நிறுவனப் பணியாளர்க ளின் கொலைகள், தமிழ் ஊடகவியலாளர்கள் சிவராம், நிமலராஜன் ஆகியோரின் கொலைகள், பிரபல சிங்கள ஊடகவியலாளர் பிரதீத் எக்னலிகொட கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற பல விடயங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் சுதந்திரமாகத் திரிவதைக் காண முடிகின்றது.

ஆனால் குற்றவாளிகளைக் கைது செய்கின்ற சட வ டிக்கைகள் மந்தகதியிலேயே இடம்பெறுவதைக் காண முடிகின்றது.

இதுவரை காலமும் எதற்கெடுத்தாலும் போரையே காரணமாகக் கூறிவந்தவர்கள், போர் ஓய்ந்த பின் னர் வேறு எதையெதையோ கூறித் தப்பித்துக் கொள் கின்றனர். நாட்டின் தலைமை மந்தமாகச் செயற்ப டும் போது, கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் தமது இஷ் டப்படியே நடந்து கொள்ளச் செய்வார்கள். அவர்க ளைக் கட்டுப்படுத்துவதற்கு எவராலுமே முடியாது. நாடு போகிற போக்கைப் பார்க்கும்போது, குற்றச் செயல்கள் நிறைந்த சில தென்னமரிக்க நாடுகளைப் போன்று இலங்கையும் மாறி விடுமோ என்ற அச்ச மும் ஏழாமலில்லை.

சேரலாதன்

குழப்பத்தை ஏற்படுத்தவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள்

பதவிக்காலம் முடிவடைந்த சகல மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல்களை நடத்துவது தொடர்பாகத் தலைமை அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார். கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பாக ஒரு முடிவை எட்டிய பின்னர், அரச தலைவரைச் சந்தித்து இது தொடர்பாக உரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



குழப்ப நிலைக்குள் தேர்தல்

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறுவது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. கூட்டு அரசில் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வெளிப்படையாகவே முரண்பட்டு நிற்பதைக் காண முடிகின்றது. அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையே கருத்து முரண்பாடு முற்றியதன் பிரதிபலிப்பாகவே இதனை நோக்க முடிகின்றது. பிரதிச் சபாநாயகரைத் தெரிவு செய்தபோது இந்த முரண்பாடு வெளிச்சத்துக்கு வந்து விட்டது. இந்த நிலை தொடருமானால், கூட்டு அரசு நிலைத்து நிற்பதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றே கூற வேண்டும். ஆனால் இந்த முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கான சில முயற்சிகள் இடம் பெறுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எந்தத் தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தல்கள்

புதிய தேர்தல் முறையின் கீழ், உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெற்றதால் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி அமைப்பதில் பல்வேறு சிக்கல்கள் உருவாகின. தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தும் பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியாத நிலைக்குக் கட்சிகள் தள்ளப்பட்டன. வடக்கில் இது தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. உள்ளூராட்சி மன்றங்களில் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்த போதிலும், கூட்டமைப்பினால் தனித்து ஆட்சியை அமைக்க முடியவில்லை. வேறு கட்சிகளின் அனுசரணையுடனேயே ஆட்சியை அமைப்பதற்கு அந்தக் கட்சியால் முடிந்துள்ளது. வடக்கில் மட்டுமல்லாது, நாடு பூராகவும் இதே நிலை காணப்பட்டதால் பழைய தேர்தல் முறையின் கீழ் மாகாணசபைத் தேர்தல்கள் இடம் பெறுமெனத் தற்போது தெரிய வருகின்றது.

மகிந்த ஆதிக்கம் செலுத்த வாய்ப்புகள் இருக்கின்றன

மாகாண சபைத் தேர்தல்கள் தெற்கில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. உள்ளூராட்சித் தேர்தல் போன்று, மாகாணசபைத் தேர்தலிலும், சிறிலங்கா சுதந்திரகட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தனித்தனியே போட்டியிட்டால், மகிந்த தரப்புக்கு ஆதாயம் கிடைக்கவே செய்யும். இதனால் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் ஓர் உடன்பாட்டுக்கு வருவதை அவர்கள் விரும்பவே மாட்டார்கள். இப்போதுள்ள நிலையில் மைத்திரியும், ரணிலும் எதிரிகளாகவே அவர்களது கண்களுக்குத் தென்படுகின்றனர். இவர்கள் ஒற்றுமையாகச் செயற்படுவதையும் அவர்கள் விரும்பப் போவதில்லை.

ஆட்சியைப் பிடிப்பதையே தமது இலட்சியமாகக் கொண்டுள்ள மகிந்த ராஜபக்ச, இப்போது மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்குவதற்கு ஆரம்பித்து விட்டார். தாம் பதவிக்கு வந்தால் தற்போதுள்ள வரிகளை 20 வீதத்தால் குறைக்கப் போவதாக அவர் கூறியுள்ளார். இந்த அறிவிப்பு நாட்டு மக்களைக் கவர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பொருளாதாரச் சுமைகளால் தளர்ந்து போயுள்ள அவர்கள், மகிந்தவின் வாக்குறுதிக்கு முக்கியத்துவம் வழங்கவே விரும்புவார்கள். தேர்தல்களில் இதன் பிரதிபலிப்பை எதிர்பார்க்க முடியும்.

இதேவேளை வடக்கிலும் இம்முறை மாகாணசபைத் தேர்தல் முக்கியத்துவம்பெற்று விளங்கப்போகின்றது. கடந்தமுறைபோன்ற விதத்தில் போட்டி பலமாகவே இருக்கப் போகின்றது. யாழ்.மாநகரசபைக்கான கூட்டமைப்பின் வேட்பாளர் தாமேயென மாவை சேனாதிராசா திட்டவட்டமாகக் கூறி விட்டார். இது தொடர்பாக ஏற்கனவே பல தடவைகள் அவர் தெரிவித்து விட்டார். கடந்த தடவையும் இவர் போட்டியிடுவதாக இருந்த போதிலும் கடைசி நேரத்தில் அவரது இடத்துக்கு சி.வி.விக்னேஸ்வரன் வந்து புகுந்து விட்டார். ஆனால் இம்முறை இவ்வாறெல்லாம் நடக்காதென மாவை உறுதியாகவே கூறிவிட்டார். விக்னேஸ்வரனும் தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் தாம் தேர்தலில் போட்டியிட இருப்பதைச் சூசகமாகத் தெரிவித்து விட்டார். வேறு எவரும் இது தொடர்பாக இதுவரை அறிவித்ததாகத் தெரியவில்லை. கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் ஓரணியில் ஒன்று திரள்வதற்கான சாத்தியம் உள்ளதையும் மறத்துரைக்க முடியாது. விக்னேஸ்வரன் மாவையை எதிர்த்துப் போட்டியிட்டால் கூட்டமைப்புக்கு எதிரானவர்களின் ஆதரவை அவர் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் உள்ளதையும் மறுத்துக் கூற முடியாது.

தகுதியுள்ளவருக்கே பதவி

வடபகுதி மக்களைப் பொறுத்த வரையில் எந்த வகையிலாவது தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வேண்டுமெனவே காத்திருக்கிறார்கள். மாவையாக இருந்தாலென்ன அல்லது விக்னேஸ்வரனாக இருந்தாலென்ன, தமக்குத் தீர்வைப் பெற்றுத் தருபவரே பதவிக்கு வரவேண்டுமென விரும்புகின்றனர். மாவை ஒரு மூத்த அரசியல்வாதி என்பது மட்டுமல்லாது, மிதவாதக் கருத்துக்களையே தற்போது வெளியிட்டு வருகின்றார். ஆனால் விக்னேஸ்வரன் ஒரு இனவாதியாகவே தெற்கில் பார்க்கப்படுகின்றார். அதற்கு ஏற்ற வகையில் அவர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். பிரபாகரனின் இடத்தை நிரப்புவதற்கு அவர் முயற்சிப்பதாகவும் தெற்கில் கூறப்படுகின்றது. இனவாதம் என்பது மிகப்பெரியதொரு சாபக்கேடான விடயமாகும். அதை எவர் கையில் எடுத்தாலும் அதன் பலன் ஒன்றாகத்தான் இருக்கும். விக்னேஸ்வரன் சிலவேளை முதலமைச்சர் பதவியில் அமர்ந்தாலும், மத்திய அரசுடன் சுமுகமானதொரு உறவைக் கொண்டிருப்பாரென எதிர்பார்க்க முடியாது. இதனால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அவரால் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியுமா என்பது சந்தேகத்துக்கு இடமானது. பெரும் நிதியைச் செலவழித்து நடத்தப்படவுள்ள மாகாண சபைத் தேர்தல்களால் மக்களுக்குப் பயனுள்ளதா என்பது சிந்தனைக்கு உரியதொரு விடயமாகும்.

> ஆட்சியைப் பிடிப்பதையே தமது இலட்சியமாகக் கொண்டுள்ள மகிந்த ராஜபக்ச, இப்போது மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கு வதற்கு ஆரம்பித்து விட்டார். தாம் பதவிக்கு வந்தால் தற்போதுள்ள வரிகளை 20 வீதத்தால் குறைக்கப் போவதாக அவர் கூறியுள்ளார். இந்த அறிவிப்பு நாட்டு மக்களைக் கவர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பொருளாதாரச் சுமைகளால் தளர்ந்து போயுள்ள அவர்கள், மகிந்தவின் வாக்குறுதிக்கு முக்கியத்துவம் வழங்கவே விரும்புவார்கள். தேர்தல்களில் இதன் பிரதிபலிப்பை எதிர்பார்க்க முடியும்.

ஆசிரியருக்கான கடிதம்

மதப்போட்டிகளைக் கைவிட்டு ஆன்மிக ஈடேற்றத்துக்காக முயல்வோமே!

எமது நாட்டில் போர் முடிவுக்கு வந்தும், போரால் ஏற்பட்ட உடல் உளக் காயங்கள் இன்னமும் ஆறாது வலியுடன் வாழும் எம்மக்கள் மத்தியிலே புதியதொரு பனிப்போராக சிலைகள் வைப்புக்கள், சிலைகள் உடைப்புகள் ஒருவர் பின்பற்றும் மதத்தை மற்றொருமதத்தவர் நிந்தனை செய்தல், தாங்கள் வணங்குவதே உண்மையான தேவன், ஏனையோர் வணங்குவது சாத்தான்கள் எனப்போதனை செய்தல்போன்ற செயற்பாடுகளை, எம்மைத்திகிலடையச் செய்யும் மதக்கலவரத்துக்கான அபாய அறிவிப்பாகவே கருதவேண்டியுள்ளது. மதவழிபாடுகள் தனித்துவமானவை. எல்லாமதங்களும் அன்பை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொருவரும் தளராத நம்பிக்கையில் ஆண்டவன் மீதான தத்தமது வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். இலங்கை உள்ளிட்ட பலநாடுகளில் மிகப்பெரிய மதக்கலவரங்கள் ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களின் அழிவுக்கு அவை காரணமாகி இருப்பதாக சரித்திரச் சான்றுகள் உள்ளன.

ஒரு சிறுபொறி காட்டுத்தீயாக மாறலாம் என்பது மாஓசேதுங் கினது கருத்து. ஆங்காங்கே சிறிது சிறிதாக நடைபெற்றுவரும் சிலைவைப்புக்களும், உடைப்புகளும் பின்னொருநாளில் மதக் கலவரங்களை உண்டாக்கும் என்பதை சர்வமதப் பேரவைத் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். போர் நெருக்கடியிலிருந்து மீண்ட எம்மக்கள் தொலைந்துபோன தமது வாழ்வைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில், மதப்போட்டிகளும் சிலைவைப்புக்களும் உடைப்புகளும் தேவைதானா?

இவைகள் எல்லாம் என்ன காரணங்களுக்காக செய்யப்படுகின்றன? என்று சிந்திப்பதை விட்டு விட்டு, மதப்பற்றாளர்களை சமாதானப்படுத்துவது மிக முக்கியமான கடமையாகும். அரசியல்வாதிகளை நம்பியிராது மதத்தலைவர்கள் சமூகத்தில் இறங்கி கடமையாற்றுவது இக்காலத்தில் அவசர தேவையான பணியாக இருக்கின்றது என சமாதான விரும்பிகளும் மதப்பற்றாளர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். சர்வமதத் தலைவர்கள் மிக விழிப்புடன் இருந்து உறுதியான மத ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும் என்றும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ந.மரியநாயகம், *கொழும்புத்துறை*

சூழல் நேயத்தை வளப்படுத்துவோம்

ப்ரியமதா பயஸ்

இயற்கையோடு இயற்கையாக வாழ்வோம்

உயிர்ப் பல்வகைமையை எடுத்துக் கொண்டால் அதன் தொடர்ச்சியான இயங்குநிலை என்பது இடைவிலகல் இன்றி அமைய வேண்டும். ஓர் சங்கிலித் தொடரான சுற்றோட்டமாக பின்னூட்டங்களை தந்து அசைவியக்கம் பெறவேண்டும். இந்தச் செயல்நிலைகளில் மாற்றங்கள் கண்டு கொள்ளப்படும் போது மனிதன் உட்பட சூழல் விலங்கினங்கள் அத்தனையுமே இடர்பாடுகளை சந்திக்கின்றன.

சூழல் பேண்தகு நிலையில் மாற்றம் வேண்டும்

இந்தநிலையிலே மனிதன் என்கிற ஆறறிவுடைய சமூக விலங்கு தன்னிலை இழந்து செயலாற்றுவதும் குழலில் பரம்பலடைந்துள்ள ஏனைய உயிரினங்கள் கொண்டுள்ள இயல்பான சமனிலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதும் அதிகரித்த சூழல் அழிவுகளை தந்துகொண்டுள்ளன. இதனை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆம், உலகநாடுகளோடு ஒப்பு நோக்குகின்ற போது இலங்கையில் சூழல் தொடர்பான சிந்தனைவெளியின் அளவீடுகள் பூச்சியமாகவே உள்ளது. சூழல் பாதுகாப்பையும், அது கொண்டுள்ள இயல்புத்தன்மையையும் சிதைப்பதால் நாம் அடைந்த அழிவுகள் தாராளம். இனிவரும் காலங்களில் எதிர் கொள்ளப் போகின்ற அழிவுகளின் ஆரம்பங்களும் இடர்நேர்வுகள் ஏராளம் என்பதையே சுட்டி நிற்கின்றன. சூழலியல் சார்ந்து பல்வேறு விடயங்கள் சீர்திருத்தம் பெற வேண்டிய நிலையில், எமது நாட்டைப் பிரதி நிதித்துவம் செய்கின்ற சூழலியலாளர்கள் மற்றும் சூழல் தொடர்பான காரியங்களை நடைமுறைப்படுத்தி அவற்றைச் செவ்வை பார்க்க வேண்டிய அரச தினைக்களங்கள், அமைச்சுக்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது கவலை தரும் விடயம்.

இலங்கையை பொறுத்தவரையில் கடந்து போன 100 ஆண்டு காலப்பகுதியில் இருந்த வனப்பகுதி தற்போது நூற்றுக்கு 25 வீதமாக குறைவடைந்துள்ளது. சூழல் பாதுகாப்பு தொடர்பில் அரசு கொண்டுள்ள கரிசனையற்ற தன்மையையே இந்த அடைவு வெளிப்படுத்தி நிற்கிறது.

தனித்து அரசியற் சூழலை பயன்கொண்டு தங்கள் குடும்ப நிலையை வருமான ரீதியில் வலுப்படுத்துகின்ற செயற்போக்கை அரசியல்வாதிகள் தவிர்த்திருக்க வேண்டும். ஆட்சி அதிகாரம் என்ற பிடிமானங்களுள் கட்டுண்டு சூழல் படுகொலைகளையும், சூழல் வெறுமைகளையும் உருவாக்கிவிடக் கூடாது. இயற்கை இடர்களில் இருந்தும், காலநிலை மாற்றங்களில் இருந்தும் தப்பிப் பிழைத்து வாழ்வதற்கான அடித்தளங்களையும், கட்டமைப்புகளையும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சூழல் நேயமும் திட்டமிடலும்

மேற்குலக நாடுகள் தமது நாட்டின் சூழல் பாதுகாப்பு தொடர்பில் கொண்டுள்ள கரிசனையை நாம் கொண்டிருக்கவில்லை என்பது சூழல் இயைபாக்கமின்மையின் அடிநிலையை எடுத்துக்காட்டுகிறது. தென் பகுதியில் அண்மைய வருடங்களில் ஏற்பட்ட வெள்ள இடரின் பின்னணி சூழல் அபிவிருத்தியில் காணப்படுகின்ற குறைபாடுகளையே எடுத்தியம்பி நிற்கிறது. திட்டமிடப்படாத அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்கின்ற போது இருந்து வருகின்ற திட்டமிடல் மற்றும் கட்டுமானக் குறைபாடுகள் குறித்து நோக்கத்தக்கவை.

இங்கு வீதி அபிவிருத்திக்கான மூலப் பொருள்களுள் மணல், கற்கள் என்பன இயற்கைச் சூழலில் இருந்தே சூறை யாடப்படுகின்றன. மேற்குலக நாடுகளை எடுத்துக்கொண்டால் இத்தகு வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலங்களை எடுத்துக்கொள்கின்றனர். 'துரித' நிலையில் இருந்து மீண்டு இயற்கையோடு ஒன்றித்து நீண்ட கால திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வோர் இயற்கை வளமும் கொண்டுள்ள சிறப்பியல்புகளை நுணுக்கமாக ஆராய்ந்து அதன் பயன்களைப் பெற்றிட முயற்சிக்க வேண்டும். இயற்கைச் சம நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தாத வளப்பரம்பலையும், வளபாவனையையும் கட்டமைத்துக்கொள்ள வேண்டும்.

செயல் விருத்தி பலம் பெற வேண்டும்

காடழித்தல், குடியிருப்புகளை நிர்மாணித்தல், கட்டடக்காடுகளை வளம்படுத்தல், திட்டமிடப்படாத அபிவிருத்தி செயன்முறை என சூழலை பிறழ்நிலைக்கு உட்படுத்தக்கூடாது. மாறாக மரங்களை நாட்டுதல், அவற்றைப் பராமரித்தல் மற்றும் இயற்கையான காடுகளின் பரம்பல் இயல் அளவை பேணிப் பாதுகாத்தல் என்ற சுற்றாடல் இயல்தகவின் பண்பை அபிவிருத்தியாக வளம்படுத்திக் கொள்ள வேண்டும்.

உலக வரைபடத்தில் ஆசிய நாடுகளை விரிபுபடுத்தி பார்த்தால் அங்கு இலங்கையின் பெரும்பாலான பகுதிகள் மஞ்சள் நிறம் மூலமே காட்டப்படுகின்றன. அதேபோன்று இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள பகுதிகளும் மஞ்சள் நிறமாகவே காட்டப்படுகின்றன. ஏனைய பகுதிகள் பசுமையின் குறியீடான பச்சை நிறம் தரித்தே காணப்படுகின்றன. இந்த நிலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும். பசுமைப் புரட்சி ஏற்பட வேண்டும்.

1800 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் வன இலாகா நிறுவப்பட்டது. அவை தனித்து இலங்கையின் தமிழர் பிராந்தியங்களில் பரந்துள்ள காடுகளில் இருந்து இயற்கை வளங்கள் சூறையாடிக் கொண்டு செல்லப்படுகின்றனவா என்பதையே கண்காணித்து வந்தன. வளங்களைப் பாதுகப்பதற்கான நடவடிக்கைகளை சரிவர மேற்கொண்டதாக தெரியவில்லை. ஆனாலும் பிரித்தானியர்கள் எமது வளங்களை சூறையாடினர். தமது நாட்டை வளப்படுத்தினர். இது மறுக்க முடியாத உண்மை.

அசேதன நூதனங்களில் இருந்து விடுபடுவோம்

இந்த நிலையிலே சூழலியலாளர்கள் இயற்கைவளங்கள் தொடர்பான பரந்துபட்ட அறிவை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சமூக மட்டத்திலும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக பாடத்திட்டங்களிலும் இயற்கை வளங்களின் அத்தியாவசியத் தன்மை குறித்த போதனைகளை வழங்க வேண்டும். அவர்களை குழல் பாதுகாவலர்களாக மாற்றியமைக்க வேண்டும்.

இயற்கை மீது அதீதகரிசனை கொண்ட, இயற்கை நேயம் உடைய சந்ததியை இப்போதிருந்தே உருவாக்க வேண்டும். அடுத்த தலைமுறைக்கு சரியான வாழ்வியலையும், சூழல் நேயம் தொடர்பான விழிப்புணர்வையும் வழங்க வேண்டும்.

ஆக, அசேதனங்களில் இருந்து விடுபட்டு சேதனப் பயிரிடலை நாடி இருப்போம். இயற்கைக்கு மாறான அதிவேக விளைவைத் தரும் விவசாய நடவடிக்கைகள் தருகின்ற பாதகங்களை உணர்ந்துகொள்வோம். இராசயனம் கலந்த அசேதன உணவு உற்பத்திகள் மனிதப் பரம்பலையும், அவர்களது வாழ்வியலையும் சீர்குலைத்து விடும். எம்மிடம் சொற்பமாக உள்ள இயற்கை வளப்பரம்பலையும், அதன் சமநிலையையும் பேணிப் பாதுகாப்பதற்கான பயணங்களை விரைந்து ஆரம்பிப்போம்.



> இயற்கை மீது அதீத கரிசனை கொண்ட, இயற்கை நேயம் உடைய சந்ததியை இப்போதிருந்தே உருவாக்க வேண்டும். அடுத்த தலைமுறைக்கு சரியான வாழ்வியலையும், சூழல் நேயம் தொடர்பான விழிப்புணர்வையும் வழங்க வேண்டும்.

நாளை

22.06.2018

வெள்ளிக்கிழமை

ஆனி 08

திதி: நவமி மு.ப. 07.46 வரை
நட்சத்திரம்: அத்தம் காலை 05.56 வரை
சுபநேரம்: 05.54 – 07.24 வரை
ராகுகாலம்: 10.24 – 11.54 வரை

வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி

பதவி விண்ணப்பம் கோரல்

பதவி

1. முகாமையாளர் (சம்பளகுறியீட்டு இல 115/ 10 நிரந்தரம்)
சம்பளஅளவுத்திட்டம் :- 15305-170 x 10-190 x 10= 18905
பால் :- ஆண்
வெற்றிடம் :- 01

தேவைப்படும் தகைமைகள்

அ. கூட்டுறவு பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்டம் தொடர்புபட்ட துறை பதவியொன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாதஅனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 12வது சம்பளதிட்டம் தொடர்பான வியாபாரப் பதவி யொன்றில் ஆறு (6) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது சமனான தகைமைகள்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி யுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் தொடர்புபட்ட பதவியொன் றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. எழுதுநர் (சம்பள குறியீட்டு இல 302/ 11 நிரந்தரம்)
சம்பள அளவுத்திட்டம் : 14945-145 x 10-160 x 10= 17955
பால் : இரு பாலாரும்
வெற்றிடம் : 01

தேவைப்படும் தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளதிட்டம் கணக்குப் பதிவாளர் /எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13 ஆவது சம்பளத் திட்டம் தொடர்பான பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ ஐக்கியராச்சிய கணக்குபதிவாளர் நிறுவன இடைநிலை பரீட்சை சித்தியிடல் வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்களுடன் தொடர்புபட்ட பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாதஅனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி யுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்களுடன் தொடர்புடையதாக இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

3. காவலாளி (சம்பள குறியீட்டு இல 315/16 நிரந்தரம்)
சம்பளஅளவுத்திட்டம் : 13160-105 x 10-115 x 10= 15360
பால் : ஆண்
வெற்றிடம் : 01

தேவைப்படும் தகைமைகள்

அ. கூட்டுறவு பணியாளர் 17ஆவது சம்பளதிட்டம் பதவியொன்றில் ஒருவருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ. ஐந்தாம் வகுப்பு கல்விசான்றிதழும் நல்லதேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

4. தொழிலாளி (சம்பளகுறியீட்டு இல 318/17நிரந்தரம்)
சம்பளஅளவுத்திட்டம் : 12800-100 x 10-110 x 10= 14900
பால்: ஆண்
வெற்றிடம் : 01

தேவைப்படும் தகைமைகள்

அ. ஐந்தாம் வகுப்பு கல்விச்சான்றிதழும் நல்லதேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

(CS17653/11,17)

பிரதான அறிவுறுத்தல்கள்

01. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத் தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
02. சங்க பணியாளர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.
03. விண்ணப்பதாரி 05.07.2018 திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாதவராலும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய பிரதிகள்
i. கல்வித் தகைமைச் சான்றிதழ் ii. பிறப்பு அத்தாட்சி பத்திரம்
iii. வதிவிடஉறுதிப்பத்திரம். iv. நற்சான்றிதழ் v. தேசியஅடையாளஅட்டை /கடவுச்சீட்டு
05. விண்ணப்பங்கள் சங்கத்தால் இதற்கென அச்சிடப்பட்டுள்ளது. சங்க கடமை நேரத்தில் ரூபா.10 செலுத்தி சங்க பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.
06. தெளிவான எழுத்துக்களில் சரியான விவரங்களுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 05.07.2018 திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாகப் பதிவுத்தபால் மூலமாகக் கீழ் குறிப்பிடப் படும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்
07. இப்பதவி விண்ணப்பம் தொடர்பாக மேலும் விளக்கங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளுங்கள். **0212054883, 0767111168.**

தலைவர்
வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி.

மரண அறிவித்தல்

திருமதி சிவகாமி கணேசானந்தன்

மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமி கணேசானந்தன் நேற்று (20.06.2018)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர் - தங்கமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரி யும் காலஞ்சென்ற கணேசானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவகணநாத னின் அன்புச் சகோதரியும் தெய்வானைப்பிள்ளை, சோதிபிள்ளை, அமராவதி, விசாலாட்சி, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் குணரத்தினம், மகேஸ்வரி, பராசக்தி, காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் ஒன்றுவிட்டசகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2018) வியாழக்கிழமை அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மாரீசன்கூடல் மட்டிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 12640/15/17)

தகவல்: த.குணரத்தினம்

மரண அறிவித்தல்



தோற்றம்
25 . 01 . 1938

மறைவு
19 . 06 . 2018

வாமதேவன் புஸ்பவதி

அளவெட்டி தெற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை தற்கால வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் புஸ்பவதி 19.06.2018 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சௌந்தராஜன் மற்றும்சற்குணம்(குணம்), சறோஜாதேவி(தேவி), இந்திராதேவி (அப்புச்சி), வடிவேலவி (பிள்ளை), நாகேஸ்வரி (குழந்தை), நவரட்ணம் (பெரியாம்பி), லோகேஸ்வரன் (சின்னாம்பி), பரமேஸ்வரன் (உக்குட்டி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs17610)(13,17)

தகவல்:
குடும்பத்தினர்

076 938 2708 / 076 416 9206

சின்னத்தம்பி சுப்பிரமணியம்

வடமராட்சி , கொத்தாண்ட வளவு, கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் 19.06.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் - பொன்னு தம்பதியரின் அன்பு மரு மகனும், குணமணி(குணம்)யின் அன்புக்கணவரும், கதிர்காமநாதன்(ஹொலண்ட்), ஈஸ்வரநாதன் (சுவிஸ்) பவானி, ஜெயநாதன் (ஹொலண்ட்), அருந்ததி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசல்யாதேவி (ஹொலண்ட்), நந்தகுமாரி (சுவிஸ்), சுரேந்திரராஜ், ஷோபர்ணா (ஹொலண்ட்), வேல்முருகன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், பிரவின், விதுர், சுஜீவா, லியாணி, யதுர்சன், பவிஷன், யதுன், அக் ஷயா, மதுசன், ஷரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரசம் தீட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்தாண்டவளவு
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs5135)(13,17)

077 627 9499

ராசி அதிர்ஷ்டம்

திகதி	வெற்றி வாரம்	வர்ணம்
20.06.2018	2316	பச்சை

தனுசு

வெற்றி இலக்கங்கள் 06 16 17 23

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 40, 07, 452/=

2018.06.22ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW வை டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

DLB தேசிய சேமிப்பு CAR PLUS

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வரிசை 63

சீட்டிழுப்பு திகதி 20.06.2018

வெற்றி இலக்கங்கள் 03 26 50 X வெள்ளி

இல்லாத வெற்றியாளர்கள் பத்து இலட்சம் 01 | ஒரு இலட்சம் 14

ஒழுங்கப்பட்ட மொத்த பரிசு 40, 49, 640/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>DL வை டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அடுத்த சீட்டிழுப்பு 2018.06.27 ஆம் திகதி புதன்கிழமை வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

மரண அறிவித்தல்

மலர்வு 23 04 1927

உதிர்வு 18 06 2018

திருமதி.சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை

பூநகரி செட்டியகுறிச்சியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு, கொழும்பு - 44A,அல்பேட் பிளேஸ் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை அவர்கள் 18.06.2018 அன்று திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி, சுப்பிரமணியம், காலஞ்சென்ற தங்கம்மா அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கமலாதேவி, காலஞ்சென்ற கனகரட்ணம், மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும், கனகசிங்கம், காலஞ்சென்ற முத்துலிங்கம், தனலட்சுமி, வன்னியசிங்கம், தவமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பவதி, செல்வநாயகி, வேலாயுதப்பிள்ளை, மஞ்சுளா, ரவீந்திரராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருபன் - றம்மியா, றஜினி - சிவக்குமார், லாலாஜினி – மணிவண்ணன், யமுனா – சிவாகரன், கேதீசன் - கிருபாநிதி, கோகிலவதனி – தயாளன், அபிராமன் - கிரிஜா, பிரதீபா, கணதீபன், லக்சன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சந்தோஸ், சாகித்யன், டிலுக்சியா, அதிஸ், அஜிந்த், சாகித்யா, சர்மிகா, டிஸானி, டெய்சிகா, சோபிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள், 44A,அல்பேட் பிளேஸ், தெகிவளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 24/06/2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணி வரை நடைப்பெற்று தகனத்திற்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

0777482107 , 0715310288 , 077 133 4117,,0114801927.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

பாலசுப்பிரமணியம் மதியழகன்

(வேலணை வடக்கு இலந்தைவனம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா)

அன்னை மடியில் 14.04.1967

ஆண்டவன் அடியில் 02.07.2017

ஆண்டொன்று சென்றதோ
ஆறவில்லை அப்பா!
உங்கள் துயரம்
தூக்கமின்றி எம்மையெல்லாம்
காத்து நின்றீர்கள்
இடையூறு அத்தனையும்
எதிர்த்து நின்றீர்கள்
பேதமற்ற பாசத்தையும் பகிர்ந்து தந்து
ஊக்கமுடன் கல்வியையும் ஊட்டிவிட்டு
நன் மக்களாய் எம்மை வளர்த்து விட்டு
எங்கே தான் நீங்களும் மறைந்தீர்கள்!
வந்தாரை வரவேற்கும் வள்ளலும்
இலந்தைவனம் ஸ்ரீ சித்தி விநாயகரின்
சிறந்த தர்மகர்த்தாவும்

ஊரில் எல்லோருக்கும் நல்ல
நண்பருமான
நீங்கள் சொல்லாமல் கொள்ளாமல்
போனதென்ன!
ஆண்டுகள் எத்தனை வந்து
போனாலும்
உங்கள் பசுமையான
நினைவுகளும்
உருவமும் உயிர் உள்ளவரை
மனதை விட்டு என்றும்
நீங்காது...

குடும்பத்தினர்.
வேலணை வடக்கு,
வேலணை - 05

(CS/17622)(11,17)

மரண அறிவித்தல்

திருமதி சின்னம்மா செல்லத்துரை

பிறப்பு 08.10.1933 இறப்பு 19.06.2018

குப்பிளான் தெற்கு, குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லத்துரை கடந்த (19.06.2018)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி செல்லத்துரையின் அன்பு மனைவியும் யோகமலர் (குப்பிளான்), சிவபாலன் (லண்டன்), ஞானமலர் (பிரான்ஸ்), வசந்தமலர் (குப்பிளான்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சின்னமணி, ஜயாத்துரை, அன்னலட்சுமி மற்றும் சின்னத்துரை (குப்பிளான்), பொன்னுத்துரை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தர்மலிங்கம், கலாவதி (லண்டன்), கனகசபை (பிரான்ஸ்), குமாரலிங்கம் (குப்பிளான்) ஆகியோரின் மாமியும் தர்மகுமார் (ரவி - லண்டன்), உமாபரன் (ரகு - குப்பிளான்), ஜெயந்தினி (இந்து - சுவிஸ்), சுரேஸ்குமார் (புவி - கனடா), மயூரன் (கனடா), சாருகா (லண்டன்), அனுசா (டென்மார்க்), அஜந்தா (பிரான்ஸ்), கேதீஸ் (பிரான்ஸ்), கவி (பிரான்ஸ்), சாதனா (சுவிஸ்), சிவதா (கனடா), சிந்துஜா, சுகன்ஜா, ரவீந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் குப்பிளான், காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(ca 17639/15/17)

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 021 493 1111

உதயன்

மரண அறிவித்தல்

திருமதி சிவயோகம் விஜயரத்தினம்

கல்லூரி வீதி, இளவாலையைச் சேர்ந்த திருமதி சிவயோகம் விஜயரத்தினம் 18.06.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இலட்சுமி தம்பதிகளின் இளைய புதல்வியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இரத்தினம் தம்பதிகளின் மூத்த மருமகளும், விஜயரத்தினத்தின் (பெரியண்ணை) மனைவியும், யோதினி, கஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஸ்ண அபிலாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டிவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை

தகவல்:
குடும்பத்தினர்.

(CS//17632)(11,17)

0771310823

மரண அறிவித்தல்

திருமதி செல்லம்மா சபாபதிப்பிள்ளை

மண்டைதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சபாபதிப்பிள்ளை கடந்த (19.06.2018) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் (முன்னாள் தலைமைப் பூசகர், கண்ணகை அம்மன் கோவில், மண்டைதீவு) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - தங்கம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் கமலாதேவி, காலஞ்சென்ற சந்திரகுமாரன் மற்றும் இரத்தினகுமாரன் (முன்னாள் கிராமசேவையாளர், கனடா), காலஞ்சென்ற லீலாதேவி மற்றும் விஷயகுமாரன் (தலைமைப் பூசகர் - கண்ணகை அம்மன் ஆலயம், மண்டைதீவு), காலஞ்சென்றவர்களான விமலாதேவி, ஜெயக்குமாரன் மற்றும் ஜெயக்குமாரன் (சுவிஸ்), உதயகுமாரன் (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற கனகநாதன் மற்றும் புனிதவதி (கனடா), உதயராணி, காஞ்சனா (சுவிஸ்), சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, நடராசா, சோதிநாதன், சுப்பிரமணியம், சங்குவதி, புனிதவதி, விநாயகமூர்த்தி, தில்லம்மா, கைலாசநாதன், சண்முகரட்ணம் ஆகியோரின் சகோதரியும் செல்லமாணிக்கம் பராசக்தியின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2018) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி, கொக்குவில்.
021 221 2021, 077 494 4301

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 17641/15/17)

'விஜய் 62' படத்தின் தலைப்பு இன்று வெளியீடு



பலரும் எதிர்ப்பார்த்துக் காத்திருக்கும் விஜய்யின் 62 ஆவது படத்தின் தலைப்பு மற்றும் சுவரொட்டி ஆகியன விஜய்யின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று வெளியாகின்றன.

இயக்குநர் ஏ. ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிகர் விஜய் மூன்றாவது முறையாக இணைந்து இந்தப் நடித்து வருகிறார். இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் தயாரித்து வருகிறது. மேலும், ஏ.ஆர். ரகுமான் இசையமைத்து வருகிறார்.

இந்தப் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்துவிட்ட நிலையில், அடுத்த கட்ட படப்பிடிப்புக்காக படக்குழு அமெரிக்கா செல்லவிருக்கிறது. விஜய்யின் 62ஆவது படமாக உருவாகும் இதில், சமகால அரசியல் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரச்சினைகளை அலசியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சிந்திக்க....

தெருவில்குப்பைபோடுகிறவனைமரியாதையாகவும் அதை பொறுக்கி சுத்தம் செய்பவனை கேவலமாக பார்க்கும் சமுதாயம் உள்ளவரை என் நாடு சுத்தம் ஆகாது!!!

ஒரு மெழுகுவர்த்தியின் தியாகத்திற்கு சற்றும் குறைவில்லாதது ஒரு தீக்குச்சியின் சாவு!!

இந்த டாக்டர்கள் வசதி இல்லாதவன பாத்து அது சாப்புடு இது சாப்புடுனு சொல்லுவினம். வசதி இருக்கவன பாத்து எதையும் சாப்பிடாத எண்டு சொல்லுவினம்.!

மொபைல் போனை முதலில் வைத்திருந்தவர்கள் ஆச்சர்யப்படுத்தினார்கள். இப்போது வைத்திருக்காதவர்கள் ஆச்சர்யப்படுத்துகிறார்கள்...!!!

கடவுளுக்கு நீங்களாகவே ஒரு உருவம் கொடுத்து விட்ட படியால்..கடவுள் உங்கள் எதிரில் இருந்தாலும் தெரிவதில்லை

சுடோக்கு

எண் விளையாட்டு

		3		8	5	9		
				9				7
				6	3	8	4	5
2		6						
		8		4		2		
						1		3
4	7	1	8	3				
6				2				
		2	5	1		6		

நேற்றைய விடை

9	7	1	4	6	5	2	8	3
5	2	6	9	8	3	7	1	4
3	4	8	7	1	2	6	9	5
8	9	7	3	4	1	5	6	2
1	3	5	2	9	6	8	4	7
4	6	2	5	7	8	9	3	1
2	8	3	6	5	4	1	7	9
7	1	4	8	2	9	3	5	6
6	5	9	1	3	7	4	2	8

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: மனதில் அமைதி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் பின்பற்று வீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

இடபம்: சிறு செயல் கூட பல மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரம் செழிக்க அர்வமுடன் பணிபுரிவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

மிதுனம்: செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழில்,வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும்.

கடகம்: அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். கூடுதல் முயற்சியினால் தொழில் வியாபார மந்த நிலை சரியாகும். பயன் தராத பொருள் விலைக்கு வாங்க வேண்டாம்.

சிங்கம்: எதிர்பார்த்த செயலில் வெற்றி கிடைக்கும். திட்டமிட்ட உழைப்பால் தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

கன்னி: ரசனையுடன் செயலில் ஈடுபடுவீர்கள். தங்களின் நற்செயலை குடும்பத்தினர் மனமுவந்து பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் சிரமம் விலகும்.

துலாம்: பணிகளை நிறைவேற்ற கூடுதல் முயற்சி தேவைப்படும். நண்பரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். அரசு உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

விருச்சிகம்: திட்டமிட்ட பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கு கூடுதல் மூலதனம் தேவைப்படும். லாபம் சீராகும்.

தனுசு: சமயோசித குணத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். ஆதாயம் அதிகரிக்கும்.

மகரம்: சொந்த உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள தாமதம் படிப்படியாக சீராகும்.

கும்பம்: பெரியவர்களின் சொற்களை மதிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

மீனம்: பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

சேமிக்கும் இன்றைய இடம்

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உண்டு
ஒன்று **காலம்**
இன்னொன்று **மௌனம்..**

தலையில இருந்து வெட்டின முடியும் நாவில இருந்து கொட்டின வார்த்தையையும் திரும்ப ஒட்டவே முடியாது.

'பேஸ்புக்' வராமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவருக்கும் 'கொமன்ட்' பண்ணாமல் இருக்கவேண்டாம்
'லைக்' பண்ணும் நண்பர்களை மறக்க வேண்டாம்
'கொமன்ட்' பண்ணாத நண்பர்களோடு சேர வேண்டாம்
காலை எழுந்தவுடன் 'பேஸ்புக்' பின்பு
மகிழ்ச்சி கொடுக்கும் நல்ல 'வோல் போஸ்ட்''
மாலை முழுதும் 'சட்டிங்' என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா..

கம்பனிக்குப் போனா 'பொஸ்' தொல்ல....

வீட்டுக்கு போனா ரிவில 'பிக் பொஸ்' தொல்ல....

முடியலடா சாமி

காளையன்..@Giri47436512

"நட்ட" மரம் நம் சந்ததியருக்கு "லாபம்" தான்!!...

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு

ஒரு ஊரில் ஒரு பெண்மணி வாழ்ந்து வந்தாள். அவளுக்குப் பலகாலமாக குழந்தைப் பேறு கிட்டவில்லை. இதனால் ஒரு கீரிப்பிள்ளையை மிகுந்த செல்லமாக வளர்த்து வந்தாள். அதனைத் தன் உயிரினும் மேலாகப் போற்றி வந்தாள். சில ஆண்டுகள் கழிந்தது. அவளுக்கு குழந்தை கிடைத்த பின்பும் கீரிப்பிள்ளையிடம் அவளுக்கிருந்த அன்பு குறையவில்லை. தன் குழந்தையிடமும் கீர்ப்பிள்ளையிடமும் சமமான அன்பு பாராட்டி வந்தாள்.

ஒரு நாள் அவள் பக்கத்துக் குளத்துக்கு நீரெடுக்கச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அப்போது கணவனும் வீட்டில் இல்லை. குழந்தையை தொட்டிலிலிட்டு தூங்க வைத்த அவள், கீரிப்பிள்ளையை குழந்தைக்குக் காவலாக வைத்துவிட்டு நீரெடுக்கச் சென்று விட்டாள். அவள் போகும்போது கீரிப்பிள்ளை பிள்ளையின் தொட்டிலருகிலேயே உட்காந்திருந்தது.

அவள் சென்ற சிறிது வேளையில் அந்த வீட்டிற்குள் ஒரு பாம்பு வந்தது. பாம்பு வருவதை அவதானித்த கீரிப்பிள்ளை உஷாரானது. இப்போது பாம்பு மெல்ல மெல்ல குழந்தையின் தொட்டிலருகே வந்து தொட்டிலின் கால்பகுதியால் தொட்டிலுக்குள் செல்ல முயற்சி செய்தது. இன்னும் சற்றுப் பொறுத்திருந்தால் பாம்பு தொட்டிலுக்குள் இறங்கி குழந்தையைக் கடித்திருக்கும். ஆனால் வீர்ரென்று கீரிப்பிள்ளை பாய்ந்து பாம்பின்வால் பகுதியை பிடித்து இழுத்து தொட்டிலிருந்து பாம்பைக் கீழே விழவைத்தது. இந்தத் தாக்குதலைச் சற்றும் எதிர்பாராத பாம்பு கீழே விழுந்தது. கீரிப்பிள்ளை அடுத்த தாக்குதலை மேற்கொண்டது. பாம்புக்கும் கீரிப்பிள்ளைக்கும் கடும் போராட்டம் நடந்து இறுதியில் பாம்பைக் கீரிப்பிள்ளை துண்டு துண்டாகக் கடித்துக் கொன்றது. குழந்தையின் உயிர் தப்பியது. கீரிப்பிள்ளை இப்பொழுதும் பிள்ளையின் தொட்டிலருகிலேயே இருந்தது.

இப்பொழுது வீட்டுக்காரப் பெண்மணி வீட்டு வாசலருகே தண்ணீர்க் குடத்துடன் வருவதைக் கண்டு குழந்தையைக் காப்பாற்றி விட்ட மகிழச்சியில் கீரிப்பிள்ளை அவள் முன்னே ஓடிவந்து நின்றது. ஓடி வந்து நின்ற கீரிப் பிள்ளையை நோக்கிய அவள் அதன் வாய் உடம் பெல்லாம் இரத்தம் படிந்திருந்ததைக் கவனித்தாள். திடுக்கிட்டாள். தன் குழந்தையைத்தான், தான் இல்லாத வேளை பார்த்து கீரிப் பிள்ளை கொன்று விட்டது. என எண்ணிக்கொண்டாள். வந்த ஆத்திரத்தில் கையில் இருந்த நீர் நிறைந்த குடத்தை கீரிப்பிள்ளை யின் தலையில் போட்டாள். பாவம் கீரிப் பிள்ளையின் தலை நீர்க்குடத்தைத் தாங்குமா? அங்கேயே தலை நசுங்கி உயிரை விட்டது. பின்னர் அவள் அவசரமாக ஓடி குழந்தை இருந்த தொட்டிலருகில் நெருங்கினாள். அங்கே குழந்தை தொட்டிலில் நன்கு தூங்கிக் கொண்டிருப்பதையும், தொட்டிலின் அருகில் பாம்பு துண்டு துண்டாக நறுக்கப்பட்டு இறந்து கிடப்பதையும் கண்டாள். உடனடியாக நடந்திருப்பதை ஊகித்துக் கொண்டாள். கீரிப் பிள்ளை செய்திருக்கும் நன்றியை உணர்ந்தாள். அவசரப்பட்டு ஆலோசனை செய்யாமல் கீரிப்பிள்ளையைக் கொன்று விட்டோமே என்று துடி துடித்தாள் அழுது புலம்பினாள்.

அப்போது அங்கே வந்த அவளது கணவன் நடந்திருப்பதை உணர்ந்து கொண்டு அவளைத் தேற்றினான் "எந்தக் காரியத்தையும் யோசித்து நிதானமாகச் செய்ய வேண்டும். உன் அவசர புத்தியால் கீரிப்பிள்ளை இறந்து விட்டது. இனி அழுது பயன் என்ன? கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்து பயன் என்ன? என்று அவளுக்கு இடித்துரைத்தான்.

" கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்; தீர விசாரித்தறிவதே மெய் "

பாட்டு

கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்
அக்கரைக்குச் செல்லவே
ஆட்கள் ஏற்றும் கப்பலாம்
சமான் ஏற்றும் கப்பலாம்
சண்டை செய்யும் கப்பலாம்

கப்பல் தன்னில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்
தூர தேசம் செல்லுமாம்
துறைமுகத்தில் தங்குமாம்.

கலங்கரை விளக்கினால்
கரையைக் கண்டு சேருமாம்





புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்

அறிஞர்கள் சொன்ன அனுபவ மொழிகள்

பத்குஹரி

- கைக்கு அழகு நன்கொடை
- தலைக்கு அழகு சான்றோரை வணங்குதல்
- முகத்துக்கு அழகு உண்மையான சொல்
- தோள்களுக்கு அழகு ஒப்பற்ற பராக்கிரமம்
- மனதுக்கு அழகு நல்லொழுக்கம்
- செவிக்கு அழகு நல்ல சாத்திரங்களைக் கேட்டல்

குருநானக்

- பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை.
- திருப்தியிலும் உயர்ந்த இன்பமில்லை.
- ஆசையிலும் பெரிய தீமையில்லை.
- மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை.

விதுர நீதி

- அளவுக்கு மிஞ்சிய தூக்கம், மயக்கம், தேவையில்லாத பயம், ஆத்திரம், சோம்பல், எதையும் தாமதமாகச் செய்தல் ஆகிய இவை முன்னேற்றப் பாதைக்கு முட்டுக்கட்டைகளாகும்.
- நோயற்ற வாழ்வு, கடன் அற்ற நிலை இவையே பயமற்ற வாழ்க்கை.
- நல்லவரிடம் நட்புக் கொண்டிருத்தலும், சுய புத்தியைக் கொண்டு காரியங்களைத் தீர்மானித்து அதன்படி நடத்தலும் சுகம் தரும் நிலைகளாகும்.

ஒத்த எழுத்துக்களை இணைப்போம்

1. வ	ர
2. ண	ப
3. ந	ன
4. த	ண
5. க	ந
6. ன	வ
7. ர	க
8. ப	த

1. மரத்துக்கு மேலே பறக்கும் பிராணிக்குப் புள்ளடி இடுவோம்
2. மரத்துக்குக் கீழே உள்ள பிராணிக்குக் கோடிடுவோம்



யானையின் துதிக்கை



நிலத்தில் வாழும் பிராணிகளுள் மிகப்பெரியது யானை. இன்று இரு வகையான யானைகள் உள்ளன. ஒன்று ஆபிரிக்க யானை. மற்றையது இந்திய யானை. முன்னதிலும் பார்க்க பின்னையது சிறியது. பெரிய உருவம், தடித்த குறுகிய கால்கள், தந்தங்கள், துதிக்கை என்பவை யானைக்கே உரிய உடலங்கள். காடுகளில் கூட்டம் கூட்டமாக வாழும் யானைகளைப் பழக்கி மனிதன் தனது வேலைகளுக்குப் பயன்படுத்துகிறான். யானையின் உறுப்புகளில் முக்கிய மானது, அதன் துதிக்கை. அதனுடைய உதடும் மூக்கும் ஒன்றே போல நீண்டு உருவான உறுப்பே துதிக்கையாகும். யானை தன் துதிக்கையினால் ஒரு தொன் நிறையைத் தூக்கும் ஆற்றல் கொண்டது. பெரிய மரக் குற்றிகளை வெகு இலேசாகத் தூக்கிவிடுகின்றது. இவ்வளவு பலம் இந்த துதிக்கையில் இருப்பதற்கு காரணம் அதில் 4000 தசை நார்கள் இருப்பதுதான். இத்தனை தசை நார்கள் இருப்பதால் தான் யானையின் துதிக்கை உறுதியானதாகவும் தொய்ந்து கொடுக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளது. யானைதன் துதிக்கையால் சின்னஞ் சிறு உசியையும் துல்லியமாகத் தூக்கி எடுக்கும்.

வெளியேறினாலும்...

கையின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து அமெரிக்கத் தூதுவர் மறைமுகமாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறுவது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், இலங்கையின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையில் நீடித்த சமாதானம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான ஆதரவையையும், அக்கறையையும் அமெரிக்கா தொடர்ந்தும் காண்பிக்கும்.

அமெரிக்காவின் அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை நடைமுறைப்படுத்துவதற்கு, அமெரிக்கா ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் தொடர்ந்தும் வழங்கும் என்று தூதுவர் இதன்போது சுட்டிக்காட்டியதாக, தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(5)

தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணினி அறிவுடையோர் தேவை.

தொடர்பு-077 332 2527

(CS 17643/15/17)

மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 04 . 1942

இறப்பு 19 . 06 . 2018

சின்னத்தம்பி இரத்தினசிங்கம் (செல்லத்துரை)

யாழ்.நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம், இல.489, 6 ஆம் யூனிற்றை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினசிங்கம் (செல்லத்துரை) 19.06.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - குஞ்சாச்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், ஞானசேகரம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் (தேவி) அன்புக் கணவரும், றமணி, பாமினி, நிலாணி, குணதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணேஸ், அருட்செல்வம், சுரேஸ், அர்ச்சனா ஆகியோரின் மாமனாரும், துவாகரன், ராகுலன், செந்தூரன், அபர்ணா, அஸ்மிகா, அட்ஷயா, ரஸ்மி, விஷ்ணுகா, அவனீஸ், அஸ்விதா ஆகியோரின் பேரனும், பராசக்தி மனோன்மணி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, புண்ணியசிங்கம் மற்றும் குமாரி கமலா, காலஞ்சென்ற டில்லிமாவதி மற்றும் கலாவதி கேதீஸ்வரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயபாலன், ஞானரஞ்சன், இரத்தினம், நவரத்தினம், காலஞ்சென்றவர்களான ரவீந்திரநாதன், சண்முகசுந்தரம் மற்றும் யோகேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், இராமநாதன் (ஆறுசந்தி) மற்றும் பொன்னம்பலம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2018) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதபுரம்,
6ஆம் யூனிற், கிளிநொச்சி. (AKN/9270) (11.17)

தகவல்
குடும்பத்தினர்.

077 715 5091 (தேவி)

மரண அறிவித்தல்

விக்கினஜெயம் கேதாஜினி

(மாணவி யா/அராலி இந்துக் கல்லூரி)

அராலி வடக்கு (தேவாலய ஒழுங்கை), வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினஜெயம் கேதாஜினி நேற்று (20.06.2018) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் விக்கினஜெயம் (ஆய்வுகூட உதவியாளர் - வட்டு. இந்துக் கல்லூரி) - ஜெகதீஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகளும் சுபாகர் (பிரயோக விஞ்ஞானகூட ஊழியர் - யாழ். பல்கலைக்கழக வளாகம், வவுனியா), ரெஜீவன், டினேஸ் (மாணவன் - பல்கலைக்கழக கல்லூரி, யாழ்ப்பாணம்), நிக்ஷன், மிதுனன் (மாணவன் - யா/வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தங்கையும் தவசீலன் (நோர்வே), வாசுகி (நோர்வே) ஆகியோரின் பெறாமகளும் சிறிலோகநாதன் பூவிலுறை வாணியின் மருமகளும் ஜெயரூபன் (லண்டன்), சிந்துஜா (லண்டன்), ஜெயமனோகரன் (லண்டன்), ஜெயகரன் (லண்டன்), ஸ்ரெல்லா (லண்டன்), காலஞ்சென்ற ஜெயேந்திரன் ஆகியோரின் அன்பு மருமகளும் ஜெயசாந்தினி (பிரான்ஸ்), ரசிகன் (பிரான்ஸ்) ஜெயபாமினி (பிரான்ஸ்), பிரின்சன் (பிரான்ஸ்), ஜெயரஞ்சினி (பிரான்ஸ்), கென்ஸ்மன் (பிரான்ஸ்), ஜெயராஜினி (ஆஸ்திரேலியா), வெங்கடேஷ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பெறாமகளும் அபர்ணா (நோர்வே), பிரதீப் (நோர்வே) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஜெஃப் ஆர்னோ (பிரான்ஸ்), ரஃப் ஆர்ஷி (பிரான்ஸ்), சாதனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ராவ்சன் (லண்டன்), ஸ்ரெரோ (லண்டன்), ஜெஸ்னிகன் (லண்டன்), அஸ்னிகா (லண்டன்) ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2018) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 743 5270, 021 205 1500

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி வசந்தராணி இளங்கோ

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தராணி இளங்கோ நேற்று (20.06.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - அன்னரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - தங்கபுஸ்பம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இளங்கோவின் அன்பு மனைவியும் பிரதீபனின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான விக்கிரமசிங்கம் (வளர்மதி ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை), Dr. சபாநாயகம், Dr. புஸ்பராணி மற்றும் தவராஜசிங்கம் (கனடா), ஜெயபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பராணி (கனடா), மகேஸ்வரி (ஆஸ்திரேலியா), கமலராணி (கனடா), சியாமளா (கனடா), நந்தினி, கோமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (21.06.2018) வியாழக்கிழமை எஸ். இன்பம் மலர்ச்சாலையில் (மானிப்பாய் வீதி, கோம்பயன்மணல் இந்துமயானம் அருகில்) மு.ப. 10.00 மணியளவில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 10097/13/17)

075 524 9014,
076 738 8958

தகவல்: **பிரதீபன் (மகன்)**
தவராஜசிங்கம் (தேவா - சகோதரர்)

மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 10 . 1950

மறைவு 19 . 06 . 2018

திருமதி மதனராணி அரிச்சந்திரன்

நாயன்மார் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் நல்லூர் ஹரி ஹோட்டல் உரிமையாளரான செல்லத்துரை அரிச்சந்திரனின் அன்பு மனைவியுமான திருமதி மதனராணி அரிச்சந்திரன் கடந்த (19.06.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிதம்பரம் தம்பதிகளின் பாசமிகு மகளும் மதனராஜாவின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் சசிதரன் (ராஜ் - பிரான்ஸ்), சதீசன், ஜெனீசன், றேணுஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுகிர்தா (பிரான்ஸ்), முகுந்தினி, கர்சினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுஜாத்தா மற்றும் ஜெகதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ராஜசுலோசனாவின் மைத்துனியும் ஆரணன் (பிரான்ஸ்), சாமந்தி, சமீனா, நிலோஜனா, சபிஸ்ரா, சாம்பவி, சந்தோஷனா (பிரான்ஸ்), பிபாஷன், பபிலாஸ், அபிஸ்னன், அரிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

111, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
ஹரி ஹோட்டல்
077 990 1340, 077 658 3631

(CS 17642/15/17)

தகவல்: **குடும்பத்தினர்.**
மகன் -சதீசன்
மருமகன் - ஜெகதாஸ்

காயமடைந்தவரை...

உயிரிழந்தார். மரத்தால் வீழ்ந்தவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கண்டி வீதி, அரியாலை யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பொன்னுத்துரை சிங்கராசா (வயது78) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.

முதியவர் ஒருவரை அழைத்து மாமரத்தில் ஏற்றி மாங்காய் பறித்துள்ளார். மரத்தில் ஏறியவர் கை தவறி கீழே வீழ்ந்துள்ளார். அவசரமாக முச்சக்கர வண்டியை அழைத்து மரத்தால் வீழ்ந்தவரை ஏற்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முதியவர் கொண்டு சென்றுள்ளார்.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இருவரும் உரையாடியுள்ளனர். வைத்தியசாலையை அண்மித்தபோது, காயமடைந்தவரும், முதியவரும் மயக்கமடைந்துள்ளனர். முச்சக்கர வண்டிச் சாரதி இருவரையும் வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

மரத்தில் இருந்து வீழ்ந்தவர் மயக்கமுற்ற நிலையில் அவரை அழைத்து வந்த முதியவர் இதய பலவீனத்தினால் ஏக்கத்தின் காரணமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (5,105)

மாகாண...

டுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என்று என்று துறைசார் அமைச்சர் பைசர் முஸ்தபா கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

மாகாணசபைத் தேர்தலை எப்போது, எந்த முறையில் நடத்துவது என்பதில் அரசுக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் கட்சித் தலைவர்கள் சந்திப்பு நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஆயுள் காலம் இந்த ஆண்டுக்குள் நிறைவடையும் 6 மாகாண சபைகளுக்கான தேர்தல் டிசெம்பர் மாதம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடைபெறும் என்று, அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை, பழைய முறையில் (விகிதாசார) மாகாணசபைத் தேர்தல் ஒருபோதும் நடைபெறாது என்றும், இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள், விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

முள்ளிவாய்க்காலில்...

தேகத்தில், வான்படையினர் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு மில்லடிப் பகுதிக்கு அருகில் ஆல மரம் உள்ளது. அந்தப் பிரதேசத்தில் மக்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தமைக்கான தடயங்கள் காணப்படும் இடத்தில் கடந்த 18ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் புதையல்தோண்டும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளமையை பாதுகாப்புப் படையினர் அவதானித்துள்ளனர்.

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டோரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் மூவரும், முல்லைத்தீவு மாவட்டத்தின் வான்படையில் பணியாற்றுபவர்கள் என்று தெரியவந்துள்ளது. படையினர், அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் வான்படையின் உயர் அதிகாரிகளிடம் விசாரணை செய்யதபோது, மூன்று வான்படையினரும் அங்கு பணி நிமித்தமே சென்றதாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று வான் படையினரையும் அவர்களின் உயர் அதிகாரி ஊடாக வாய்மூல வாக்குமூலம் பெறப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை முள்ளிவாய்க்காலில் இதுவரை 30இற்கு மேற்பட்ட இடங்களில் விடுதலைப் புலிகளின் பெறுமதியான பொருள்கள் புதைத்து வைத்துள்ளதாக நம்பப்படும் பிரதேசங்களில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டும், எதுவித பொருள்களும் மீட்கப்படாமல் அவை கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5,ri3)

கூட்டமைப்பு...

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடாக அமெரிக்கா உள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து விலகுவதாக அந்த நாடு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வினவிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அமெரிக்காவின் வெளியேற்றம் எமக்குப் பாதிப்பானது. அவர்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உறுப்பினர்களாக இல்லாவிடினும், அவர்கள் ஊடாக விடயங்களை எப்படிச் செய்விப்பது என்பது தொடர்பில் அமெரிக்காவுடன் நாங்கள் பேச்சு நடத்துவோம். வெளியில் இருந்து எப்படி விடயங்களைக் கையாளாம் என்று ஆராய்வோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தலைமை வகித்து தீர்மானங்களைக் கொண்டு வரும்போது, அதற்கு இரண்டாம் நிலையிலிருந்து தலைமைத்துவம் வழங்கிய பிரிட்டன் (யூ.கே), மொன்டாரியோ, மசிடோனாயா ஆகிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இருக்கின்றன. அந்த நாடுகளுடன் பேச்சு நடத்துவோம்.

இலங்கை விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தலைமை தாங்கி நிறைவேற்றிய தீர்மானத்துக்கு எந்தப் பாதிப்பும் வராது. அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவேண்டியது, அதனைக் கண்காணிக்கவேண்டியது எல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் சபையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருமே.

ஆனால் அழுத்தம் கொடுப்பது, எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலேயே அமெரிக்காவின் தேவை இருக்கின்றது. அமெரிக்கா வெளியேறினாலும், உறுதியாக தலைமைத்துவம் வழங்கக் கூடிய ஏனைய தரப்புக்களுடன் நாங்கள் பேச்சு நடத்த வுள்ளோம். பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் (ஈயு) இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும். மாற்று வழிகளாக இதனை ஆராய்கின்றோம் - என்றார். (5)

தாயை...

கொழும்பு, ஜூன் 21

தாயை நாங்கள் இழந்துவிட்டோம். தந்தையுடன் வாழ்வதற்கு ஆசைப்படுகின்றோம். எங்களின் ஆசையை அரசதலைவர் நிறைவேற்றவேண்டும். எங்கள் தந்தையை விடுவிக்க வேண்டும். இவ்வாறு அரசியல் கைதியான ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் அரச தலைவரிடம் நேற்றுக் கோரிக்கை முன்வைத்தனர்.

அரசியல் கைதியான ஆனந்தசுதாகரை பொதுமன்னிப்பில் விடுவிக்க முடியாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள நிலையிலேயே, ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் கொழும்பில் வைத்து நேற்று இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

நவோதய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கொழும்பு பிறைடன் ஹோட்டலில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஆனந்த சுதாகரின் மகள் தெரிவித்ததாவது, நான் அரச தலைவருக்கும் அவருடைய மகளுக்கும் எமது தந்தையை விடுவிக்க உதவுமாறுகோரி கடிதம் எழுதி அனுப்பி வைத்துள்ளேன். அதில் 'தாயும் இல்லாமல் தந்தையும் இல்லாமல் இந்த வீட்டில் எம்மால் தனிமையில் இருக்க முடியாது. அரச தலைவர் உங்களை தான் நாங்கள் கடவுளாக நினைத்து எமது தந்தையை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம்' என்று குறிப்பிட்டிருந்தோம். எம்மால் இரு கடிதங்கள் அனுப்பப்பட்டும் அதற்கு இது வரையில் பதில் எதுவும் கிடைக்கவில்லை, என்றார்.

மகன் தெரிவித்ததாவது, எமது தாய் இறந்துவிட்டார். தந்தை 10 ஆண்டுகளாக சிறையிலிருக் கின்றார். என்னுடைய நண்பர்கள் அனைவரும் தங்களுடைய தந்தையுடன் வெளியிடங்களுக்கு செல்வதையும், விளையாடுவதையும் பார்க்கும் சந்தர்ப்பங்களில் எமக்கு அது மிகுந்த மன வேதனையை அளிக்கின்றது. எனக்கும் தந்தையுடன் விளையாட அவருடன் வாழ ஆசையாக இருக்கிறது. அரச தலைவர் எங்கள் தந்தையை விடுதலை செய்யுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

ஆனந்தசுதாகரனின் தாய் தெரிவித்ததாவது,

எனது மகன் எந்த குற்றங்களும் செய்யாமல் கட்டாயப்படுத்தப்பட்டு குற்றப்பத்திரிகையில் கைமுத்து பெறப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளார். அவரது நகங்கள் பிடுங்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் அரச தலைவரிடம் கூறியுள்ளதை அறிவோம். இது தவிர எந்த தமிழ் அரசியல் தலைவர்களும் எனது மகனின் விடுதலை பற்றி எந்த முயற்சியும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. எனக்கு பணமோ அல்லது பிள்ளைகளுக்கு புத்தகங்களோ தேவையில்லை. நாம் கேட்டுக் கொள்வது ஒன்று தான். எமது மகன் விடுதலை செய்யப்பட வேண்டும் - என்றார். (5,61)

ஞானசார...

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்றது. அங்கு கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறைத் தண்டனை பெற்றுள்ள ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்குவது சம்பந்தமாக அரச தலைவர் மகா நாயக்க தேரர்களுடன் கலந்துரையாடி வருகின்றார். இதற்கு முன்னரும் பௌத்த தேரர்களுக்கு ஏதிராக வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது. சட்டத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற தீர்ப்பு குறித்து எதுவும் கூற முடியாது.

ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை சிலர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர். அவருக்கு பொது மன்னிப்பு வழங்கினால் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஏனைய பௌத்த தேரர்கள் மற்றும் பிரமத குருமார்களும் பொது மன்னிப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கும் நிலமை ஏற்படும்.

'தேரர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. இதனை தடுக்க அரசிடம் எந்த நடவடிக்கையும் இல்லையா?' என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

'ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அனைவருக்கும் உரிமை இருக்கின்றது. தேரர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்படுவதற்கு ஆர்ப்பாட்டம் செய்வதென்றால், நாட்டின் தலைமை அமைச்சரை துப்பாக்கிச் சூட்டில் கொலைசெய்த தேரருக்கு நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்து சிறையிலடைத்தபோது அன்று யாரும் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. அப்படியாயின் ஏன் இப்போது மாத்திரம் ஆர்ப்பட்டம் செய்யவேண்டும்' என்று ராஜித பதிலளித்தார்.

'ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பில் யாரும் விமர்சிக்கவில்லை. அவரின் காவி உடையை மாற்றி அரைக் காற்சட்டை அணிவித்திருப்பது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?' என்று மீண்டும் கேள்வி எழுப்பப்பட்டது.

'சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகும். நீதிமன்றம் ஒருவரை குற்றவாளி என்று தீர்ப்பளித்தால், சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அந்த நபர் யாராக இருந்தாலும் சிறைச்சாலை திணைக்களம் அரைக் காற்சட்டை அணிவிக்கும். அரசு யாருக்கும் அரை காற்சட்டை அணிவிக்கப்போவதில்லை. சிறைத்தண்டனை அனுபவித்து வரும் 15 தேரர்கள் மற்றும் பிற மதங்களைச் சேர்ந்த 3மதகுருமார்களும் சிறைச்சாலைசீருடையில்தான் இருக்கின்றனர்' என்று ராஜித பதிலளித்தார்.

'ஞானசார தேரருக்கு நீதிமன்றம் அவசரமாக தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கு பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தீர்ப்பளிக்க ஏன் தாமதமடைகின்றது?' என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

'ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான குற்றப்பத்திரங்களை முன்வைக்குமாறு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். அவர் குற்றவாளி என்றால் அவருக்கு எதிராக சட்டம் நிலை நாட்டப்படும். இன்று சட்டம் நிலைநாட்டப்படுகின்றது. சட்டம் நிலைநாட்டப்படாத காலத்தில்தான் இந்தக் கேள்விகளை நீங்கள் கேட்டிருக்கவேண்டும்' என்று ராஜித பதிலளித்தார். (5,61)

மரண அறிவித்தல்

பொன்னுத்துரை சிங்கராஜா

(ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர்- இலங்கை போக்குவரத்துச்சபை)

அரியாலை, மாம்பழம் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிங்கராஜா அவர்கள்நேற்று(20.06.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நல்லம்மா தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

383, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

போராட்டம்...

பொலிஸார் விசாரணைக்கு என்று அழைத்து கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே நேற்று இரவு 9 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் சந்திக்கு அண்மையிலுள்ள சகாயமாத ஆலயத்தின் முன்பாகப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் படுகொலை செய்யப் பட்டான். இந்தச் சம்பவத்தையடுத்து பொலிஸாருக்கும், அந்தப் பகுதி மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. பொதுமக்கள் நீதி கோரி வீதியை மறித்து கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில், அரச பணியாளராக இருந்து கொண்டு போராட்டத்துக்கு தலைமை தாங்கினார் என்ற குற்றச்சாட்டிலேயே மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்தவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பழிவாங்கும் நோக்கிலேயே அவரது கைது இடம்பெற்றுள்ளதாக உறவி னர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (5,26)

கடலட்டை...

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் நேற்று இரவு 10.30 மணி யளவில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த வெளிமா வட்ட மீனவர்கள் 9பேரையும், அவர்களின் 3 படகுகளையும், கட்டைக் காடு மீனவர்கள் இணைந்து கடலில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில் வெளிமாவட்டத்திலிருந்து வந்து தங்கியுள்ள மீனவர்கள், கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டு வருகின்ற னர். கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியைப் பெற்று, சட்டவிரோதமாக வாடி அமைத்து தங்கியிருந்து இந்தத் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக உள்ளூர் மீனவர்களால் குற்றம் சுமத்தப்படுகின்றது.

கடலட்டை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்போது, கடலிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவிலேயே கடலட்டை பிடிப்பில் ஈடுபடலாம். பகல் வேளையிலேயே இதனை முன்னெடுக்கவேண்டும். இந்த நிபந்தனை களை மீறி வெளிமாவட்ட மீனவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்று உள்ளூர் மீனவர்கள் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வந்ததுடன் போராட் டங்களையும் நடத்தியிருந்தனர்.

வழங்கப்பட்ட அனுமதிக்கு மாறாகத் தொழில் செய்யும் மீனவர்கள் கடற் படையினரின் உதவியுடன் கைது செய்யப்படுவார்கள் என்று கடற்தொ ழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் உறுதியளித்திருந்தனர். வெளிமா வட்ட மீனவர்கள் தொடர்ச்சியாக நிபந்தனையை மீறி தொழில் நடவடிக் கையில் ஈடுபட்டு வந்தனர்.

நேற்று இரவும் தொழில் நடவடிக்கைக்கு செல்வதை இரகசியமாக அறிந்த கட்டைக்காடு இளைஞர்கள், மீனவர்கள் கையும் மெய்யுமாக கடலில் வைத்து வெளிமாவட்ட மீனவர்களை வளைத்துப் பிடித்தனர். நேற்று இரவிரவாக அவர்களைக் கரைக்கு கொண்டு வரும் நடவடிக்கை இடம்பெற்றது. (5,26)

கூந்தலைப் பளபளப்பாக்க...

கூந்தல் அதன் தன்மையைப் பொறுத்து வறண்ட கூந்தல், எண்ணெய் பசையு டைய கூந்தல் என்று பிரிக்கப்படுகிறது. ஒருவரின் கூந்தல் எந்தத் தன்மையுடை யது என்பதை அறிந்து அதற்கேற்ப சில வழிமுறைகளை கடைபிடித்தால் பட்டுப் போன்ற பளபளப்பான கூந்தலைப் பெற லாம். வறண்ட மற்றும் எண்ணெய்ப் பசைத் தன்மையுள்ள கூந்தலுக்கான சில வழிமுறைகள்

வறண்ட கூந்தல்

தலையில் எண்ணெய்ச் சுரப்பிகளின் செயல்பாடு குறைவு காரணமாகவே கூந் தல் வறட்சியடைகிறது. மேலும், அதிகமாக சூரிய கதிர்வீச்சிற்கு உட்படுதல், கடின தன் மையுள்ள ஷாம்புகளை அதிகமாக பயன் படுத்துதல் மற்றும் சில இரசாயன சிகிச்சை போன்றவற்றாலும் கூந்தலில் வறட்சித் தன்மை உண்டாகிறது.

வறண்ட கூந்தலுடையவர்கள் ஒலிவ் எண் ணெய் அல்லது பாதாம் எண்ணெயை மிதமாக சூடுபடுத்தி தலையில் தடவி சிறிது நேரம் ஊறவிட்டு தலைக்கு குளிக்க வேண்டும். மேலும் மிதமான தன்மையுடைய ஷாம்புக்களை பயன் படுத்தினால் கூந்தலின் வறட்சித் தன்மை குறையும்.

ஆமணக்கெண்ணெய், கிளிசரின், வினிகர் ஆகிய வற்றை சமஅளவு எடுத்து மிதமான ஷாம்புவுடன் சேர்த்து கலந்து தலையில் தேய்த்து சில நிமிடங்கள் கழித்து குளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால், கூந்தலின் ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.

சிலருக்கு ஷாம்பு போட்டு குளிப்பதாலும் கூந்தல் அதி கப்படியாக வறண்டு காணப்படும். அப்படிபட்டவர்கள் தலைக்கு குளித்த பின் சிறிது பாலை தலையில் தேய்த்து நன்கு அலசிவிட வேண்டும். இவ்வாறு செய்தால் கூந்தல் பட்டுப் போல மின்னும்.

வறட்சியான கூந்தலை உடையவர்கள் ஹேர்டிரை யர் பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது.

எண்ணெய்ப் பசையான கூந்தல்

தலையில் காணப்படும் எண்ணெய் சுரப்பிகள் அதி களவில் சுரப்பதால், கூந்தல் எண்ணெய்ப் பசையு டன் காணப்படு கிறது. கூந்தல் எண்ணெய் தன்மை யுடன் இருப்பதால், தூசு மற்றும் அழுக்கு போன் றவை எளிதில் சேர்ந்து விடும்.

எண்ணெய்ப் பசையான கூந்தல் உடையவர்கள், அடிக்கடி தலைக்குக் குளிப்பதோடு, தலையில் தூசு மற்றும் அழுக்கு போன்றவை சேராமல் பராமரிக்க வேண்டும்.

எண்ணெய்த் தன்மை கூந்தலுடையவர்கள் மரு தாணி அல்லது எலுமிச்சை போன்ற பொருள்கள் கலந்த ஷாம்புக்களாக வாங்கி பயன்படுத்துவது நல் லது.

வேப்பிலைச் சாறுடன் சிறிதளவு தண்ணீர் கலந்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து குளிக்க, தலையில் அதிகப்படியாக காணப்படும் எண் ணெய் பிசுபிசுப்பு நீங்கும். கரட்டை வேகவைத்து மசித்து, தலையில் தேய்த்து சில நிமிடங்கள் கழித்து குளித்தால், எண்ணெய் பசை கட்டுப்படும். மேலும் எண்ணெய்ப் பசை கூந்தலுடையவர்கள் உணவில் எண் ணெய் பதார்த்தங்களை குறைத்துக் கொள்வது நல்லது.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 11 . 1943

இறப்பு 20 . 06 . 2018

இராசையா தங்கராசா (பத்தர்)

யாழ். வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தங்கராசா பத்தர் நேற்று (20.06.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - முத்தம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா - செல்வரத்தினம் தம்பதி களின் மருமகனும் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் குமுதா (டென் மார்க்), வனஜா, பவன் (ராயு -பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்ல மாறன் (டென்மார்க்), நேசராசா, தியாகினி ஆகியோரின் மாமனாரும் சௌஜனா, சௌமியா, சானுஜா, நிவேதன், சோபனா ஆகியோரின் அன்புப் பேரனும் யோகராசாவின் அன்புச் சகோதரனும் புஸ்பராணியின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.06.2018) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 10097/15/17)

மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 08 . 1932

மறைவு 19 . 06 . 2018

திருமதி அன்னலட்சுமி ஆறுமுகம்

சாவகச்சேரி, சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி ஆறுமுகம் கடந்த (19.06.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - சின்னாச்சி தம்பதிகளின் மரு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் மங்கையற்கரசி, வல்லிபுரநாதன், பரிமளா, சியாமளாதேவி, இதயநாதன், சுதர்சினி, காலஞ்சென்ற சத்திய நாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரபாபு, தவராசா, தயாபரன், ராஜேந்திரகுமார், மீலா, கம்சிகா ஆகியோரின் மாமியாரும் கௌதமி, விவேக், விஷ்ணு, மாதவன், கிருஷ்ணன், சியாமன், ராதேஷா, பார்த்தீபன், சத்தியா, லக்சுமி, துளசி, தேவகி, யாதவ், யானவி, யாத்ரா, வைஷ்ணவி, பிரணவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

சப்பச்சி மாவடி, சாவகச்சேரி.
076 892 6577

தகவல்:
குடும்பத்தினர்.

கிளிநொச்சி மகா வித்தி. ரென்னிஸில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய ரென்னிஸ் தொடரில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் கிண்ணம் வென்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ரென்னிஸ் திடலில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சிம்சோனை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் கஜலக்ஸ்மணன் மோதினார். சிம்சோன் 6:3, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றார். பற்றிக்ஸ் 1:0 என்று முன்னிலை பெற்றது.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த லிந்துயனை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த யுவன் மோதினர். லிந்துயன் முதலாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய போதிலும் அடுத்த இரண்டு செற்களையும் முறையே 6:4, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் யுவன்.

ஒற்றையர் ஆட்டங்களின் முடிவில் இரண்டு அணிகளும் 1:1 என்ற நிலையில் இருந்ததால் இரட்டையர் ஆட்டத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சென். பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து சுதர்சன், நிலக்சன் இணையும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்து சிறிமதுரங்கன், தனுசன் இணையும் விளையாடின. 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிளிநொச்சி மகா வித்தியாலய இணை வெற்றிபெற்றதை அடுத்து அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம-23)

சென். யூட் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 21

மன்னார் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு சென். யூட் அணி கிண்ணம் வென்றது.

அந்தோனியார்புரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஜோசவாஸ் நகர் ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதல்பாதி ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் எது விதகோல்களையும் பதிவுசெய்யவில்லை. இரண்டாம் பாதியில் சென். யூட் அணியின் வீரர் கோபி இரண்டு கோல்களைப் பதிவுசெய்தார். இதையடுத்து 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். யூட். (ம-23)

இன்றைய மோதல்கள

யாழ்ப்பாணம், ஜூன் 21

நக்கீரன் ச.ச.நி. கால்பந்தாட்டம்

நக்கீரன் சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளை யாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

வடக்கு – கிழக்கு கால்பந்துத் தொடர்

வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை எவ்.சி. அணியை எதிர்த்து நோதன் எலைட்ஸ் அணி மோதவுள்ளது.

(ம-23)

வேம்படி பெண்கள் தேசியச் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 17 வயதுக்குட்பட்ட 'சி' பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி கிண்ணம் வென்றது.

கண்டி சென். அன்ரனிஸ் மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கண்டி சென். அன்ரனிஸ் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது.

நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால்பாதியில் 15:05 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. இரண்டாவது கால்பாதி 19:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கண்டி சென். அன்ரனிஸ் மகளிர் கல்லூரியிடம் சென்றது. முதல் பாதியின் முடிவில் 31:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி முன்னிலை வகித்தது.

மூன்றாம் கால்பாதியில் 18:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது வேம்படி பெண்கள் அணி. நான்காவது கால்பாதியும் 17:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வேம்படியிடம் சென்றதை அடுத்து 66:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. (ம-23)

முருங்கன் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. (ம-213)

வென்றது முல்லை பீனிக்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் முல்லை பீனிக்ஸ் அணி தனது முதலாவது வெற்றியைப் பதிவுசெய்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முல்லை பீனிக்ஸ் அணியை எதிர்த்து மாதோட்டம் எவ்.சி. அணி மோதியது.

ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் முல்லை பீனிக்ஸ் அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் றொசான். மேலதிக மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 86ஆவது நிமிடத்தில் கீதன் மற்றொரு கோலைப் பதிவு செய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது முல்லை பீனிக்ஸ். (ம-23)

பந்தைச் சேதப்படுத்தினார் சந்திமல் ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவர் சந்திமல் பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டார். இதையடுத்து அவருக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஓர் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடத் தடை விதித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இந்த ஆட்டம் கடந்த 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெற்றது. ஆட்டத்தின் இரண்டாம் நாளில் இலங்கை வீரர்கள் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது. ஆனால் இலங்கை அணியின் வீரர்களோ அல்லது இலங்கை கிரிக்கெட் அணியின் அதிகாரிகளோ இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. அதிலும் தம்மீது பொய் குற்றச்சாட்டு சுமத்தப்படுவதாகத் தெரிவித்து ஆட்டத்தின் மூன்றாம் நாளின்போது சுமார் இரண்டு மணிநேரம் களத்தடுப்பைப் புறக்கணித்தனர் இலங்கை அணியின் வீரர்கள். இந்த நிலையில் ஆட்டம் முடிந்த பின்னர் சந்திமலிடம் நடத்திய விசாரணையின் போது அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார் என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.



"முதலில் தன் மீதான குற்றச்சாட்டை சந்திமல் நிராகரித்தார். பின்னர் சந்திமல் பந்தைச் சேதப்படுத்தும் காணொலியைக் காட்டியதும் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டார்" என்று ஐ.சி.சி. குறிப்பிட்டுள்ளது.

ஆனால், ஆரம்பத்தில் தங்களின் அணி வீரர்கள் எந்தவிதமான தவறிலும் ஈடுபடமாட்டார்கள் என்று வீராப்புப் பேசிய இலங்கை அணி நிர்வாகம் தற்போது, வேறுமாதிரியாகப் பேசுகிறது. அதாவது "ஆட்டம் தொடங்கும் 10 நிமிடங்களுக்கு முன் வந்து பந்தை சேதப்படுத்திவிட்டதாக நடுவர்கள் எங்களிடம் முறைப்பாடு தெரிவித்தனர். இதை ஏற்க முடியாது" எனத் தெரிவித்தனர்.

ஆனால், இலங்கை கிரிக்கெட் சபை இது குறித்து எந்த விதமான கருத்தும் இதுவரை தெரிவிக்கவில்லை. இந்தத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்ய சந்திமலுக்கு 48 மணிநேரம் அவகாசம் இருக்கிறது. ஆனால், குற்றச்சாட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில், சந்திமல், பயிற்சியாளர், அணி மேலாளர் ஆகியோர் மீது இலங்கை கிரிக்கெட் சபை கடும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கையின் கிரிக்கெட் மதிப்பை, மாண்பை கெடுக்கும் வகையில் செயற்பட்ட சந்திமல் ஜூலை மாதம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முழுவதும் நீக்கப்படலாம், ஒருநாள் தொடரில் இருந்தும் நீக்க ஆலோசித்து வரப்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன.

முன்னதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர் இருவரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தியமைக்காக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தலா ஒவ்வொரு வருடம் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

பெய்ன் 'பெய்ன்'

இங்கிலாந்தின் காட்டடியால் உச்சக்கட்ட கலக்கத்தையும், கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிம் பெய்ன்.

ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பெய்ன், "மிகவும் கடினமான நாள். கடந்த ஆட்டத்தில் 25ஆவது பந்துப்பரிமாற்றத்தில் தலையில் அடிவாங்கினேன் அதனால் தலைவலி ஏற்பட்டது, ஆனால் இப்போது வந்திருப்பது உண்மையான தலைவலி. நான் குழந்தைப்பருவம் முதல் கிரிக்கெட் ஆடுகிறேன், ஆனால் இப்படியொரு அதிரடியை இதுவரை கண்டதில்லை. நாங்கள் தொட்டது ஒன்று கூட துலங்கவில்லை, அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கியது" என்று பெய்ன் மேலும் தெரிவித்தார்.

(ம)

வீரர்களின் ஏலம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 21

கிறாஸ்கொப்பர்ஸ் பிறீமீயர் லீக் தொடர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அடுத்த மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான வீரர்களின் ஏலம் ரில்கோ விருந்தினர் விடுதியில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-23)

வென்றது ரஷ்யா

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டமொன்றில் ரஷ்யா வெற்றிபெற்றது.

ரஷ்யாவை எதிர்த்து எகிப்து மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் ரஷ்யா அபார வெற்றிபெற்றது. (ம)

481 ஓட்டங்களை வாரியிறைத்து ஆஸியைத் துவைத்தது இங்கி.

ஒருநாள் ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்த அணி என்கிற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது இங்கிலாந்து. அதுவும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பெய்ன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். அவர் எந்த நேரத்தில் இப்படியான ஒரு தீர்மானத்தை எடுத்தாரோ தெரியவில்லை. இங்கிலாந்தின் காட்டடியில் சிக்கிக் கொண்டது ஆஸ்திரேலியா. களத்தடுப்பாளர்கள் மைதானமெங்கும் ஓடியோடிக் களைத்துப் போய்விட்டனர். இந்த ஓட்டத்தை வீதியில் ஓடியிருந்தால் ஆஸ்திரேலியாவுக்கே சென்றிருக்கலாம். அடியென்றால் அடி அப்படியொரு அடி.

நோய் அரைச்சதம் கடக்க பரிஸ்ரௌவ், கேல்ஸ் சதம் கடக்க, மோர்கன் அரைச்சதம் விளாச முடிவில் 6 இலக்குகளை இழந்து 481 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி வெறும் 239 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 242 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து.

ஒருநாள் ஆட்டங்களில் இந்தப் பெரியதொரு தோல்வியை ஆஸ்திரேலியா சந்திப்பது இதுவே முதல் முறை.

(ம)

ரொனால்டோ மீண்டும் அதிரடி!

மொராக்கோவை வென்றது போர்த்துக்கல்

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் ரொனால்டோவின் அதிரடியால் வென்றது போர்த்துக்கல்.

ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. பெபெ மூலையில் இருந்து உதைத்த பந்தை தலையால் முட்டி கோலாக மாற்றியிருந்தார் ரொனால்டோ. பதில்கோலைப் பதிவுசெய்ய மொராக்கோ பலமுறை முயன்றது. பதின்ம நிமிடங்கள் முடிவடைவதற்குள்ளேயே அந்த அணி மொத்தம் ஏழு கோல் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. எனினும் எதுவும் பயனளிக்கவில்லை. போர்த்துக்கலின் கோல் கணக்கை உயர்த்துவதற்காக ரொனால்டோ எடுத்த முயற்சிகளின் போதெல்லாம் அவர் முறையற்ற விதத்தில் நிலத்தில் வீழ்த்தப் தப்பட்டார். முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது போர்த்துக்கல்.

இரண்டாம் பாதியில் இரண்டு அணிகளும் பந்தை துரித கதியில் மாறிமாறி எடுத்துவந்த போதிலும் மாற்றங்கள் நிகழவில்லை. இரண்டாம் பாதியில் மட்டும் மொராக்கோவுக்கு நான்கு 'பிரீ கிக்' கிடைத்தது. எனினும் போர்த்துக்கலுக்குப் பதிலடியை அந்த அணியால் கொடுக்க இயலவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது போர்த்துக்கல்.

உலகக்கிண்ணக் கால்பந்தாட்ட வரலாற்றை எடுத்துக்கொண்டால்போர்த்துக்கல் மொராக்கோ அணிகள் நேற்று இரண்டாவது தடவையாக மோதியுள்ளன. இறுதியாக 1986ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில் 3:1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை மொராக்கோ வீழ்த்தியது. சுமார் மூன்று தசாப்தத்துக்குப்பின்னர் பழிதீர்த்துக் கொண்டது போர்த்துக்கல்.

ஈரான் அணிக்கு எதிரான ஆட்டத்தைத் தொடர்ந்து போர்த்துக்கல் அணியிடமும் தோல்வியடைந்ததை அடுத்து தொடரில் இருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டது மொராக்கோ. (ம)

Tharanees Motors
கிளிநொச்சியில்
நீங்களி கொளிவனவு செய்யும்
BAJAJ
உதிரிப்பாகங்களுக்கு
20%
விசேட விலைக்கழிவு
T.P: 077 4592 429, 021 228 0053

3 நிமிடங்களில் 6 தடவைகள் வீழ்த்தப்பட்டார் ரொனால்டோ

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோவின் மீதுதான் மொராக்கோ அணியின் முழுக் கவனமும் குவிந்திருந்தது. அவரை முறையற்ற விதத்தில் வீழ்த்தி ரொனால்டோவினதும் போர்த்துக்கலினதும் வேகத்தைக் கட்டுப்படுத்துவதிலேயே மொராக்கோ அணியின் வீரர்கள் மூச்சாக ஈடுபட்டனர்.

ஆட்டம் ஆரம்பித்த முதலேயே ரொனால்டோ மீது மொராக்கோ வீரர்கள் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் ரொனால்டோ கோலைப் பதிவுசெய்ததைத் தொடர்ந்து ரொனால்டோ மீதான மொராக்கோவின் கவனம் பலமடங்கு அதிகரித்தது.

முதல் பாதியில் இடைப்பட்ட 3 நிமிடங்களில் 6 தடவைகள் ரொனால்டோ வீழ்த்தப்பட்டமை பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. போர்த்துக்கல் அணியின் வீரர்களும் அவ்வப்போது சில முறையற்ற ஆட்டங்களைக்கைக்கொள்ளவே செய்தனர். எனினும் மொராக்கோ அணியின் வீரர்கள் வெளிப்படுத்திய அளவுக்கு மோசமானதாக அது அமையவில்லை. (ம)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS

45 ஆம் நாள் நினைவு தின அழைப்பு

பிறப்பு 28.02.1977 இறப்பு 08.05.2018

கடந்த 08.05.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கு

அமரர்

கவிதா ஜெயசீலன்

(ஆசிரியர் – யாழ்/ கொக்குவில் இந்துக் கல்லூரி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (21.06.2018) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல. 16/1, அரசடி அம்மன் வீதி, நீருசெல்வேலி.

(CS/17628)(11,17)

குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.